
கோகுலம்

GOKULAM

மார்ச் '94 ரூ. 3.00





ஏறி நின்று பார்க்கிறாய்!
என்ன செய்யப் போகிறாய்?



கோகுலம்

மலர் : 12 இதழ் 2
1994 மார்ச்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

சென்ற இதழில் வெளியான பகுதிகளைப் பாராட்டிப் பல கடிதங்கள் வந்துள்ளன. கோகுலத்திற்கு பன்னிரண்டு வயது நிறைந்ததை ஒட்டியும் ஏராளமானோர் வாழ்த்து அனுப்பியிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் இதன் வாயிலாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கோகுலத்தின் இந்த வளர்ச்சிக்குக் காரணம் உங்களுடைய பேராதரவும் அன்பும்தான் என்பதைப் பணிவோடு கூறிக் கொள்கிறேன்.

'நாங்கள் எழுத விரும்புகிறோம். எங்கள் படைப்பு கோகுலத்தில் வெளிவர வேண்டும். இதற்கு ஏதாவது வழிகாட்டுங்கள்' என்று தொடர்ந்து பலர் கடிதம் எழுதி வருகிறார்கள். பெற்றோர்கள் சிலரும் கூட, ''எங்கள் குழந்தைகளின் எழுத்தும் பெயரும் கோகுலத்தில் வெளிவர வேண்டும். இதற்கு ஏதாவது வழிகூறுங்கள்'' என்று கேட்டு வருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் உதவக்கூடிய வகையில் வரும் இதழ்களில் சில குறிப்புகளை வெளியிடத் திட்டமிட்டு வருகிறேன்.

பரீட்சை என்றாலே பயந்து, முகம் வெளிறி, நடுங்கும் பல மாணவர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்தப் பயத்திற்கு முக்கிய காரணம் திட்டமிடாமைதான். இது பற்றிய ஒரு கருத்துக் கோவை இந்த இதழில் வெளியாகியுள்ளது. இதை அவசியம் படியுங்கள். உங்களுடைய 'படிப்புப் பிரச்னை'க்கு இது பெரிதும் உதவும்.

கோடை விடுமுறை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சிறப்புப் போட்டிகள் வழக்கம் போல் கண்டிப்பாக இருக்கும். அதோடு, போற்றிப் பாதுகாக்க வேண்டிய அளவுக்கு பயனுள்ள சில பகுதிகளும் இதில் இடம்பெறப் போகின்றன என்பதையும் இப்பொழுதே சொல்லி வைக்கிறேன்.

முஸ்லீம் வாசகர்கள் அனைவருக்கும் இனிய ஈத் பெருநாள் வாழ்த்துகள்.

உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் கோகுலத்தை அறிமுகப்படுத்தி, காசு கொடுத்து வாங்கிப் படிக்க வையுங்கள்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

உயிர்களிடத்தில்
அன்பு வேணும்
- தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்

அன்புடன்

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)









கோகுலம்


1994 மார்ச்
இந்த இதழில்







என்னைப் புகைப்படம் எடுத்தார்கள்!



''என்னைப் புகைப்படம் எடுத்தார்கள்'' பகுதிக்கு நீங்களும் எழுதலாம் என்று கூறியிருந்ததை ஒட்டி, ஏராளமான தம்பி தங்கைகள் தாங்கள் புகைப்படம் எடுத்துக் கொண்ட சுவையான அனுபவங்களை எழுதியுள்ளார்கள். பலரிடம் புகைப் படம் கேட்டிருக்கிறோம். புகைப்படம் கிடைத்த சிலவற்றை இங்கே வெளியிட்டுள்ளோம். இந்தப் பகுதிக்கு இன்னும் எழுதாதவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் எழுதலாம். ஒரு 'இன்லேண்ட்' லெட்டரில், உங்களைப் புகைப் படம் எடுத்த அனுபவத்தை எழுதி அனுப்பினால் போதுமானது. மேலே ''என்னைப் புகைப்படம் எடுத்தார்கள் பகுதி'' என்று குறிப்பிடவும். புகைப் படத்தை நாங்கள் கேட்காது அனுப்ப வேண்டாம். உங்கள் புகைப் படமும் இந்தப் பகுதியில் இடம் பெற வேண்டாமா? இன்றே முயலுங்களேன்.

பொடியன்! உன்னால் எப்படி முடியும்?

அன்று திங்கள் கிழமை. நான் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தேன்.

ஒரு வீட்டு வாசலில் ஏகக் கூட்டம். சென்று பார்த்தேன். ஒரு பெண்மணி அழுது கொண்டிருந்தாள். அந்தப் பெண்மணியின் கணவர் ஆபரேஷனுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்றும், அவசரமாகப் பணம் தேவைப்பட்டதால் கணவனை ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டு, வீட்டுக்கு வந்திருக்கிறார் என்றும், பூட்டைத் திறக்க முயற்சித்த போது சாவி தவறிப் போய் உள்ளே விழுந்து விட்டதாகவும் கூறினார்கள். பெண்மணியின் அனுமதி பெற்று, சிலர் பூட்டை உடைக்க முயன்று கொண்டிருந்தார்கள்.

''சிறிது பொறுங்கள். பூட்டை உடைக்க வேண்டாம். நானும் முயன்று பார்க்கிறேன்'' என்று கேட்டேன்.

''பெரியவங்க நாங்க இத்தனை பேர் முயன்றிருக்கிறோம். முடியலே. பொடியன் நீ! உன்னால எப்படி முடியும்?'' என்று பலர் எதிர்க் கேள்வி போட்டார்கள்.

நான் பொருட்படுத்தவில்லை. கையில் இருந்த 'பாக்கெட்' மணியைக் கொண்டு, அருகே இருந்த 'ரேடியோ ரிப்பேர்' கடையில் ஒரு மெல்லிய காந்தத் துண்டை வாங்கினேன். கெட்டியான நூலில் அதைக் கட்டி, கதவிடுக்கு வழியாக உள்ளே தள்ளினேன். இழுத்தேன். பலமுறை இப்படிச் செய்தேன். பொறுமையைச் சோதித்த பிறகு அந்தப் பொல்லாத சாவி, காந்தத் துண்டில் ஒட்டிக் கொண்டது. வெளியே இழுக்க கயிற்றுடன் வெளியே வந்து விட்டது!

கிண்டல் பண்ணி, என் உற்சாகத்தைக் குறைத்தவங்க அத்தனை பேரும் என்னைப் பாராட்டினார்கள்.

பத்து நாள் கழித்து, அந்தப் பெண்மணி, குணமான தன் கணவரையும் அழைத்துக் கொண்டு எங்கள் வீட்டுக்கு வந்தார். என்னைத் தன் கணவ



ருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர் என்னைப் பாராட்டியதோடு, என்னைத் தனியாக ஒரு போட்டோ எடுத்து, எனக்கும் ஒரு 'காப்பி' கொடுத்தார். அந்தப் பெருமைமிக்க நாளை என்னால் மறக்கவே முடியாது.

- இராம. ஜெயகாந்தன், துத்திப்பட்டு.

போட்டோ கிடைக்கவில்லை!

ஏழாம் வகுப்பு முழு ஆண்டுத் தேர்வு விடுமுறையின் போது என் அம்மா, ''கோலப் போட்டியில் கலந்து கொள்கிறாயா?'' என்று என்னை திடீரென்று கேட்டார்கள். நானும், ''சரிம்மா, எங்க நடக்குது?'' என்று கேட்டேன்.

''நங்கநல்லூர் சிவன் கோவிலில் நடக்குது'' என்று அம்மா சொன்னாங்க.

அம்மாவோடு கிளம்பி விட்டேன். கோவிலுக்குச் சென்று டிக்கெட் (டோக்கன்) வாங்கிக் கொண்டேன். எனக்கு 38-ஆம் நம்பர். அம்பாள் சந்நிதிக்குப் பக்கத்தில் கோலம் போட எனக்கு இடம் ஒதுக்கினார்கள். நான் கவனமாகப் பெருக்கி, தண்ணீர் தெளித்து காய்ந்தவுடன் ''கை குட்டை'' வைத்துத் துடைத்து பிறகு கவனமாகப் புள்ளி வைக்க ஆரம்பித்தேன். வீட்டில் நிறையப் போட்டுப் பழக்கம். ஆதலால் சீக்கிரமே புள்ளி வைத்து முடித்து விட்டேன். ஆறு மயில்கள் சுற்றி இருப்பது போலவும், நடுவில் ஒரு மலர் இருப்பது போலவும் போட்டேன். கோலம் அழகாக அமைந்தது. கலர் கொடுத்தால் நன்றாக இருக்கும் என நினைத்தேன். என் அம்மாவிடம் கேட்டேன். கலர்ப் பொடி கொண்டு வரலையே என்று கைவிரித்தார்கள். எனக்கு ஏமாற்றமாக இருந்தது. 'வேறு யாரிடமாவது கேட்கலாம்' என்று முயன்றேன். பக்கத்தில் இருந்த ஒரு பெண்மணிதான் போட்ட பிறகு தருவதாகக் கூறினார்கள். கடைசியில் தந்து உதவினார்கள்.

இப்படி நீலக் கலரும், ரோஸ் கலரும் கிடைத்தது. நீலக் கலர் நிறைய இருந்ததால், அதை மயிலுக்குப் போட்டேன். ரோஸ் கலரை பூவுக்குப் போட்டேன். அழகாக இருந்தது. நான் உட்பட எல்லோரையும் கோலத்தோடு நிற்க வைத்து கலர் ஃபோட்டோ எடுத்தார்கள். நான் உயரமாக இருந்ததால் கால் மட்டுமே வந்திருக்கும் என்று நினைத்தேன். ஆனால் எனக்கும் சரி, எனக்குத் தெரிந்தவர்களுக்கும் சரி அந்த ஃபோட்டோ கடைசி வரை கிடைக்கவே இல்லை.

எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. ஏன் தெரியுமா? எனக்கு அதில் மூன்றாம் பரிசு கிடைத்தது. பரிசு வாங்கிய போது எடுத்த ஃபோட்டோ தான் இருக்கிறதே!

- ஞா. அனிதா, சென்னை - 27.

எனக்குத் தலைகால் புரியவில்லை!

எங்கள் குடியிருப்பில் குடியிருப்போர் நலனுக்கென்று ஒரு சங்கம் இருக்கிறது. இந்த சங்கத்தின் சார்பில் ஆண்டுதோறும் விழாக்கள் நடைபெறும். குறிப்பாக, குடியரசு, சுதந்திர தின விழாக்கள். சிறுவர்க்காக கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி வைப்பார்கள். விழா அன்று பரிசு தருவார்கள். நான் வருஷம் தவறாது கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்வேன். ஆனால் பரிசென்னவோ வராது. நமக்குத் திறமை போதவில்லை. நம்மை விடச் சிறப்பாக எழுதியவர்களுக்குப் பரிசு தருகிறார்கள் என்று மனத்தைத் தேற்றிக் கொள்வேன். இருப்பினும் வருடம் தவறாமல் ஆர்வமாகக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்வேன்.

சென்ற (1993) ஆண்டு சுதந்திர தினத்தை ஒட்டி போட்டி நடத்தினார்கள். வழக்கம் போல இந்தத் தடவையும் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டேன். சுதந் திர தினத்திற்கு ஐந்து நாள் முன்பாகவே போட்டி களை நடத்தி விடுவார்கள். ஆனால் முடிவுகளை சுதந்திர தினத்தன்றுதான் அறிவிப்பார்கள். விழா விற்குத் தலைமைதாங்குபவர் பரிசு வழங்குவார்.

சுதந்திரதினமும் வந்தது! நானும் 'காத்தே' இல்லாமல் எனக்குப் பரிசு கிடைக்காது என்ற முடிவுடன், விழா மேடைக்கருகே சென்று நண்பர்களுடன் உட்கார்ந்தேன். அன்றைய விழாவிற்குத் தலைமைதாங்கியது யார் தெரியுமா? எங்கள் திருவொற்றியூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர்.

எம். எல். ஏ. அவர்கள் வந்தார்கள். ஒவ்வொரு போட்டியின் முடிவையும் அமைப்பாளர் அறிவித்தார். 'கட்டுரைப் போட்டி' என்று கூறி, முதல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று என்னைக் கூறியதும் எனக்குத் தலைகால் புரியவில்லை! மேடைக்குச் சென்று அவரிடம் பரிசு வாங்கும்போது என்னையும் எம். எல். ஏ. அவர்களையும் சேர்த்து போட்டோ எடுத்தார்கள். அதை எங்கள் அசோசியேஷன் கிளப்பில் மாட்டியுமுள்ளார்கள். எனக்கும் ஒரு 'காப்பி' தந்தார்கள்.

- ப. கணேஷ் ஜோதிநகர்.


● ஜெயகாந்தன்
● அனிதா
● கணேஷ்

போயும் போயும்...

மகேஷ், சுரேஷ், ரமேஷ் மூவரும் பார்வதிபுரம் நகர மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருபவர்கள். பத்தாம் வகுப்பிலேயே இவர்கள் மூவரும்தான் நன்றாகப் படிப்பவர்கள். அதனால் இவர்கள் மேல் ஆசிரியர்களுக்குத் தனிப் பிரியம் உண்டு.

மகேஷும், சுரேஷும் பணக்கார வீட்டுப் பிள்ளைகள். மகேஷின் அப்பாவும், சுரேஷின் அப்பாவும் தொழிலில் பார்ட்னர்கள். அதனால் இருவரும் நண்பர்களாகப் பழகி வந்தனர். ஆனால் ரமேஷோ ஏழை வீட்டுப் பிள்ளை. அவனது அப்பா ஒரு கூலித் தொழிலாளி. அப்பா ஒருவர் சம்பாதிப்பதில்தான் அவர்களது குடும்பம் ஓடிக் கொண்டிருக்கிறது.

அன்று வெள்ளிக்கிழமை. கணித வகுப்பு நடந்து கொண்டிருந்தது. அந்த வகுப்பு மதிய இடைவேளைக்கு முந்திய வகுப்பு. ஆசிரியர் பரமசிவம் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

''மாணவர்களே! உங்களுக்கு ஒரு போட்டி வைக்கப் போகிறேன்'' என்றார் ஆசிரியர். மாணவர்கள் உற்சாகமடைந்து, ''என்ன போட்டி ஐயா வைக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டனர். அதற்கு ''இன்னும் சில நாட்களில் உங்களுக்கு காலாண்டுத் தேர்வுகள் துவங்கப் போகின்றன. கணிதப் பாடத்தில் முதல் மதிப்பெண் பெறும் மாணவருக்கு ஒரு ''இங்க் பேனா'' பரிசாக வழங்கப்படும்'' என்றார் ஆசிரியர்.

இடைவேளை மணி ஒலித்தது. அத்துடன் கணிதப் பாடத்தை முடித்துக் கொள்வதாகக் கூறினார் ஆசிரியர் பரமசிவம்.

வீட்டிற்கு சாப்பிடச் செல்லும் மாணவர்கள் சென்று விட்டனர். டிபன் பாக்ஸ் எடுத்துக் கொண்டு வந்திருந்த மாணவர்கள் புங்கை மர நிழலில் அமர்ந்து சாப்பிட்டு விட்டு இளைப்



பாறிக் கொண்டிருந்தனர். மகேஷும், சுரேஷும் பேசுவதைக் கேட்டு ''ஆமாம்! ஆமாம்!'' போட்டு தலையாட்டிக் கொண்டிருந்தனர் சில மாணவர்கள்.

''டேய், நம்ம கணக்கு வாத்தியார் பெரிய கஞ்சனா இருப்பார் போலிருக்குடா. போயும் போயும் ஒரு இங்க் பேனா பரிசளிப்பதாகக் கூறியிருக்காரே! விவஸ்தை இல்லாத ஆளுடா நம்ம கணக்கு வாத்தியார். நம் தந்தையிடம் சொன்னால் பத்து பேனாக்கள் கூட வாங்கித் தருவார்கள். அங்கே பாருங்கடா, ஒரு இங்க் பேனாவுக்காக விழுந்து, விழுந்து படிக்கிறான் ரமேஷ்'' என்று கிண்டலடித்து பேசிக் கொண்டிருந்தனர் மகேஷும் சுரேஷும். அவர்கள் கூறியதை மற்ற மாணவர்களும் ''ஆமாம்'' என்று தலையசைத்து ஆமோதித்தார்கள்.

இவர்களது உரையாடலைக் காது கொடுத்துக் கேட்டு விட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தார் கணித ஆசிரியர் பரமசிவம்.

காலாண்டுத் தேர்வுகள் ஆரம்பிக்கப்பட்டு, ஒரு வாரத்திலேயே எல்லா தேர்வுகளும் முடிவடைந்தன. திருத்திய கணித விடைத்தாளைக் கொடுத்துக் கொண்டிருந்தார் ஆசிரியர் பரமசிவம். கணிதப் பாடத்தில் அதிக மதிப் பெண்கள் பெற்று முதலிடம் வகித்தவன் ரமேஷ்தான். மகேஷும், சுரேஷும் மிகவும் குறைவான மதிப்பெண்கள் பெற்றிருந்தனர். ஆசிரியர் முதல் மதிப் பெண் பெற்ற ரமேஷுக்கு பரிசுப் பேனாவைக் கொடுத்து வாழ்த்துக் கூறினார். பரிசைப் பெற்றுக் கொண்ட ரமேஷ் அனைவருக்கும் நன்றி தெரிவித்தான்.



''மாணவர்களே! உங்களுக்கு நான் அறிவுரை கூற விரும்புகிறேன். கடையில் காசு கொடுத்து பேனா ஒன்றை வாங்கினேன் என்று சொல்வதைக் காட்டிலும் நான் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றதற்காக என்னைப் பாராட்டி என் ஆசிரியர் இந்தப் பேனாவைப் பரிசு கொடுத்தார் என்று சொல்லுவதைத் தவிர வேறு சிறப்பு எதுவும் இதற்கு இல்லை. நான் ஏழை. என்னால் ஒரு பேனா வைத்தான் தர முடியும். இருந்தாலும், நான் ஏன் பேனா பரிசு கொடுத்திருக்கிறேன் என்றால் உங்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்த அது ஒரு கருவியாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தினால்தான். பரிசு என்பது நமது திறமைக்குக் கிடைத்த பாராட்டு என்று நீங்கள் கருத வேண்டும். அதன் விலையை எண்ணி அதன் மதிப்பைக் குறைக்கக் கூடாது'' என்று கூறினார் ஆசிரியர்.

''எங்களை மன்னித்து விடுங்கள் சார்'' என்று வெட்கிப் போன ரமேஷும், சுரேஷும். ஒருமித்த குரலில் கூறினர்.

– மு. கருணாநிதி

நீ விரட்டலாமா?

சிறுவர் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தவரும், கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியருமான அமரர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் நினைவு நாள் இந்த மாதம் வருகிறது. எந்தப் பிரச்னையையும் அவர் மனித நேயத்துடன் தீர்வு செய்ததை அவரது மகள் இங்கே நினைவு கூறுகிறார்.



சென்னையில் தொலைக்காட்சி வந்த புதிது. வசதியும் ரொக்கமும் உடையவர்களால் மட்டுமே தொலைக் காட்சிப் பெட்டி வாங்க முடியும் என்ற நிலை. எவியத வணை முறை வராத காலம் சென்னை அண்ணா நகரில் எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் சில குடிசைகள் இருந்தன. அந்தக் குடிசைகளில் உள்ள ஏழைக் குழந்தைகள் பலர் தொலைக்காட்சியில் திரைப்படம் போடுகிற அன்று படம் பார்க்க எங்கள் வீட்டுக்குத் திரளாக வருவார்கள். அப்போது நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன்.

தொலைக்காட்சியைப் பார்க்க வரும் குழந்தைகளின் அழுக்கான உடையையும், ஒழுகும் மூக்கையும் பார்த்தாலே எனக்குப் பிடிக்காது. அதோடு அவர்கள் கால் கைகளில் ஒட்டி வரும் மணல் வேறு வீடு முழுவதும் பரவி விடும்.

எனவே, நான் ஒருமுறை திரைப் படம் பார்க்க வந்த குடிசைச் சிறுவர்களிடம், ''எங்க வீட்டுக்கு யாரும் வரக் கூடாது! போங்க, போங்க'' என்று கடுமையாகச் சொல்லி விரட்டிக் கொண்டிருந்தேன். இதை எங்கள் தந்தையார் பார்த்து விட்டார்கள். என்னை உள்ளே கூப்பிட்டார்கள்.

''டி.வி.யிலே படம் பார்க்க நீ எவ்வளவு ஆவலாக இருக்கே? ஐந்து நிமிடம் கரண்ட் கட்டானாக்கூட படம் பார்க்க முடியலையேன்னு எத்தனை வருத்தப் படறே? அது மாதிரித் தானே இந்தக் குழந்தைகளுக்கும் ஆசையா இருக்கும்? உன் வயது அல்லது உன்னை விடக் குறைந்த வயது தானே இவங்களுக்கும் இருக்கும்? அவர்கள் பாவம், படம் பார்க்க முடியலையேன்னு எவ்வளவு ஏமாற்றமா இருப்பாங்க?'' என்று அப்பா என்னிடம் கேட்டார்கள்.

''ஏன், இங்கு எத்தனை பேர் வீட்டில் டி.வி. இருக்கு? அங்கெல்லாம் போகாம நம்ம வீட்டிற்கே இவங்க தொடர்ந்து வர்றாங்களே?'' என்று கேட்டேன் நான்.

அதற்கு அப்பா ''அந்த வீட்டில இருக்கிற சிறுவர்களும் 'நீங்க அிங்

– தேவி நாச்சியப்பன்.

கமா இருக்கீங்க, வீட்டை மண்ணாக்கி விடு கிறீர்கள்'னு சொல்லி விரட்டி இருப்பாங்க. அவங்க அப்படி விரட்ட லாம்..ஆனா, நீஅப்படி விரட்டலாமா?'' என்று கேட்டார்கள். அந்த ''நீ'' கொஞ் சம் அழுத்தமாகவே இருந்தது.

''ஏன்? நான் மட்டும் அப்படிச் சொல்லக் கூடாதா? விரட்டக் கூடா தா?'' என்று புரியாமல் கேட்டேன்.

''அவர்களுக்கும் உனக்கும் வித்தி யாசமிருக்கும்மா. அவங்க சாதாரணக் குழந்தைங்க. ஆனால் நீயோ, கவிமணி சிறுவர் சங்கத்தின் அமைப்பாளர். பொறுப்பான பதவியில் இருப்பவள். மற்றவர்களுக்கு, முன்உதாரணமா இருக்க வேண்டிய பெரிய பொறுப்பு உனக்கு இருக்கு. அதனால், மற்றவங்க மாதிரி நீயும் இவங்களை விரட்ட முடியாது'' என்று அப்பா கூறினார்கள்.

ஆம், அந்த ஆண்டுதான் எங்கள் வீட்டில் கவிமணி குழந்தைகள் சங் கத்தை ஆரம்பித்திருந்தோம். அதற்கு நான்தான் அமைப்பாளரும் கூட!

அப்பா சொன்ன உடனே, வாசலுக் குப் போய்ப் பார்த்தேன். அப்போதும் அங்கு அந்தச் சிறுவர்கள் போகாது தயங்கியபடி நின்று கொண்டிருந்தார் கள். கேட்டைத் திறந்து விட்டு 'வாங்க' என்று கூறினேன். மிகுந்த மகிழ்ச்சி யோடு அந்தச் சிறுவர்கள் சிரித்துக் கொண்டே உள்ளே ஓடி வந்தார்கள். திரைப்படம் பார்த்தார்கள்.

அதன் பிறகு வாரா வாரம் குடிசைச் சிறுவர்கள் டி.வி. பார்க்க எங்கள் வீட்டுக்கு வருவார்கள். ஏதாவது பண்டிகை, அல்லது விசேஷ நாளாக இருந்தால் அந்த நாட்களில் அந்தச் சிறுவர்களுக்கும் தவறாமல் இனிப்பு வழங்கி மகிழ்வோம்.

இதுபோல் எங்கள் தந்தையார் நாங்கள் வேண்டாம் என்று கூறியதை எங்களைக் கொண்டே அதுவும் விருப் பத்தோடு செய்ய வைத்து மனித நேயம் என்பதற்குரிய இலக்கணத்தைப் புரிய வைத்து வாழ்ந்தார்கள்.


உடைந்த துண்டை அடையுங்கள் - போட்டி முடிவு

இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 1500 ஐத் தாண்டி விட்டது! ஏழாவது துண்டு, எட்டாவது துண்டுதான் சரியான விடை. பெரும்பாலனவர்கள் சரியாகவே ஒட்டி அனுப்பி யிருந்தார்கள். ஆனாலும், பரிசுக் குரியவர்களைத் தேர்ந் தெடுக்க குலுக்கல் முறையே கை கொடுத்தது. பரிசு பெற்ற வர்களுக்குப் பாராட்டுகள். போட்டியில் கலந்து கொண்டு சிறப் பித்தவர்களுக்கு நன்றி.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. அ. ஆதிலட்சுமி, ஈரோடு – 9
2. அ. நிஷார் அகம்மது, பரங்கிப்பேட்டை
3. சி. சுஜனா, கீழ்ப்பெரும்பாக்கம்
4. ம. மலர்விழி, தொண்ட முத்தூர் P.O.
5. ப. சாய்ராஜேஷ், தஞ்சை – 7
6. எம். அலமேலு, குமாரபாளையம்
7. ஆர். கார்த்திகைவேணி, அந்தமான்
8. டி. இருமுகம், அந்தமான்
9. முதலியார் ராஜேந்திரன் சுந்தரம், அகமதாபாத் – 8
10. முகமது சாதிக், பாண்டிச்சேரி –1
11. வெ. பிரதாப், காரைக்கால் – 2
12. எஸ். சுப்ரியா, பெங்களூர் – 16
13. கே..ஆர். ஹரீஷ், சிக்கமகளூர் – கர்நாடகா.
14. எஸ். சுகன்யா, ஷிபூர், மேற்கு வங்கம்
15. கோ.. சித்ரா, சென்னை – 116
16. ரா. பூரணி, திருச்சி – 17
17. எஸ். உலகநாதன், இராசிபுரம்
18. ஜீ. ஜெரின், நாசரத்
19. பி. ரோசாரி, நெய்வேலி – 2
20. எம். கந்தசாமி, மாத்தூர்– 622 515

பரீட்சை என்றதுமே மாணவர்களில் பலர் பயந்து கலங்கிப் போவதை இன்னமும் பார்க்கிறோம். நன்றாகப் படிக்காதவர்கள் பயப்படுவதிலாவது அர்த்தம் இருக்கிறது. நன்றாக, திட்டமிட்டுப் படித்தவர்கள் கூட இப்படிப் பயப்படுவது ஒப்புக் கொள்ளக் கூடியது அல்ல. ''நாம் படித்தது போதாதோ?'' என்ற சந்தேகமே இதற்குக் காரணம். விளையாடுகிறீர்கள். விளையாட்டில் உங்களுக்கு உள்ள திறமையை எப்படி மற்றவர்களுக்கு உணர வைப்பீர்கள்? மேட்ச், போட்டிகள் மூலமாகத்தானே? இதே போன்றதுதானே பரீட்சையும்? நீங்கள் பாடத்தை எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிய உதவுவதுதானே பரீட்சை? பாடத்தை நடத்தி விட்டு, கேள்விகள் கேட்டு, வினா விடை எழுத வைத்து, பிறகுதானே பரீட்சை வைக்கிறார்கள்? இதற்கு ஏன் பயப்பட வேண்டும்? திட்டமிட்டுப் படித்தவர்கள் கூட, ''இதுவரை நான் படித்ததெல்லாம் மறந்து விடுமோ என்றுதான் பயமாக இருக்கிறது'' என்று கலங்குகிறார்கள். இதற்காக ஞாபக சக்தியை அதிகமாக்கும் மருந்துகளை நாடுபவர்களும் இருக்கிறார்கள். இதையெல்லாம் சரிதானா என்பதை இந்த கருத்துக் கோர்வை உங்களுக்குப் புரியவைக்கும்.



பரீட்சைக்குப்

''ஏப்ரல் மாதம் நெருங்கிக்கிட்டு இருக்கு. இப்போதிலிருந்தாவது சரியா தயார் பண்ணலைன்னா அவ்வளவு தான்! டீ.வி. பார்க்கறது, கிரிக்கெட் ஆடறதையெல்லாம் மூன்று மாதத்துக்கு மூட்டை கட்டி வைச்சாதான் சரியா வரும்'' - என்று பல வீடுகளில் அப்பா, அம்மாக்களின் குரல்.


''பரீட்சைன்னு சொன்னதுமே ஒரு தீவிரம் வந்துடறதே! இது கூட இல்லாமல் இருந்தால் எப்படீங்க படிப்பாங்க?'' என்று பெற்றோரில் பலர் பரீட்சையை வரவேற்கிறார்கள்.

''பரீட்சைங்கறது பிள்ளைங்களுக்குத்தான். ஆனா, அதனால நாங்கதான் பயந்து நடுங்கிக் கலவரமடைகிறோம். அவங்களுக்குப் பயமே கிடையாது!'' என்று பெரியவர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

''எங்களை ஏகமாக பயமுறுத்தி விடுறாங்க'' என்கிறாள் தனியார் பள்ளியில் ஏழாவது படிக்கும் சிறுமி சித்ரா. ''பரீட்சைன்னா எதுக்காக பயப்படணும்? வருஷ ஆரம்பத்திலிருந்து முழுப் பரீட்சை வரைக்கும் யூனிட் டெஸ்ட், மிட்டேர்ம், கால் பரீட்சை, அரைப் பரீட்சை என்று தொடர்ந்து பரீட்சைமயமாகத்தானே எழுதிட்டிருக்கோம்?'' என்கிறாள் அவள்.

தனியார் பள்ளிகளிலும், கான்வென்டுகளிலும் படிக்கும் குழந்தைகளுக்கு சித்ரா சொல்வது போல் வருடம் முழுவதும் பரீட்சை எழுதுவது போன்ற சூழ்நிலை இருந்தாலும், அரசு மற்றும் (மா)நகராட்சிப் பள்ளிகளின் நிலைமையே வேறு. பல அரசுப் பள்ளிகளில், பல சப்ஜெக்டுகளுக்கு ஆசிரியர்கள் இல்லாமலேயே பாதி வருடம் ஓடி விடும் நிலை இருக்கிறது.

''இந்த வருடம் எங்களுக்கு இது வரையிலும் இங்கிலீஷ் ஆசிரியர் வரவில்லை'' என்கிறான் அரசுப் பள்ளி



பயமேன்?

யொன்றில் எட்டாவது படிக்கும் ஸ்ரீதர். ''எங்க வகுப்பில் 75 பேர் இருக்கோம். ஆசிரியரால் எல்லோரையும் தனித்தனியாகக் கவனிக்க முடியாது. ஆகையால் வேறு வழியின்றி டியூஷனுக்குத்தான் போக வேண்டியிருக்கிறது. கடைசி நேரத்தில் டியூஷன் வாத்தியார் முக்கியமான கேள்விகளைக் குறித்துக் கொடுத்து மக்-அப் பண்ணச் சொல்லி விடுவார். குறைந்தபட்ச மார்க் வாங்கி பாஸ் செய்து விடுவேன்'' என்கிறான் அவன்.

''டியூஷனுக்கு அனுப்புவது பிரச்னையைத் தீர்ப்பதாக அமையாது. பல பெற்றோர்களுக்கு குறிப்பாக வேலைக்குச் செல்லும், அப்பா அம்மாக்களுக்குக் குழந்தைகள் ஹோம்-ஒர்க் செய்கிறார்களா என்பதைக் கவனிக்கக் கூட நேரமில்லாமல் இருப்பதால் டியூஷனுக்கு அனுப்பி விடுகிறார்கள். அது ஒரு மாலை நேரப் பள்ளியாக இருக்கிறது. டியூஷனில் ஒன்றும் பிரமாதமாய் சொல்லித்தர முடிவதில்லை. ஹோம்-ஒர்க்கை அங்கே வைத்துச் செய்து விடுகிறார்கள் அவ்வளவுதான்'' என்கிறார் தனியார் பள்ளியொன்றில் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் சிறுவனின் தந்தை ஆறுமுகம்.

''நம்ப வீட்டில் இருந்தாதான் டீ.வி. பார்த்து நேரத்தை வீணாக்குவான் என்று டியூஷனுக்கு அனுப்பினால், அங்குள்ளவர்கள் டீ.வி. போடுகிறார்கள். சிறுவர்களை, டீ.வி.க்கு முதுகைக் காட்டி உட்கார வைத்து விடுகிறார்கள். இது எப்படி ஸார் சரியா வரும்?'' என்று கேட்கிறார் ஆறுமுகம்.

வருட ஆரம்பத்திலிருந்தே எல்லா ஸப்ஜெட்டுகளையும், முறையாகப் படித்துக் கொண்டு வந்தால் பரீட்சையைக் கண்டு ஏன் பயப்படணும்?'' என்று கேட்கிறார் சாரதா வித்யாலயாவில் மேல்நிலை வகுப்புகளுக்கு பாடம் எடுக்கும் ஆசிரியை திருமதி. சரளா. ''எல்லாப் பசங்களையும் எங்களால் சரியா கண்காணிக்க முடியலைங்கறது. உண்மைதான். ஆனா, மோசமா இருக்கிறவங்களை அடையாளம் கண்டு கொள்கிறோம். நாங்க அவங்களை கண்காணித்து தூக்கி விட்டுக் கொண்டுதான் இருக்கோம். மாணவர்களுக்கு நான் ஒன்று சொல்லுவேன். சந்தேகங்களை தைரியமாகக் கேளுங்கள். வெட்கப்பட வேண்டாம்; பயப்பட வேண்டாம்'' என்கிறார் சரளா.


''இப்போதிருக்கிற பாடத்திட்டத்தின்படி, எல்லா சப்ஜெட்டுகளும் மிகக் கடுமையாக இருக்கின்றன. பட்டதாரியான பெற்றோர்களுக்கே ஏழாம் வகுப்பு மாணவனின் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க சிரமப்பட வேண்டியிருக்கிறது. அப்படியிருக்க அந்த மாணவனின் நிலை எப்படி இருக்கும்? நான் என் பசங்களை டீ.வி. பார்க்காதே என்று சொல்ல மாட்டேன். உனக்கு என்ன புரோகிராம் பிடிக்குமோ அதை மட்டும் பார்த்து விட்டு ஆஃப் பண்ணி விடு என்றுதான் கேட்டுக் கொள்வேன். அவர்

களுடைய பள்ளி டயரியை தினமும் எடுத்துப் பார்ப்பேன். ஹோம்-ஒர்க் இருந்தால் தெரிந்து விடும். எங்களுக்கும் பள்ளிக்கூடத்துக்கும் கருத்துப் பரிமாற்றம் என் பையனின் ஸ்கூல் டயரி மூலம்தான் நடக்கிறது. ஆகையால் என் பையன் தப்ப முடியாது. பரீட்சை நடக்கும் சமயங்களில், கூடிய வரை காலை வேளைகளில் அவன் சற்று டென்ஷன் இல்லாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்வேன்'' என்கிறார் திருமதி செண்பகம்.

''நாங்களும் எங்க அம்மாவுக்கு அனாவசியமா பயத்தை உண்டாக்க மாட்டோம். சனிக்கிழமை அன்று பரீட்சை இருந்தாக் கூட காலையில் ஹிந்து நாளிதழில் young world படிப்போம். அம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. முக்கியமா பரீட்சை அன்னைக்குக் காலையில் எதையும் புதுசா மனப்பாடம் பண்ண மாட்டோம். ஒரு தடவை படித்துத் திரும்பப் பார்த்துக் கொள்வதோடு சரி'' என்கிறார்கள் எட்டாவது படிக்கும் ஜோதியும், ஜெயலட்சுமியும்.

''மாணவ மாணவிகளே, முதலில் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். அப்புறம் வெற்றி நிச்சயம்'' என்கிறார் கோடம்பாக்கம் அரசு மேல் நிலைப் பள்ளி, முதுநிலை ஆசிரியரான திரு டி. சலாவுத்தீன். ''பரீட்சையில் மார்க் எடுப்பது ஒன்றும் கடினமல்ல; வகுப்புகளில் பாடமெடுக்கும் போது காது கொடுத்துக் கேளுங்கள். அது போதும். இப்போது குறைந்தபட்ச மார்க்கெடுத்து பாஸ் செய்யுமளவுக்கு கேள்விகளின் முறையே மாறிக் கிடக்கிறது. ஏகப்பட்ட அப்ஜெக்டிவ் டைப் கேள்விகள் இருப்பதால் வகுப்பில் சரியாகக் கவனித்தாலேயே பதில் சொல்வதற்கு முடியும். கணிதம் சிலருக்குக் கசப்பு மருந்து! பயப்பட வேண்டாம்! கிராப், ஜாமெண்ட்ரி போன்றவற்றை ஒழுங்காகச் செய்தால் கணிதத்தில் பாஸாவது எளிது. இதுவரை பல சப்ஜெக்டுகளில் பெயிலாகி வந்திருக்கிறீர்களா? இனிமேல் கூட நீங்கள் முயற்சியெடுத்தால் பாஸாவது நிச்சயம். கால், அரையாண்டுத் தேர்வுக் கேள்விகள், முழுப் பரீட்சைக்கு முன் நடந்த ரிவிஷன் (Revision) டெஸ்டின் போது கேட்கப்பட்ட கேள்விகளை சப்ஜெக்ட்வாரியாக தனித்தனியாக எழுதி வைத்துக் கொள்ளுங்கள். பின்னர் அந்தக் கேள்வி - பதில்களை மட்டும் படியுங்கள். வெற்றி உங்கள் கையில். ஆனால் எல்லாவற்றிலும் 90 மார்க்குக்குமேல் எடுக்க வேண்டும் என்று நினைத்தீர்களானால் இது போதாது. அதற்கு வருட ஆரம்பத்திலிருந்தே நன்றாக உழைக்க வேண்டும்'' என்கிறார் சலாவுத்தீன்.

''பல மாணவ, மாணவிகள் மக்-அப் (மனப்பாடம்) செய்து பெற்றோர்களிடம் நன்றாக ஒப்பிப்பார்கள். ஆனால், பரீட்சையின் போது சரியாக எழுத மாட்டார்கள். இதற்காக ஆத்திரம் வந்து பெற்றோர்கள் அவர்களை அடிப்பதும் உண்டு. மறதி ஜாஸ்தியாக இருக்குன்னு பையனைக் கூட்டிக் கொண்டு என்னிடம் வருகிறார்கள். பல மருத்துவர்கள் 'வல்லாரை' மாத்திரை கொடுக்கச் சொல்கிறார்களே, அவற்றை சாப்பிடலாமா? என்று கேட்கிறார்கள். அந்த மாதிரி மாத்திரைகளைச் சாப்பிடுவதால் சரியாகத் தூக்கம் வராது. தூக்கம் வராததால் அந்த நேரத்தில் பையன் இன்னும் நன்றாகப் படிப்பான் என்று பெற்றோர்கள் நினைக்கிறார்கள். இது தவறு'' என்கிறார் மனநல மருத்துவர் திரு ருத்ரன். ''பரீட்சைன்னா பசங்க எதுக்கு பயப்படணும்? எதாவது எதிர்பார்ப்பு இருந்தால் தான் பயமே தோன்றும். ஒரு பையனுக்கு, பரீட்சையோட முக்கியத்துவம்



புரிய வைக்கப்படணும்; பயமுறுத்துக் கூடாது'' என்றும் தொடர்ந்து சொல்லும் ருத்ரன். மாணவ, மாணவியருக்கு டிப்ஸ்களும் தந்திருக்கிறார் அவர்.

- விளையாட்டுக்களில் பங்கெடுத்துக் கொள்ளுங்கள்; பயம் விலகும்; வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வரும்.

- அப்பாவிடம் 'B.S.A. சைக்கிள் வாங்கி தரச் சொன்னால், எல்லா சப்ஜெட்டிலும் 80க்கு மேல் எடுத்துக்காட்டு என்பார். ஆதலால், நன்றாக மார்க் எடுத்து விட்டு உங்கள் ஆசையை அப்பாவுக்குச் சொல்லுங்கள். அப்போது சைக்கிளுக்கு மேல் இன்றும் மதிப்பான பொருள் கூட உங்களுக்குக் கிடைக்கலாம்.

- வார, மாத டெஸ்டுகளில் குறைந்த போர்ஷன்கள் இருப்பதால் அதில் நன்றாகப் படித்து மார்க் எடுக்கலாம். இதனால் பரீட்சை பயம் உங்களை விட்டு அகலும்.

- சிலருக்குத் தொடர்ந்து பல மணி நேரம் படிக்க முடியாது. இவர்கள் தங்களால் எத்தனை நேரம் கவனிப்பு பிசகாமல் படிக்க முடியுமென்று கணித்துக் கொண்டு அவ்வப்போது இடைவெளி விட்டுப் படிக்கணும். அந்த இடைவெளியில், நல்ல புத்தகங்கள், டீ.வி.யில் நல்ல புரோக்ராம்கள் பார்க்கலாம்.

-சிலருக்கு கசப்பான ஸப்ஜெட்டுகளை கையில் எடுக்கவே யோசனை. அவர்களெல்லாம் கசப்பு ஸப்ஜெக்டைத் தொடும் முன்னர் உங்களுக்கு விருப்பமுள்ள, பாடத்தைப் படியுங்கள். சமயத்தில் கதைப் புத்தகமாக இருந்தாலும் பரவாயில்லை. அதே மூச்சில் கசப்பான ஸப்ஜெக்டையும் சிறிது நேரத்திற்கு பின் எடுத்துப் படியுங்கள். உங்களால் கொஞ்சமாவது படிக்க முடியும். இதே முறையில் தொடர்ந்தால் கசப்பு இனிப்பாகும்.

- அனாவசியமாக பயப்படாதீர்கள். இதனால் வாந்தி, தலைவலி, வயிற்று வலி கூட வரலாம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். ஆதரவான விஷயங்களைப் பேச வேண்டும். ''போச்சு நீ இந்த வருடம் பெயில்தான் என்று பல முறை சொல்லி அவனைத் திட்டினால் அதுவே அவனுக்குப் பதிந்து போகும். இப்போதைய காலகட்டத்தில் கவனச் சிதறல்கள் (distraction) அதிகம். அவர்கள் போக்கிலேயே சென்று அவர்களை நம் வழிக்குக் கொண்டு வருவதுதான் சிறந்த முறை. இதில் ஆசிரியர்களுக்கும் பெரும் பங்கு இருக்கிறது'' என்கிறார் ருத்ரன்.

இவைகளையெல்லாம் படித்த பிறகு உறுதியாக உங்களுக்கு ஒன்று புரிந்திருக்கும். மனஉறுதியும் தன்னம்பிக்கையும் மிக அவசியம். இந்த இரண்டையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

– ப்ரியன்

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Madras
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	V. Murali
Nationality	:	Indian
Address	:	AA-117, Shanthi Colony, Anna Nagar, Madras - 600 040
4. Name of Publisher	:	V. Murali
Nationality	:	Indian
Address	:	AA-117, Shanthi Colony, Anna Nagar, Madras - 600 040
5. Name of Editor	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras - 600 034

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.1994

V. Murali
Publisher

அட்டையில் : ரஞ்சனி


வண்ணப்படம் : கோபிநாத்



திருடர்கள் ஓடினார்கள்!

ராமு தன் தாயுடன் அசந்து உறங்கிக் கொண்டிருந்தான். அவ்வூரில் இரவில் திருடர்களின் நடமாட்டம் அதிகம். நள்ளிரவில், ராமுவின் காதில் திடீரென்று 'தட் தட்' என்று யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. எழுந்து பக்கத்தில் பார்த்தான். அவன் அம்மா உறங்கிக் கொண்டிருந்தாள். ராமு மெதுவாகச் சென்று கதவு ஓட்டையில் கண்ணை வைத்துப் பார்த்தான்.

மூன்று திருடர்கள் ராமுவின் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தனர். ஒருவன் கதவைத் தட்டிக் கொண்டிருந்



தான். ராமு திடுக்கிட்டான். அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

'சட்'டென்று ராமுவுக்கு ஒரு யோசனை தோன்றியது. தானே தொலை பேசியில் பேசுவது போல உரக்க,

''ஹலோ, போலீஸ் ஸ்டேஷனா? குப்பு சாமி தெருவில் 52-ம் நம்பர் வீட்ல திருடர்கள் வந்து கதவைத் தட்டறாங்க. நீங்க உடனே வாருங்கள்'' என்று ராமு பேசிக் கொண்டான். இதைக் கேட்ட வெளியே இருந்த மூன்று திருடர்களும், ''ஐயையோ, போலீஸுக்கு போன் பேசி விட்டான். நாம் இனி இங்கு இருந்தால் ஆபத்து'' என்று ஓடோடி விட்டார்கள்.

ராமு காலையில் எழுந்து தன் தாயிடம் நடந்ததைக் கூறினான். இருவரும் சிரித்துக் கொண்டனர்.

- முகமது சாதிக், பாண்டிச்சேரி - 1.

முள்ளை முள்ளால்...

எட்டு வயது காயத்ரிக்கு பிடிவாதம் மட்டும் ஏழு கடல் அளவு.

அம்மாவும் காயத்ரியும் கடைவீதிக்குப் புறப்பட்டுக் கொண்டு இருந்தார்கள்.

படித்துக் கொண்டிருந்த வாசுவுக்கு, திடீரென்று நேற்று அம்மா வாங்கி வந்த ஜாங்கிரி ஞாபகம் வர, சமையல் அறையின் மேல் அடுக்கிலிருந்த அந்த டப்பாவை எடுத்தான். சத்தம் கேட்டு விட்டது.

''என்னடா செய்யறே?'' - அம்மா கேட்டாள்.

''ஜாங்கிரி எடுக்கறேன். நேத்து நான் திங்கலையே! என் பங்குதானே இருக்கு?'' என்று விரைவாகப் பதிலளித்தான் வாசு.



''அம்மா எனக்கு!'' - காயத்ரியின் குரல் தாழ்வாக, கெஞ்சலாக இருந்தது.

வாசு பெருமூச்சு விட்டான். காயத்ரியின் பிடிவாதம் சைரன் போலத்தான். தாழ்வாக ஆரம்பித்து, உச்சஸ்தாயியில் நின்று காதைத் துளைத்து, கேட்டதை வாங்கிய பிறகுதான் கீழே இறங்கும்.

''நீதான் நேத்திக்கே சாப்பிடியே?



அண்ணன்தான் சாப்பிடலே'' என்றாள் அம்மா.

''இல்லை நான் சாப்பிடலே.''

''பொய். சாப்பிட்டா. நான்தான் சாப்பிடலை'' - வாசு விளக்கினான்.

''ஹூ¯ம்... எனக்கு ஜாங்கிரி வேணும்...'' என்று காலை தொம் தொம் என்று சாணி மிதிப்பது போல் மிதிக்க ஆரம்பித்தாள் காயத்ரி. வேதாளம் முருங்கை மரம் ஏறி விட்டதை இருவரும் அறிந்தனர்.

''அதைக் கொடுடா அந்த ராட்சசி கிட்ட'' - அம்மா எரிச்சலாகச் சொன்னாள்.

வாசு ஜாங்கிரியை பரிதாபமாக, அவளிடம் நீட்டினான். புதையலைப் பறிப்பது போல அதை அவன் கைகளிலிருந்து பறித்துக் கொண்டாள். திடீரென்று முகம் சுளித்தாள்.

''ஐயே! இதென்ன வெள்ளையா...?''

வாசு பார்த்தான். யோசித்தான்.

''ஐய பூஞ்சக்காளம்!''

''பூஞ்சக்காளமா ஐயையே!''

''ஆமா. ரெண்டு நாள் இருந்ததுல கெட்டுடுத்து'' - காயத்ரிக்கு அருவருப்பால் முகம் எட்டுக் கோணலாக மாறியது.

''எனக்கு வேண்டாம்பா! நீயே தின்னுக்க''

அவசரம் அவசரமாக அதை அந்த டப்பாவுக்குள் போட்டு விட்டு, அம்மாவின் பின்னால் ஓடினாள்.

வாசு தனக்குள் சிரித்துக் கொண்டான். ஜாங்கிரியில் ஒட்டிக் கொண்டிருந்தது பூஞ்சக்காளம் அல்ல. அதே மாதிரி இருந்த அரிசி மாவுதான்! அம்மா தான் அவன் பங்கு பறிபோகாமல் இருக்க, அரிசிமாவில் அதைப் புரட்டி

வைத்து விட்டு, அவனிடமும் கூறியிருந்தாள்.

- ஆர்த்தி, சென்னை.

கேலி

முரளி. அடுத்த நாள் காலை தேசிய மாணவர் படை அணிவகுப்பில் கலந்து கொள்ள வேண்டும். அதற்காக முடியை ஒட்ட வெட்டிக் கொண்டு வருமாறு கூறியிருந்தார், ஆசிரியர்.

முரளியின் அப்பா பெரிய பணக்காரர். அவருக்கு இரண்டு லாரி, ஒரு பஸ் மற்றும் ஒரு ஜவுளிக் கடை என்று நிறைய வியாபாரம்.

முரளி அப்பாவிடம் வந்தான்.



''அப்பா, எங்க ஆசிரியர், தேசிய மாணவர் படை அணிவகுப்பில் கலந்து கொள்ள வரச் சொல்லியிருக்கிறார். எனக்கு, ஒட்ட முடிவெட்டிக்க வெட்கமாக இருக்கு. நண்பர்கள் கேலி பண்ணி உயிரை வாங்குவாங்க. அவமானமா இருக்கும். அதனால் எனக்கு உடம்பு சரியில்லேன்னு டாக்டர் சர்டிபிகேட் வாங்கித் தாங்கப்பா'' என்றான்.

''இதுல என்னடா அசிங்கம்? நீ தேசிய மாணவர் படையில் சேர்ந்து சேவை செய்யறது இந்த நாட்டுக்கும், வீட்டுக்கும் எத்தனை பெருமை சேர்க்கும் பணி தெரியுமா? ஒட்ட முடி வெட்டிக் கொள்றது ஒழுக்கத்தின் அடையாளம்'' என்று அவனுக்கு சமாதானம் கூறி முடிதிருத்த அழைத்தச் சென்றார்.

சலூனுக்குள் நுழைந்ததும் முரளிக்கு ஒரு திகைப்பு! அவனோடு படிக்கும் ராமு, நாற்காலியில் சாய்ந்திருந்த ஒரு வருக்கு முகச் சவரம் செய்து கொண் டிருந்தான்.

''ராமு, நீ... நீ என்னடா இங்கே இருக்கே!'' என்றான் முரளி.

''இது எங்க சலூன்டா முரளி. பள்ளிக்குப் போன நேரம் போக, மற்ற நேரத்தில என் அப்பாவுக்கு உதவியா இங்கு வந்து வேலை செய்வேன்டா'' என்றான் ராமு.

வகுப்பில் முதல் மாணவன் ராமு. அவனுடைய தந்தை சலூன் நடத்தி வருபவர். ராமு போலி கவுரவம் பார்க்காமல், மற்றவர்களுக்கு முகச் சவரம் செய்வதைக் கூட கேவலமாய் நினைக்காமல் பணிசெய்கிறான். ஆனால் நாமோ...


முரளி தான் ஒட்ட முடிவெட்டிக் கொள்ளக் கூடத் தயங்கியதை எண்ணி வெட்கப்பட்டான்.

''ராமு உனக்கு உண்மையிலேயே உயர்ந்த உள்ளம்டா. நாளைக்கு நான் என்.சி.சி. அணிவகுப்புக்குப் போகணும். எனக்குக் கொஞ்சம் முடியை ஒட்டவெட்டி விடுவியா?'' என்று அன்போடு கேட்டான் முரளி.

''கண்டிப்பாடா. செய்யும் தொழிலே தெய்வம்டா. மத்தவங்க கேலி பேசுவாங்களேன்னு நம்முடைய கடமையைச் செய்யாம விட்டுடறது போலி கவுரவம்டா. இப்படி வந்து உட்காரு'' என்றான் முரளி.

ராமு மனம் தெளிந்தவனாகப் பெருமையோடு வந்து உட்கார்ந்தான்.

- வேடந்தாங்கல் சுகுணன்.



மார்க்குக்காக!

"இல்லை கோபால், எங்கம்மா என்னைத் தனியாகவே படிக்கச் சொன்னாங்க" - முகத்தில் அடித்தது போல் வெளி வந்த கிஷோரின் பதில், கோபாலுக்கு அதிர்ச்சியாகவும் வியப்பாகவும் இருந்தது.

முன்தினம் மாலை தான் கோபால், கிஷோர் வீட்டுக்கு போயிருந்தான். கிஷோரை அவன் மாமா அழைத்துச் சென்றிருப்பதாகச் சொன்ன அவன் அம்மா கோபாலுக்குக் காப்பி, டிபன் கொடுத்த பின், "முழுத் தேர்வுக்கு இன்னும் பதினைந்து நாட்கள் தானே இருக்கு? ரெண்டு பேரும் சேர்ந்து படிக்க ஆரம்பிக்கலையா?" என்று கேட்டாள்.

அதனால்தான் கோபால் அன்று காலை பள்ளி செல்லும் வழியில் கிஷோரைப் பார்க்க வந்து, "கம்பைண்டு ஸ்டடியை எப்ப ஆரம்பிக்கலாம்?" என்று கேட்டான். கிஷோரிடமிருந்து இப்படி ஒரு பொய்யான பதில் கிடைக்கும் என்பதை அவன் எதிர் பார்க்கவில்லை.

என்ன காரணத்தினாலோ, கிஷோர் கோபாலுடன் கம்பைண்டு ஸ்டடி என்ற சேர்ந்து படிக்கும் திட்டத்திற்கு ஒத்துழைக்க மறுக்கிறான். அதை நேரடியாகத் தெரிவிக்கத் தயங்கி அம்மாவின் பேரில் பழிபோடுகிறான்!

கோபால் இந்த வருட ஆரம்பத்தில் அந்தப் பள்ளியில் சேரும் வரை கிஷோர் தான் முதல் ரேங்க். படிப்பு மட்டும் அல்லாமல் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, நடிப்பு, இன்டோர் கேம்ஸ் என்று எது எடுத்தாலும் கிஷோர்தான் முதல்.

கிஷோரின் அப்பாவுக்குத் துணி ஏற்றுமதி வியாபாரம். கிஷோருக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுத்திருந் தார். பள்ளிக்குக் காரில்தான் வந்து இறங்குவான். ஆனால், எல்லோரிடமும் மிகவும் நன்றாகப் பழகுவான். ஏழைப் பையன், பணக்காரன் என்றெல்லாம் பாராமல் எல்லாப் பையன்களிடத்திலும் சிரித்துப் பேசுவான். வகுப்பில் கிஷோருக்குத் தனி மதிப்பு. ஆசிரியர் கூட அடிக்கடி பையன்களை கிஷோரோடு ஒப்பிட்டு "கிஷோர் மாதிரி படி, கிஷோர் மாதிரி எல்லோரிடமும் வித்தியாசம் இல்லாமல் பழகு, கிஷோர் மாதிரி செய்" என்று சொல்லுவார்.

கோபாலுடைய அப்பா பாங்க் ஆபீசர். வருட ஆரம்பத்தில் அந்த ஊருக்கு மாற்றலாகி வந்த போது கோபாலை கிஷோர் படிக்கும் பள்ளியில் எட்டாம் வகுப்பிலே சேர்த்தார். கோபாலும் நல்ல பையன். சகஜமாக எல்லோருடனும் பழகுவான். அமைதியாகப் பேசுவான். கொஞ்ச நாட்களிலேயே எல்லோருக்கும் கோபாலைப் பிடித்துப் போய் விட்டது. கிஷோரும் கோபாலுடன் ஒட்டிப் பழகினான். நாளடைவில் இருவரும் இணைபிரியாத நண்பர்கள் ஆனார்கள்.

கே. ஆர். ராமச்சந்திரன்

காலாண்டுத் தேர்வுக்கு கிஷோரும் கோபாலும் சேர்ந்து படித்தார்கள். ஒரு நாள் கோபால் வீடு, மறுநாள் கிஷோர் வீடு. இப்படி கம்பைண்டு ஸ்டடி வெற்றிகரமாக நடந்தது. தேர்வு முடிந் தது.

காலாண்டுத் தேர்விலும் தொடர்ந்து கிஷோர்தான் எல்லாப் பாடங்களிலும் முதலாக வந்தான். கோபால் இரண்டா வது ரேங்க். கோபாலை விடத் தான் அதிக மார்க் வாங்கியது கிஷோருக்கு உள்ளூர ஒரு மகிழ்ச்சி. மற்ற பையன்களி டம் கூடப் பெருமையாகச் சொல்லிக் கொண்டான். கோபால் இதைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. எப்பொழுதும் போல் கிஷோர் வீட்டுக் குப் போவதும் அவனுடன் சேர்ந்து படிப்பதும், விளையாடுவதுமாக இருந்தான்.

அரையாண்டுத் தேர்வில் கோபால் தொடர்ந்து சில பாடங்களில் கிஷோரை விட அதிக மதிப்பெண்கள் பெற்றான். ஆசிரியர் கூட வகுப்பில் ''வெல்டன் கோபால்! சரியான ஆரோக்கியமான போட்டி! இந்தப் போட்டி தொடரட் டும்!'' என்று கூறினார். கிஷோருக்குக் கொஞ்சம் மனத்தாங்கல்தான். சிறிது பொறாமை கூட.

பள்ளிகளுக்கு இடையில் நடக்க இருந்த பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளுக்கு கோபால், கிஷோர் இருவரையும் தேர்ந்தெடுத்து பள்ளி யிலிருந்து அனுப்பினார்கள். கிஷோருக்கு ஆத்திரம். படிப்பில் மட்டுமின்றி எல்லாவற்றிலும் கூடக் கோபால் தனக்கு ஈடாகப் போட்டி போடுகிறானே என்று அவனுக்கு ஒரு வருத்தம் இருக்கத்தான் செய்தது. பல பள்ளிகளிலிருந்தும் வந்த அத்தனை மாணவ மாணவர்களுக்கிடையே நடந்த அந்தப் போட்டிகளில் கிஷோரும், கோபாலுமே முதல் இரண்டு பரிசுகளைத் தட்டிக் கொண்டு வந்தனர். கோபால் முதல் பரிசு, கிஷோர்



இரண்டாவது பரிசு.


இந்தச் சம்பவத்திற்குப் பின், இவ்வளவு நாட்களாகத்தான் தக்கவைத்துக் கொண்டிருந்த முதல் இடத்தை நேற்று வந்த இந்த கோபால் பிடித்து விட்டானே என்று கிஷோருக்கு ஒரு வேகம் எழுந்தது. ஆண்டு இறுதித் தேர்வில் எப்பாடு பட்டாவது கோபாலை விட எல்லாப் பாடங்களிலும் அதிக மார்க் வாங்கி முதல் ராங்க் மறுபடி வரவேண்டும் என்ற ஒரு வெறி கிஷோரின் மனத்தில் உண்டாயிற்று. இந்த நல்ல போட்டி மனப்பான்மையுடன் கூடவே தன் மனத்தில் ஓர் ஓரத்தில் முன்பே இருந்த கொஞ்சம் பொறாமை அதிகரித்ததோ என்ற ஒரு சந்தேகமும் கிஷோருக்கு ஏற்பட்டது. அவன் தன்னை மாற்றிக் கொண்டான்.

இரண்டு நாட்களுக்கு முன் நடந்த பரிசளிப்பு விழாவில் கோபாலைப் பார்ப்பதையே தவிர்த்தான். தன்மனப் பொருமல் வெளியில் தெரியாதிருக்க முயற்சி செய்தான். விழா முடிந்தவுடன் ''கிஷோருடன் போய்விடலாம்'' என்று வந்த கோபாலுக்கு கிஷோர் ஒன்றும் பேசாமல் காரில் ஏறிச் சென்றது எப்படியோ இருந்தது.

யோசித்துக் கொண்டே நடந்தான் கோபால். 'என்ன தவறு நடந்திருக்கும்?' என்று மனதைக் குடைந்து கொண்டிருந்த கோபாலுக்கு சட்டென்று ஒரு பொறி தட்டியது. கடந்த சில மாதங்களாக நடந்தவைகளையும், கிஷோர் தன்னிடம் நடந்து கொண்ட விதத்தையும் அலசிப்பார்த்தான். ஆசிரியர் தன்னைப் பாராட்டும் போதெல்லாம் கிஷோர் முகம் வாடியது நினைவுக்கு வந்தது. கடைசியாகப் பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் தான் முதற் பரிசு வாங்கிய பின் இந்த இரண்டு நாட்களாகக் கிஷோர் தன்னிடம் அதிகம் பேசாமல், விலகி இருந்ததைத்தான் தான் உணரத் தவறி விட்டோமோ என்று தோன்றியது.

கோபாலுக்குப் புரிந்து விட்டது. கிஷோரைச் சமாதானப்படுத்த என்ன செய்ய வேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டான்.

அன்று பள்ளியில் மதிய உணவு சாப்பிடும் வேளை. எல்லாப் பையன்களும்



டிபன் ரூமில் உட்கார்ந்து கொண்டு அரட்டை அடித்துக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். தினமும் வகை வகை யான ஸ்வீட்களும் காரவகைகளும் கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுத் துத் தானும் சாப்பிடும் கிஷோர் இன்று தனியாக உட்கார்ந்து இருந்தான்.

''என்ன, கிஷோர்! என்னடா ஆச்சு உனக்கு?'' என்று கேட்டவர்களிடம், ''தலை வலிக்கிறது'' என்று மழுப்பினான். இதற்குள் கோபால் சாப்பிட வராததைக் கவனித்த ஒரு பையன், ''கோபால் எங் கேடா, கிஷோர்?'' என்று கேட்டான். 'எனக் குத் தெரியாது'' என்று கிஷோரிடமிருந்து பதில் வந்தது. ''உனக்குத் தெரியாமல் எப் படிடா இருக்கும்?'' என்ற அந்தப் பையன் போட்ட மறு கேள்வி கிஷோரின் மனதை உறுத்தியது.


சாதாரணமாக நல்ல எண்ணங்களை உடைய கிஷோர் மனத்தில் இனம் தெரியாத ஒரு கலக்கம். ''வேறுபாடு இல்லாமல் நல்ல நண்பனாகப் பழகும் கோபாலிடம் அப்படி ஒரு பொய் சொல்ல எப்படி எனக்குத் தோன்றியது?'' என்ற ஓர் உறுத்தல் கொஞ்சம் கொஞ்சமாக வலுப்பட்டு மன தைக் குடைந்தது. ''கோபால் நன்றாகப் படித்து முதலில் வந்தால் நான் எப்படிப் பொறாமைப் படலாம்?'' என்று ஒரு குரல் அவனுள் கேட்டது. மிகுந்த வேதனைப்பட் டான். ''கோபால் எங்கே போயிருப் பான்?'' அவனையும் மீறி அவன் கால்கள் வெளியே இழுத்துச் சென்றன. ''இருங் கடா, கோபாலைக் கூட்டி வருகிறேன்'' என்று நண்பர்களிடம் சொல்லிவிட்டு கோபாலைத் தேடி வகுப்பறைக்குச் சென் றான். உள்ளே கோபாலின் பேச்சுக் குரல் கேட்கவே வெளியே நின்றான்.

''சார்! சார்! நான் கேட்டது தப்பா சார்!'' என்று கேட்ட கோபாலுக்குப் பதில் கூறிக் கொண்டிருந்தார் ஆசிரியர். ''ஆமாம். கோபால். எப்படித் தப்பு இல்லை என்று நினைக்கிறாய்? உனக்கு வேண்டுமென்றே கிஷோரை விட இரண்டு மூன்று மதிப் பெண்கள் குறைவாகப் போடச் சொல்லி எப்படி நீ என்னைக் கேட்கலாம்? யார் யார் எப்படி எப்படி எழுதுகிறார்களோ அதற்கு ஏற்ப மதிப்பெண் போட நான் இருக்கி றேனா, அல்லது உன் இஷ்டத்திற்கா?''

''இல்லை சார். இது என்னுடைய வேண்டுகோள்தான். இதனால் நீங்கள் காப் பாற்றப் போவது ஒரு நல்ல நட்பை! கிஷோர் என் உயிர் நண்பன். அவனை இந்த மார்க்குக்காக நான் இழந்து விட விரும்ப வில்லை'' என்று தயங்கித் தயங்கி கோபால் சொன்னான்.

கிஷோருக்கு அழுகை வந்து விட்டது. உள்ளே ஓடிச் சென்று கோபாலைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். ''சார்! இந்த உண்மை நண்பனிடம் கோபமும், பொறா மையும் வளர்த்துக் கொண்டேனே என்று வெட்கப்படுகிறேன். மார்க்குக்காக ஒரு உண்மை நண்பனை இழந்து விட இருந் தேனே? என்று தேம்பினான். ஆசிரியர் இரு வரையும் அணைத்தவாறு சமாதானப்படுத் தினார்.

வகுப்பறைக்கு வெளியே நின்று கொண்டிருந்த அத்தனை பையன்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. உங்களுக்குப் புரிந் திருக்குமே?



''எங்கப்பா என்னை பரணில் ஏறவே விட மாட்டார்.''

''ஏன்?''

''பரணில் உள்ள பெட்டியில்தான் எங்கப்பாவின் ப்ராக்ரஸ் ரிப்போர்ட் இருக்கு.''

– ச. ஞானப்பிரகாசம்


''பையனுக்கு இவ்வளவு கடுமை யான ஜுரமா இருக்கே! முதல்லயே அழைச்சிட்டு வந்திருக்கக் கூடாதா சார்?''

''நாளையிலேந்து அவனுக்கு பரீட்சை டாக்டர்... அந்த ஜுரமாத்தான் இருக்குமா்னு நினைக்க அலட்சியமா இருந்துட்டேன்....!''

- சீர்காழி வி. ரேவதி



ரமலான்



இறை மறையாகிய திருக்குர்ஆன் பிறந்த ரமலான் மாதத்தின் இறுதியில் வரும் ''ஈதுல் பித்ரு'' (ரம்ஜான்) எனும் ஈகைத் திருநாள் உலகெங்கும் வாழும் 140 கோடி முஸ்லிம்களால் உவப்புடன் கொண்டாடப் படும் பெருநாளாகும்.

இஸ்லாமிய மாதங்கள் பன்னி ரண்டில் ஒன்பதாவது மாதமான ''ரமலான்'' மாதம் மட்டுமே திருக்குர்ஆனில் குறிப்பிடப்படுகிறது.

திருக்குர்ஆன் மட்டுமல்லாது வேறு பல வேதங்களையும் இறைத் தூதர்கள் மூலமாக இறைவன் உலகுக்கு வழங்கியதும் கூட இதே மாதத்தில்தான்.

''ரமலான்'' என்ற சொல்லுக்கு ''கட்டெரித்தல்'' என்பது பொருளாகும். இம் மாதம் முழுவதும் 30 நாள் நோன்பு நோற்றும் ''தராவீஹ்'' என்னும் கூட்டுத் தொழுகைகள் மூலம் மிக அதிகமாக இறை வணக்கம் புரிந்து, தெரிந்தோ தெரியா மலோ செய்த பாவங்களையெல்லாம் கட்டெரிப்பதால், இம் மாதம் ரமலான் என்றழைக்கப்படுகிறது.


நபிகள் நாயகத்துக்கு வானவர் ''ஜிப் ரயீல்'' எனும் தூதர் மூலம் முதல் இறைச் செய்தியானது இம் மாதத்தின் இருபத்தியேழாம் நாளன்றுதான் இறை வனால் அருளப்பட்டது. இந்த நாள் தான் ''லைலத்துல்கதர்'' இரவு என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இந்த அரபுச் சொல்லுக்கு ''கண்ணிய மான இரவு'' என்பது பொருள். கண்ணிய மிக்க இந்த இரவு ஆயிரம் மாதங்களை விட மேலானதாகும்'' என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

மக்கள் கடமைக்கு என அல்லாஹ் விதித்தவை இறை நம்பிக்கை எனும் கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் ஆகியவை. இவைகளுள் ''ஹஜ்'' என்ற புனித யாத்திரையைத் தவிர மற்ற நான்கு கடமைகளும் ஒன்றுசேர நிறை வேற்றப்படுவது இந்த ஒரே மாதத்தில் தான். ஐம்பெரும் கடமை களில் மூன்றாவதான ''நோன்பு'' ரமலான் மாதத்தில் தான் முழுமை யாக நிறைவேற்றப் படுகிறது.

இப்ராஹீம் நபி அவர்களுக்கு ''சுஹ்பு'' எனும் வேதம் இதே ரமலான் மாதத்தில்தான் வழங்கப் பட்டது. அதன் பிறகு எழுநூறு ஆண்டு கள் கழித்து ''மூஸா'' நபி அவர்களுக்கு ''தவ் ராத்'' எனும் வேதம் இதே நாளில், அதாவது ரமலான் ஆறாம் நாளிலேதான் இறைவனால் வழங்கப் பட்டது.

ஒரு மாத கால நோன்பின் போது பசித் துன்பம் எத்த கையது, தாகத் துடிப்பு எப்படிப் பட்டது என்பதை யெல்லாம் அனுபவபூர்வ மாக; கட்டாயமாக உணரும் வாய்ப்புக் கிடைக்கிறது. இதனால் பசியாலும் தாகத்தாலும் வருந்தும் ஏழை, எளிய வர்கள் மீது அன்பும், பரிவும் இயல்பாக ஏற்படுகிறது. எனவே, இத்தகைய பாதிப்புக்குள்ளாகும் மக்கள் பசித் துன்பத்திலின்றும் மீள, வாரி வழங்கும் ஈகையுணர்வு பூரித்தெழுகிறது. அவர்களின் துன்பத்தில் பங்கு கொள்ள மனம் விழைகிறது. எனவே தான் முஸ்லீம்கள் ரமலான் நாட் களில் ஏழை, எளியவர்களுக்கு வாரி வழங்கி மகிழ்கிறார்கள். ''நோன்புப் பெருநாளையே'' ஈகைத் திருநாளா கவும் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

– தக்கோலம் அ. முஸ்தபா.



மணியைப் பாரு!

எனது தம்பியிடம் ஒரு கடிதம் கொடுத்தேன். ''போஸ்ட் செய்துவிட்டு மணியைப் பார்த்துவிட்டு வா!'' என்று சொன்னேன். தம்பி போஸ்ட் செய்து விட்டு வந்தான். மணி 'ஒன்னே முக்கால்' என்றான். எனக்குப் புரிய வில்லை. விளக்கம் கேட்டேன். ''நான் போஸ்ட் செய்யும் போது அருகில் போனவரிடம் மணியக் கேட்டேன்'' என்றான். எனக்கு ஒரே சிரிப்பாக இருந்தது. தபால் பெட்டியில் கடைசி போஸ்ட் எடுப்பது எத்தனை மணிக்கு என்று அதில் உள்ள வில்லையில் போட்டிருக்கும். அதைப் பார்த்து வரச் சொன்னால், இப்படி போஸ்ட் பண்ணும் போது மணியைச் சொல்கிறானே என்று கோபம் வந்தாலும் சிரித்தேன்.

– க. காந்திராஜ், செல்லூர்.



அரக்கிருக்கா?




அப்பா, கடையில் அரக்கு வாங்கி வரச் சொன்னார். நான் கடையில் சென்று ''அரக்கிருக்கா?'' என்று கேட்டேன். உடனே கடைக்காரர், 'நான்

அரைக்கிறுக்கா?' என்று அவரைக் கேலி செய்வதாக நினைத்துக் கொண்டு, ''போடா, முழுக் கிறுக்கா!'' என்றார் சீற்றத்துடன். இதை வீட்டில் வந்து சொன்னதும் அனைவரும் சிரித்தனர்.

– பா. ஜெயக்குமார், வந்தவாசி.


சுதந்திரம் கிடைச்சுதா?

இந்த வருடம் அக்டோபர் 2 ஆம் நாள் டீ. வியில் காந்தி படம் போட்டார்கள். நான் பாதி படம் பார்த்துவிட்டு நண்பன் சதீஷ் வீட்டிற்குச் சென்று விட்



டேன். நான் சென்றபின் எங்கள் வீட்டிற்குச் சில உறவினர்கள் வந்தார் கள். அவர்கள் டீ. வி. யில் தொடர்ந்து காந்தி படம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். திரும்ப நான் வந்தேன். அம்மாவிடம், ''அம்மா, இந்தியாவிற்கு விடுதலை கிடைத்து விட்டதா?'' என்றேன். ''இன்னும் கிடைக்கவில்லை. இன்னும் சிறிது நேரம் படம் பார். கிடைத்துவிடும்'' என்றார் அம்மா. அதைக் கவனித்த ஏழு வயது பாலாஜி, ''ஐயோ, பெரியம்மாவுக்கு ஒன்றுமே தெரியலை! இந்தியாவிற்கு 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாளே சுதந்திரம் கிடைச்சிட்டது'' என்றான் அப்பாவித்தனமாக. நாங்கள் அனைவரும் சிரித்துவிட்டோம்.

– எஸ். காளிசரன், சாத்தனூர் அணை.



விஷம்

எனது தம்பி அன்பழகனுக்கு மூன்று வயது இருக்கும். ஒருநாள் நான் மளிகை சாமான்கள் வாங்கக் கடைக்குச் செல்லும்போது அவனும் என் கூடவே வந்தான். அண்ணா, எனக்கு மிட்டாய் வாங்கிக் கொடு என்றான். மிட்டாய் சாப்பிட்டால் சொத்தைப் பல் வரும் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு, ''மிட்டாய் சாப்பிடக் கூடாது. அது விஷம்'' என்று கூறினேன். அவனும் பேசாமல் இருந்து விட்டான். மறு நாளும் நான் கடைக்குச் செல்ல அவனையும் என்னுடன் அழைத்துச் சென்றேன். எனது வாய் நமநம என்று இருந்ததால் ஒரு புளிப்பு மிட்டாய் வாங்கிச் சாப்பிட்டேன். பின்னர் அவனை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன். அவன் நேராக அம்மாவிடம் சென்று, ''அம்மா, அண்ணன் விஷம் சாப்பிட்டு விட்டான்'' என்று கூற, பதற்றமடைந்த முகத்துடன் அம்மா ஓடிவந்து, 'தம்பி சொன்னது உண்மையா?' என்று கேட்டாள். அம்மாவிடம் நான் நடந்ததை விளக்கியதும் ஒரே சிரிப்புத்தான்.

– கு. கருணாநிதி, சோழன் மாளிகை.

எப்போ குறையும்?

ஒருநாள் மளிகை சாமான்கள் வாங்குவதற்காக நானும் என்னுடைய


தாயாரும் எங்கள் ஊரில் உள்ள மளிகைக் கடைக்குச் சென்றோம். அங்கு வந்த ஒருவர் கடைக்காரரிடம், ''சீனி என்ன விலை?'' என்று கேட்டார். கடைக்காரர், ''கிலோ பதினைந்து ரூபாய்'' என்று சொன்னார். உடனே விலை கேட்டவர், ''எப்போது குறையும்?'' என்று கேட்க, உடனே கடைக்காரர் வேடிக்கையாக, ''எடை போடும்போது குறையும்'' என்று சொல்ல, அங்கிருந்தவர்கள் அனைவரும் சிரித்தோம்.

– எஸ். தட்சிணாமூர்த்தி, நாகலூர்.

டிக்கெட்


நான் நான்காம் வகுப்புப் படிக்கிறேன். முதல் வகுப்புப் படிக்கும் என் தம்பி ரமேஷ் சரியான சுட்டி! எல்லோரிடமும் வெளிப்படையாய் 'பளிச்' சென்று பேசிவிடுவான். உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்ள பெற்றோருடன் நானும் தம்பியும் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த போது ரமேஷின் சுட்டித்தனமும், பட்டவர்த்தனமான பேச்சையும் கேட்டு சக பயணிகள் ரசித்துக் கொண்டிருந்தனர். மாம்பலம் ஸ்டேஷனில் ரயிலை விட்டு இறங்கியதும் டிக்கெட் பரிசோதகர் என் தந்தையிடம் டிக்கெட் கேட்க, என் தந்தை பையிலிருந்த டிக்கெட்டைத் துழாவ, இடைமறித்த என் தம்பி டி. ஸி. யிடம், ''அங்கிள், இந்த டிக்கெட் வாங்க நாங்கள் மூன்று ரூபாய் கொடுத்தோம். நீங்கள் மூன்று ரூபாய் கொடுத்தால்தான் உங்களிடம் டிக்கெட்டைக் கொடுப்போம்'' என்று வாயாட, டி. ஸி. மனம் விட்டுச் சிரித்தார்.

– ரம்யா, சென்னை - 91.



ராஜா ராணி தெரியுமா?

அம்மாவுடன் பண்ருட்டியிலுள்ள சித்தி வீட்டிற்குச் சென்றிருந்தோம். என் சித்திக்கு இரண்டு பெண்கள். அவர்களில் இரண்டாவது பெண் படுசுட்டி. அவள் யு. கே. ஜி. படிக்கிறாள். ஒருநாள் இரவு படுக்கப் போகும்போது என் அம்மாவிடம், ''கதை சொன்னால்தான்



தூங்குவேன்'' என்றாள். அம்மாவும் ''ராஜா, ராணி கதை சொல்கிறேன்'' என்று கூறிவிட்டு, ''உனக்கு ராஜா, ராணி என்றால் யார் தெரியுமா?'' என்று கேட்டாள். ''ஓ, தெரியுமே!'' என்று கூறிவிட்டு, ''ஆர், ஏ, ஜே, ஏ ராஜா என்றும், ஆர், ஏ, என், ஐ ராணி'' என்றும் பட்டென்று கூறினாள். நாங்கள் சிரித்த சிரிப்பிற்கு அளவே இல்லை.

– ம. நந்தினி, பிள்ளையார்பட்டி.

''காதை''ப் பிடி!

நானும், என் சின்னத் தம்பியும் கடைக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தோம். நான் முன்னால் சென்று கொண்டிருந்தேன். அவன் எனக்குப் பின்னால் ஒரு துணிப் பையுடன் வந்து கொண்டிருந்தான். அவன் திடீரென்று, ''அண்ணே! பை வழுக்கிக் கொண்டே போகுது'' என்றான். உடனே நான், ''இரு காதையும் நல்லாப் பிடித்துக் கொள்ளேன்டா'' என்றேன். திடீ




ரென்று ஏதோ கீழே விழும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். தம்பி பையைக் கீழே போட்டுவிட்டுத் தன் இரு காதுகளையும் பிடித்துக் கொண்டிருந்தான்! நான் சொன்னது பையின் இரு காதுகளையும் பிடித்துக் கொள் என்று. அவனோ தன்னுடைய இரு காதுகளையும் பிடித்துக் கொண்டிருந்ததைப் பார்க்க கோபம் வந்தாலும் என்னையுமறியாமல் விழுந்து விழுந்து சிரித்தேன்!

– பாளை. பகம்பொன்,
திருநெல்வேலி – 11.

ஆயிரம் ரூபாய்!

எங்கள் குடும்ப நண்பர் இராதாகிருஷ்ணன் வங்கியில் கேஷியர் பொறுப்பு வகிப்பவர். ஒருநாள் பணிகளை முடித்துப் பணம் கணக்கு பார்க்கும்பொழுது ஆயிரம் ரூபாய் அதிகம் இருப்பதைப் பார்த்தார்.



உடனே அன்று பணம் கட்டியவர்கள் எத்தனை பேர், எவ்வளவு கட்டினார்கள் என்று சோதித்தார். மூன்று பேர் பெரிய தொகை கட்டியிருப்பது தெரிந்தது. அவர்களுடைய முகவரியைக் குறித்துக் கொண்டார். வங்கி நேரம் முடிந்தது. வீட்டிற்குச் செல்லாமல் முகவரியைப் பார்த்து அந்த வீடுகளில் சென்று விசாரித்தார். இரண்டு வீடுகளில் பணத்தைக் கணக்குப் பார்த்துச் சரியாக இருப்பதாகச் சொன்னார்கள். கடைசியாக மூன்றாவது வீடு. இராதாகிருஷ்ணன் அந்த வீட்டைத் தேடிச் சென்றார். போனதுமே அவர்களுடைய முகவாட்டத்திலிருந்தும் பேச்சிலிருந்தும் அவர்கள் பணம் தொலைத்து விட்டிருந்ததைப் புரிந்து கொண்டார். விசாரித்தார். உறுதியாயிற்று. விவரத்தைக் கூறி ஆயிரம் ரூபாயை அவர்களிடம் ஒப்படைத்தார். பெரிய பொறுப்பில் இருந்தாலும் கடமை உணர்வுள்ள இராதாகிருஷ்ணன் போன்றவர்கள் நம் நாட்டில் இன்றும் இருக்கிறார்கள். இப்படி ஊருக்கு ஊர் இராதாகிருஷ்ணன் இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும்?

– வஸந்தா, சென்னை – 22.

கேளுங்கள் சொல்லப்படும்!

★ அடிமை வியாபாரத்தை எதிர்த்து முதலில் குரல் கொடுத்தவர் ஆப்ரஹாம் லிங்கன்தானே? வெ. சாந்தம்மா, நெல்லிக்குப்பம்.

மனிதர்களை அடிமையாக்கிக் கொள்வது என்பதைச் சட்ட விரோதமாக்கிய வெற்றி ஆப்ரஹாம் லிங்கனுக்குத்தான்; சந்தேகமில்லை. ஆனால், 'அடிமை கொள்வது என்பது மனிதன் செய்யக் கூடிய செயலே அல்ல. அது இழிவான செயல் என்று முதலில் குரல் கொடுத்த பெருமைக்கு உரியவர் 'யூரிபைட்ஸ்' ("EURIPIDES")



கான்ஸ்டபிள் அங்கிள்

பூவை அமுதன்



வேகவேகமாக நடந்து கொண்டிருந்தான் விநாயகம். முதல் மணி அடிப்பதற்குள் வகுப்புக்குள் இருந்தாக வேண்டுமே! சரியான நேரத்தில்தான் புறப்பட்டான். வழியிலே ஒரு நாய்க் குட்டியைப் பார்த்தான். அது எப்படியோ சாலையின் மையப் பகுதிக்கு வந்து விட்டது.

அந்தச் சாலையின் இரு பக்கங்களிலும் வேகமாக வண்டிகள் போய்க் கொண்டும் வந்து கொண்டுமிருந்தன. எந்தப் பக்கம் போவது என்று தெரியாமல் பயந்து நடுங்கியதைப் போல் அது 'வீல் வீல்' என்று கத்திக் கொண்டிருந்தது. சாலையோரமாகப் பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்த விநாயகத்தின் கண்ணில் அது பட்டு விட்டது. அவனுக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. எத்தனையோ பேர் பார்த்துக் கொண்டே போகிறார்களே! வேகமாக வண்டியில் போகிறவர்கள் கிடக்கட்டும் மெதுவாக நடந்து போகிறவர்கள் கூடவா இப்படி அலட்சியப்படுத்துவார்கள்! யாராவது ஒருவர் கூடவா அதைப் பத்திரமாகத் தூக்கி வந்து சாலையோரத்தில் விடக் கூடாது?

தன்னால் முடியுமா என்று விநாயகம் யோசித்தான். விரைவாகச் செல்லும் வண்டிகள் நிறையவே ஓடிக் கொண்டிருந்தன. மேலும் சற்று நேரம் நின்று பார்க்கலாம் என்று தோன்றியது அவனுக்கு. சாலையின் இரு பக்கங்களிலும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு போலீஸ் வேன் வேகமாக வந்து கொண்டிருந்தது. உடனே தன் சட்டைப் பையிலிருந்த கைக்குட்டையை எடுத்து, அந்த வண்டியை நிறுத்துமாறு கையை மேலும் கீழுமாகப் பலமுறை ஆட்டினான். அந்த வண்டியில் நிறைய காவலர்கள் இருந்தார்கள். அவர்கள் அவன் சைகையைக் கவனிக்கவில்லையோ என்னவோ! அந்த வேன் நிற்காமலேயே போய் விட்டது.

பெருத்த ஏமாற்றமாகி விட்டது விநாயகத்துக்கு. அந்த நாய்க் குட்டியைப் பார்த்தான். அப்போது அதுவும் அவனையே பார்ப்பது போலத் தெரிந்தது. கத்திக் கத்தி அதன் குரல் பலஹீனமாகி விட்டது. மிகவும் கம்மியான அதன் வேதனை ஒலி விநாயகத்துக்கு அதிகமான வருத்தத்தைக் கொடுத்தது. நேரம் ஆக ஆக வண்டிகள் அதிகமாக வந்து கொண்டிருந்தன.

பாவம் அந்த நாய்க் குட்டி...! ஏதாவது ஒரு கார், பஸ் அல்லது லாரியின் சக்கரத்தில் மாட்டிக் கொண்டு செத்துப் போய் விடுமோ? அது எப்படி அங்கே வந்து தவிக்க நேர்ந்து விட்டதோ?

சரி, எப்படியோ வந்துவிட்டது. ஏன் அதை யாருமே கவனிக்காமலேயே போகிறார்கள்?

நினைக்க நினைக்க விநாயகத்திற்கு வேதனையாக இருந்தது. அதை யாராவது காப்பாற்றி எடுத்துக் கொண்டு போய்

வீட்டில் வளர்க்க மாட்டார்களா என்ற ஏக்கம் அவனுக்குள் எழுந்தது.

அந்த நாயை விடவும் அதிகமாகத் தவித்தான் விநாயகம்.

அப்போது கான்ஸ்டபிள் ஒருவர் அவவிருந்த பக்கமாகச் சைக்கிளில் மெதுவாக வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். திடீரென்று அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. ''அங்கிள்! அங்கிள்! கான்ஸ்டபிள் அங்கிள்!'' என்று கூவிக் கொண்டே அவர் எதிரே ஓடினான்.

''என்ன தம்பி! எல்லாரும் என்னைச் சாருன்னு கூப்பிடுவாங்க! நீ என்னமோ சொந்தக்காரப் பிள்ளை மாதிரி அங்கிள்னு சொந்தம் பாராட்டிக் கூப்பிடறயே!'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே சைக்கிளை விட்டுக் கீழே இறங்கி அவன் பக்கம் வந்தார் கான்ஸ்டபிள்.

''அங்கிள்! பாவம்... அந்த நாய்க் குட்டி...!'' என்று கையை நீட்டிக் காட்டினான் விநாயகம்.

''அடடே! அது ஏன் அங்கே போச்சு?'' என்று 'த்சு த்சு' சப்புக் கொட்டினார் கான்ஸ்டபிள்.

''ரெண்டு பக்கமும் ஓடற வண்டியைக் கொஞ்சம் நிறுத்துங்க அங்கிள். நான் ஓடிப் போய் அதைத் தூக்கிக்கிட்டு வந்திடறேன்?'' என்று கெஞ்சும் பாவனையில் கேட்டான் விநாயகம்.

அவர் அவன் முதுகிலே செல்லமாகத் தட்டிக் கொடுத்தார். அடுத்த நிமிஷமே அவர் விசிலை எடுத்துப் பலமாக ஊதிக் கொண்டு சாலையின் குறுக்கே சென்றார். விநாயகமும் அவர் பக்கத்திலேயே நடந்து சென்றான்.

கான்ஸ்டபிள் தம்முடைய இரு கைகளையும் தோள் பட்டைக்கு நேராக உயர்த்தி விரித்தபடி சாலையின் மையப் பகுதியிலே நின்றார்.

அடுத்தகணமே எல்லா வண்டிகளும் வேகத்தைக் குறைத்து, அவருக்கு முன்னும் பின்னுமாக நின்று விட்டன. விநாயகம் ஓட்டமாக ஓடி அந்த நாய்க் குட்டியைத் தூக்கிக் கொண்டு சாலையின் ஓரத்துக்கு வந்து விட்டான். அதற்குப் பின் கான்ஸ்டபிள் கைகளைத் தாழ்த்தி, சாலையில் வண்டிகளை ஓட அனுமதித்தார்.

விநாயகம் காவலர் மாமாவை நன்றியோடு நோக்கினான். அவரும் அவனை அன்போடு நோக்கினார்.

விநாயகத்தின் கரங்களிலிருந்த அந்தக் கறுப்பு நாய்க் குட்டிக்கு அப்போதும் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

''சரி தம்பி! குட்டியைப் பத்திரமாகக் கொண்டு வந்திட்டே. இப்போ... என்ன செய்யப் போறே?'' என்று கேட்டார் காவலர் மாமா.

''இதை ஓரமா விட்டிட்டுப் போக முடியாதே அங்கிள். மறுபடியும் நடுரோட்டுக்குப் போயிட்டாலும் போயிடுமே!''

''ஆமாம். அதுக்கு நீ என்ன பண்ணப் போறே?''





''நான் பள்ளிக்கூடம் போய்க்கிட்டு இருக்கேன்.''

''வீட்டுக்குக் கொண்டு போய் விட்டு விட்டுப் போயேன்?'' என்றார் காவலர்.

''அங்கிள். எங்கள் வீட்டிலே ஏற்கெனவே ரெண்டு நாய் இருக்கு. இதைப் பார்த்தால் அதுங்க குலைக்கும். வீட்டிலேயும் ஒத்துக்க மாட்டாங்க!''

''சரி... பள்ளிக்கூடத்துக்கு அருகிலே எங்காவது விட்டு விட்டுப் போ...'' என்றார் காவலர்.

''இந்தக் குட்டியைப் பார்த்தால் சில பையன்கள் காதைப் பிடிச்சித் தூக்குவானுங்க... பாவம்... அநியாயமா துடிச்சிச் செத்தே போயிடும்'' என்று பரிதாபப் பட்டான் விநாயகம்.

காவலர் மாமா சிறிது நேரம் யோசித்தார். அவருக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது.

''தம்பி! எனக்கு வழி தெரிஞ்சிட்டது. இந்தக் குட்டியைக் கொண்டு போய் 'புளு கிராஸ் சொசைடி'யிலே விட்டுட்டுப் போறேன். அங்கே மிருகங்களைக் காப் பாத்தறாங்க...'' என்றார்.

''ஓ... அதுவா! ரெட்கிராஸ் சொசைடி போல.. அதுதான் மனிதர்களுக்கு உதவி செய்யும் செஞ்சிலுவைச் சங்கம் போல மிருகங்களுக்கு உதவி செய்யும் நீலச் சிலுவைச் சங்கம் ஏற்படுத்தியிருக்காங் களே, அதானா?''

''ஆமாம்... நான் டவுனுக்குத்தான் போறேன். அங்கே புளு கிராஸ் சொசைடி இருக்கு. நான் பத்திரமா... இந்த நாய்க் குட்டியை அங்கே கொண்டு போய்ச் சேர்க்கிறேன். நீ நேரத்தோடு பள்ளிக் கூடம் போ!'' என்றார் கான்ஸ்டபிள் அங்கிள்.

விநாயகம் இரு கரங்களையும் குவித்து அவருக்கு நன்றி தெரிவித்தான். அவர் சிரித்தார். அவனுடைய அன்பு உள்ளத் தைப் பாராட்டினார்.

''தம்பீ! உன் பேர் என்ன?''

''விநாயகம்!''

''எங்கே படிக்கிறாய்?''

''திருவள்ளுவர் உயர்நிலைப்பள்ளி யிலே!''

அதற்குப் பிறகு விநாயகத்தின் வீடு எங்கே இருக்கிறது. பெற்றோர் யார் என்பதையெல்லாம் விசாரித்தார் கான்ஸ் டபிள் அங்கிள். அவனும் சொன் னான்.

''தம்பி! நீ நல்லாயிருக்கணும். உனக்கு இன்னும் நிறைய நல்ல குணமெல்லாம் வளரும். அதனாலே உனக்கும், உன் அப்பா அம்மாவுக்கு மட்டுமில்லே உன் பள்ளிக்கூடத்துக்கும் நல்ல பேர் கிடைக் கும். ஏன்... உன்னைப் போலப் பிள்ளை களாலே நாட்டுக்கும் எவ்வளவோ நன்மை உண்டாகும்'' என்று வாழ்த்தி விட்டுப் போனார் கான்ஸ்டபிள் அங்கிள். அவரோடு போகும் போது அந்த நாய்க் குட்டி தன்னை நன்றியோடு பார்ப்பதாக விநாயகத்துக்குத் தோன்றியது.

ஒரு கரத்தில் அந்த நாய்க் குட்டியை வைத்து மார்போடு அணைத்துக் கொண்டு, மறு கரத்தில் சைக்கிள் ஹாண்டி லைப் பிடித்துக் கொண்டு முன் போலவே சைக்கிளை மிதித்துக் கொண்டு மெதுவாக முன்னே சென்று கொண்டிருந்த கான்ஸ்ட பிள் மாமாவைப் பெருமையாக நினைத் துக் கொண்டே வேகமாக நடந்தான் விநா யகம்.

அன்றைக்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்த திருப்தி அவன் மனத்தில் நிறைந்திருந்தது. அதே சமயம் பள்ளிக்கு நேரமாகி விடக் கூடாதே என்ற கவனமும் கவலையும் அவன் நடையைத் துரிதப் படுத்தின.

காஞ்சி முனிவரிடம் பக்தி கொண்டிருந்த ஒரு நாய் பற்றிய கதை!

நாய்க்கும் கிடைத்த அன்பு

நாய்கள் என்றுமே நல்லறிவு மிக்கவை. நன்றி உணர்வு நிரம்பப் பெற்றவை. அவற்றைப் பற்றி உலகம் முழுதும் எல்லா நாடுகளிலும் வேண்டிய கதைகள் இருக்கின்றன. சத்ரபதி சிவாஜியிடம் ஒரு நாய் இருந்தது. அவர் இறந்து, அவரது உடல் எரியும் போது, வளர்த்தவரைப் பிரிந்த துயரம் தாங்க முடியாமல் எரியும் சிதையில் அதுவும் தாவி விழுந்து உயிர் விட்டதாம்! அத்தகைய நல்லறிவும் பக்தியும் மிக்க நாய் ஒன்றின் கதை இது.

சமீபத்தில் தனது நூறாவது வயதில் சித்தியடைந்த காஞ்சி முனிவரிடம் இலட்சக்கணக்கானவர்கள் பக்தி கொண்டிருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், நாய் ஒன்றும் அவரிடம் மாறாத அன்புடன் பழகி வந்தது என்பது பலருக்குத் தெரியாத ஒன்று.

1927-ஆம் ஆண்டு முதல் அந்த நாய் காஞ்சி மடத்தில் வசித்து வந்தது. மடத்தின் முகாம் எங்கு சென்றாலும், அதுவும் கூடவே செல்லும். மற்ற நாய்களிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டிருந்தது. அசுத்தங்களை முகர்ந்தும் பார்க்காது. இரவு முழுதும் விழித்திருந்து, முகாமைச் சுற்றிச் சுற்றி வந்து, மடத்தின் பொருள்களைக் களவு போகாமல் காவல் காக்கும். மடத்தினர் தாங்களாகவே தனக்கு என்ன உணவு போடுகிறார்களோ அதை மட்டுமே உண்ணும். வெளியார், எது கொடுத்தாலும் உண்ணாது. காஞ்சி முனிவரிடம் தளராத பக்தியும் அன்பும் கொண்டதாக இருந்தது.

காஞ்சி சுவாமிகளுக்கும் அதனிடம் தனித்த ஈடுபாடு இருந்தது. தினமும் வேளை தவறாமல் மடத்தினரிடம், "நாய்க்கு உணவு போட்டு விட்டீர்களா?" என்று மறக்காது கேட்டறிந்து இன்புறுவார். அப்போதெல்லாம் அவர் முகத்தில் நாயின் நன்றியுடைமை பற்றிய மகிழ்ச்சி புன்முறுவலாக வெளிப்படும்.

ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு முனிவர் பல்லக்கில் அமர்ந்து பயணம் செய்யும் போது, அந்த நாய் பல்லக்கின் கீழேயே நிழலில் நடந்து போகும். வழியில் பக்தர்களைக் கண்டதும், தரிசனம் கொடுப்பதற்காகப் பல்லக்கு நிற்கும். உடனே நாய் விலகிப் போய் சற்றுத் தொலைவில் ஒதுங்கி பிறர் கண்ணில் படாது நின்று கொள்ளும். பிறகு, பல்லக்கு நகரும் போது மறுபடி ஓடி வந்து அதன் கீழ் பழையபடி நடக்கும். சில சமயம் முன்னால் செல்லும் யானையின் நான்கு கால்களுக்கு நடுவிலும் நடந்து செல்லும். சுவாமிகளைத் தரிசிக்க வரும் பக்தர்களைக் கண்டால் வாலைக் குழைத்து வந்து வரவேற்கும். பிறகு தானே ஒதுங்கிப் போய் நிற்கும். வழக்கமாகத் தனக்கு உணவிடுபவர் உணவிட மறந்து போய் விட்டால், அதற்காக அது வேறு எங்கும் போய் உணவு தேடாது! அங்கேயே பட்டினி கிடக்கும்!



அந்த அதிசய நாயை, ஒருநாள், ஒரு போக்கிரிச் சிறுவன் கல்லால் அடித்து விட்டான். உடனே அது குரைத்துக் கொண்டு புதுமையாக அவனைத் துரத்தியது. எங்கே அது தரிசனத்திற்காக வருபவர்களைக் கடித்து விடுமோ என்ற அச்சத்தில் அதன் கண்களைக் கட்டி மறைத்து, இருபத்தைந்து மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு கிராமத்திற்குக் கொண்டு போனார்கள். அங்கு அதைக் கயிற்றில் கட்டிப் போட்டு விட்டுத் திரும்பி வந்து விட்டனர்.

ஆனால் என்ன ஆச்சர்யம்! அவர்கள் மடத்தின் முகாமிற்குத் திரும்பி வந்து பார்த்தால், அந்த அதிசய நாய் தன் வழக்கப்படியான இடத்தில் நின்று அவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தது!

எப்படியோ கட்டை அவிழ்த்துக் கொண்டு, வேறு குறுக்குப் பாதை வழியாக, அவர்களுக்கு முன்னால் அது சுவாமிகளின் முகாமை அடைந்து விட்டது!

அது முதல், தனது இறப்பு வரையில் அந்த நாய் சுவாமிகளின் முகாமிலேயே வாழ்ந்தது. ஒருநாள் கூட சுவாமிகளைத் தரிசிக்காமல் உணவு உண்ணாது. சுவாமிகளைத் தரிசிக்க வருபவர்கள், மறக்காமல் இந்த நாயையும் பார்த்து விட்டுத் தான் கிளம்பிச் செல்வார்கள். அந்த அளவுக்கு அது சுவாமிகளிடமும், அவரது பக்தர்களிடமும் ஒன்றி வாழ்ந்து இறுதியில் மடத்திலேயே இறந்து போயிற்று!

– ஜய்ராம்ஜி



" எப்பப் பார்த்தாலும் சீப்பை வைச்சுக்கிட்டு தலையைச் சீவிக் கிட்டேயிருக்கியே! உன் பேர் என்ன?"

"சிரஞ்'சீவி' சார்!"

– எஸ். தட்சணாமூர்த்தி



" 'அட்டை' ரத்தத்தை உறிஞ்சும்னு பசங்களுக்குப் பாடம் நடத்தினது தப்பாப் போச்சு!"

"ஏன் சார்? என்னாச்சு?"

" 'அட்டை' ரத்தத்தை உறிஞ்சிடுமோன்னு பயந்துகிட்டு... பசங்க நோட்டு பாடப் புத்தகங்களைக் கையால தொடக் கூட மாட்டேங்கறானுக!"


" !????????"

– சரோஜ் விஸ்வம்

சுறுசுறுப்புக்கு உதாரணமாகக் கூறப்படுபவை தேனீக்கள். தேனீக்கள் ஒரு சில மில்லி லிட்டர் தேனைச் சேகரிக்க, பல மைல் தூரம் பறந்து சென்று பல மலர்களில் அமர்ந்து அரும் பாடுபடுகின்றன.

பறக்கும் பூச்சி வகையில் மிகச் சிறியது தேனீதான். அவற்றில் பல வகை உண்டு. இதில் பறக்கும் தேனீக்கள் எனப்படும் 'ப்ளையிங் பீ' தேனீக்களைத்தான் நாம் அதிகமாகக் காண்கிறோம்.

ஒரே கூட்டில், மூன்று விதமான தேனீக்கள் இருக்கும் என்பது ஆச்சரியமான உண்மை. ஆம். ராணித் தேனீ, ஆண்தேனீ, உழைப்பாளித் தேனீ என்பவைதான் அந்த மூன்றும். ஆண் தேனீக்களுக்கு அதிகம் வேலை இல்லை. அவை சோம்பேறிகள். 'தேனீக்களில் கூடவா சோம்பேறிகள்' என்கிறீர்களா? இது ஆராய்ந்து கண்டு பிடிக்கப்பட்ட உண்மை!



தேனான செய்திகள்!



உழைப்பாளி அல்லது தொழிலாளி தேனீக்கள்தான் கடுமையாக உழைக்கின்றன. அவை எல்லா விதமான வேலைகளையும் செய்கின்றன. கூட்டைக் கட்டுகின்றன. தேனைச் சேகரித்துக் கூட்டில் பாதுகாக்கின்றன.

ராணித்தேனீ இருக்கிறதே, இது பெயருக்குகேற்றபடி ராணி போலத்தான் செயல்படுகிறது. இதன் வேலை முட்டையிடுவதும் உழைக்கும் தேனீக்களை விரட்டி வேலை வாங்குவதும் தான்!

தேனீக்கள் குளிர்காலத்தில் வெளியே வருவதில்லை. ஒருபோதும் அவை தாங்களாக மற்றவர்களைத் தாக்க எண்ணுவதும் இல்லை. ஆனால், அவற்றை வெறுப்பேற்றவோ தாக்கவோ துணிந்தால் அவ்வளவுதான்! 'நறுக்'கென்று கொட்டிவிடும்.

தமிழ் நாட்டில் கோழி, ஆடு, முயல், மாடு வளர்ப்பது போல் தேனீ வளர்ப்பதையும் ஒரு தொழிலாகக் கொண்டு வாழ்பவர்கள் உண்டு. இது ஓர் இலாபகரமான தொழிலாகவே கருதப்படுகிறது.

சிலர் பெரிய தாடிகளை வளர்த்துக் கொண்டு, அவற்றில் ஆயிரக் கணக்கான தேனீக்களைக் குடியேற வைத்து 'கின்னஸ் சாதனை' கூடச் செய்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!


தேனீக்கள் இந்தியா, ஸ்பெயின், இத்தாலி, எகிப்து, ஜெர்மனி மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன. இந்தியாவில் தேனீக்கள், இமயமலைப் பிரதேசங்களிலும், 'சுந்தர்பன்'னிலும் அதிக அளவுக்குக் காணப்படுகின்றன.

தேனீக்கள் சிறந்த கட்டடக் கலைஞர்கள். தேன்கூட்டை ஒரு சிறந்த கட்டட அமைப்புக்கூடம் என்றே கூறலாம். ஒரே தேன் கூட்டில் 'செல்' எனப்படும் பல அறைகள் இருக்கும். இதில் பல செல்கள் தேனைத் தேக்கி வைப்பதற்காகவும், தேனீக்கள் உறங்குவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. மிக நீளமான குகைபோன்ற அமைப்புகள் இச்செல்களை உள்ளுக்குள் இணைக்கின்றன. எனவே, உள்ளே செல்வதும், வெளியே வருவதும் ஒன்றுக்கொன்று மோதாமல் மிக எளிதாக இருக்கும்.

தேன்கூடுகள் பொதுவாக மரக் கிளைகளில்தான் கட்டப்படும். சில சமயம் அவை சுவர்களிலும், சன்னல் போன்றவற்றின் மேல்பரப்பிலும் கூடக் கட்டப்படுகின்றன. தேனீ நமக்குப் பல வகைகளிலும் பயன் தருகின்றது. குழந்தைகளுக்கும், முதியவர்களுக்கும் உணவை அரைத்து விழுங்க இயலாதோர்க்கும், தேன் உணவாகப் பயன்படுகிறது. தேன் கூட்டில் இருந்து கிடைக்கும் மெழுகு, மெழுகுவர்த்தி செய்யப் பயன்படுகிறது. வெட்டு காயங்களைக் குணப்படுத்தவும், கிருமி நாசினியாகவும் கூட தேன் பயன்படுகிறது.

தேனீக்கள், மலர்விட்டு மலர் பறப்பதால் மகரந்த தூள்கள் செடிவிட்டுச் செடி செல்ல வழி உண்டாகி மகரந்தச் சேர்க்கை நடக்க உதவி புரிகிறது. இந்தியாவில் சமண சமயத்தைச் சேர்ந்தவர்கள் தேனைப் பயன்படுத்துவது கிடையாது. கொல்லாமையை மிகத் தீவிரமாக வலியுறுத்தும் சமண சமயம், மருந்துக்காகக் கூடத் தேனைப் பயன்படுத்துவதை ஏற்பதில்லை! இப்படி எல்லா வகைகளிலும் நமக்கு உதவும் தேனீயைப் போல, சுறுசுறுப்பாயும், மற்றவர்க்கு உதவி புரிந்தும் நாமும் வாழலாம்.

- போரூர் கி. சிவா.




நத்தை

நத்தை மேயும் தழையை
அது விரும்பும் மழையை!
செத்தை சருகின் நடுவில்
திரியும் ஓர மடுவில்!

நாக்கும் பல்லும் ஒன்றாய்
நத்தைக்கு உண்டு நன்றாய்!
தாக்கா இரண்டு கொம்பு
தம்மால் இல்லை வம்பு!

மெல்ல நகரும் நத்தை
விரைவில்லாத வித்தை!
நல்ல உறுதி ஓடு!
நத்தைக்கு அதுவே வீடு!

- மின்னூர் சீனிவாசன்.



முதல் பாடம்!

வெள்ளை நாய்க் குட்டிக்குத் திடீரென்று ஓர் ஆசை ஏற்பட்டது. எந்த மிருகத்தையாவது கடித்து விரட்ட வேண்டும் என அதற்குத் தோன்றியது. 'தன்னால் முடியுமா, மற்ற மிருகங்களின் குணங்களைப் பற்றி நமக்குத் தெரியாதே' என்றெல்லாம் அது சற்றும் யோசித்தே பார்க்கவில்லை.

அருகே சுவற்றில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டரை ஒரு மாடு தின்று கொண்டிருந்தது. நாய்க் குட்டி 'வௌவௌ' எனக் குரைத்துக் கொண்டே அதைக் கடிக்க ஓடியது.

மாடு, ஓடி வரும் நாய்க் குட்டியைச் சட்டை செய்யாமல் தான் பாட்டிற்குத் தின்று கொண்டிருந்தது. எட்டும் தூரத்திற்கு அது வந்ததும், கொம்பைச் சிலிர்ப்பி ஆட்டியது. அவ்வளவுதான்! நாய்க் குட்டி தூக்கி எறியப்பட்டு எட்டப் போய் விழுந்தது.

'வாள் வாள்' எனப் பயத்தில் குரைத்தபடி தாய் நாயிடம் ஓடியது நாய்க் குட்டி.

''இப்படியா மாட்டின் தலைக்கருகே போய்க் கடிக்கப் பார்ப்பாய்? அதுவும் குரைத்துக் கொண்டு? ஓசைப் படுத்தாமல் பின்புறமாகப் போய் கால் பக்கம் கடிக்க முயற்சி செய்,'' என்றது தாய் நாய்.

ஒரு தடவை அடிபட்டதில் அந்தக் குட்டிக்கு மாட்டிடம் மீண்டும் போக அச்சமாக இருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தது அது. ஒரு குட்டிச் சுவரருகே பாதி மூடிய கண்களோடு தியானத்தில் ஆழ்ந்திருந்தது ஒரு வெள்ளி மூக்குக் கழுதை.

நாய்க் குட்டியின் மகிழ்ச்சி அதிகமாகி விட்டது. மெள்ள மெள்ளச் சென்றது அது. கழுதையின் பின்புறத்துக்கு மிக அருகில் போய் விட்டது. ஒரே தாவில் கடித்து விடலாம், என அது எண்ணிய போது...

கழுதை ஓங்கி ஓர் உதை விட்டது.


''வாள், வாள்'' என மீண்டும் கத்திய படி தாயிடம் ஓடியது நாய்க் குட்டி.

''யானைக்கு அர்ரம் என்றால் பூனைக்குப் புர்ரமா! கழுதைக்குப் பின்புறம் போகலாமா?'' என்று கேட்டது தாய் நாய்.

''போ அம்மா! நானே அடிபட்டு அடிபட்டுத்தான் உலகத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் போல இருக்கே!'' என்றது நாய்க்குட்டி. உலகில் முதற் பாடத்தை அது கற்றுக் கொண்டு விட்டது.

- கைலாஸ், திருநெல்வேலி - 11.

எனக்கு வேண்டாம்!



கும்பத்தில் கட்டப்பட்டிருந்த மணி வேலர், மன்னரை அலட்சியமாகப் பார்த்தார்.

"நீங்கள் என்னை சவுக்கால் அடித்துப் பயப்படுத்தினாலும் சரி, என்னுடைய முடிவு மாறாது. புது அரண்மனையைக் கட்டப் போகிறேன் என்று ஊரில் உள்ள எல்லாப் பெரிய மரங்களையும் போன வருடம்தான் வெட்டி எடுத்துக் கொண்டீர்கள். இப்பொழுது என்னுடைய மாந்தோப்பையே வெட்ட அனுமதி கேட்கிறீர்கள். நான் இதற்கு சம்மதிக்க முடியாது" என்றார் மணிவேலர்.

"அரச குடும்பத்திற்குப் புதிய கட்டில்கள் செய்யத்தானே கேட்கிறேன்? அதுவும் நீங்கள் என்ன விலை கேட்டாலும் தரும் சலுகையோடுதானே? அரச குடும்பத்திற்கு உங்கள் மாந்தோப்பு மரங்கள் பயன்படப் போவதை எண்ணி நீங்கள் பெருமைப்பட வேண்டும்" என்றார் மன்னர்.

"அரசே, மரம் என்பது கீரைப் பாத்தியைப் போல், பதினைந்து நாள் பயிர் அல்ல. இப்பொழுது உள்ள மரங்கள் எல்லாமே எங்கள் கொள்ளுத் தாத்தா காலத்தில் வைக்கப்பட்டவை. நான் பிறக்கு முன், நீங்கள் பிறக்கு முன் நடப்பட்டவை. இவற்றின் பயனை அனுபவிக்கத்தான் நமக்கு உரிமை உண்டே தவிர, அவற்றை அழிக்க எனக்கும் உரிமை இல்லை. யாருக்கும் உரிமை இல்லை. ஒரு மரத்தில் எத்தனை புழு பூச்சிகள், பறவை, பாம்பு இனங்கள் வசிக்கின்றன தெரியுமா? நீங்கள், போன ஆண்டு ஏராளமான மரங்களை அழித்த போது, அவற்றில் வாழ்ந்த உயிரினங்கள் எல்லாம் என்னுடைய மாந்தோப்பில்தான் அடைக்கலம் புகுந்திருக்கின்றன. அதனால், எந்த வகையில் பார்த்தாலும் என்னுடைய மாந்தோப்பை நீங்கள் அழிப்பது பெரிய பாவச் செயல் என்பதை எண்ணியாவது, இந்த எண்ணத்தைக் கைவிடுங்கள்" என்று வேண்டினார் மணிவேலர்.

"இவரிடம் சம்மதம் கேட்பதே பெரிய முட்டாள்தனம். இந்தத் திமிர் பிடித்த கிழவரை, நீர் இல்லாத பாழுங் கிணற்றில் தள்ளி, பத்துப் பதினைந்து பாம்பையும் பிடித்துக் கொண்டு வந்து போடுங்கள். பாம்பு கடித்து பாழும் கிணற்றில் அனாதையாக இந்தக் கிழவன் தவித்துச் சாகட்டும்" என்று மன்னர் உத்தரவிட்டார்.

"நான் வயதானவன். என்னுடைய உயிருக்காக நான் கவலைப்படவில்லை. உங்களுடைய பிடிவாதமான போக்கால் நூற்றுக்கணக்கான மரங்கள் அழிக்கப் பட்டு, இந்த ஊரின் இயற்கைவளம் பாதிக்கப்படப் போகிறது. அது மட்டுமா? இலட்சக்கணக்கான உயிரினங்கள் ஒன்றாக அழியும் இந்த ஊரே இயற்கை வளம் இழந்து, பாலைவனம் போல் ஆகப்போகிறது. வருங்கால மக்கள் உங்களைத் திட்டுவார்கள். இந்தப் பாவமான எண்ணத்தைக் கைவிடுங்கள். மரங்களை வெட்டாதீர்கள்" என்று கதறி அழுதார் மணிவேலர்.

"இந்தக் கிழவரை இழுத்துக் கொண்டு போங்கள்" என்று கர்ஜித்தார் மன்னர்.

மணிவேலரை இழுத்துக் கொண்டு போனார்கள். நீரே இல்லாத ஒரு பாழுங் கிணற்றில் அவரைத் தள்ளினார்கள். பத்துப் பதினைந்து பாம்புகளையும் பிடித்துக் கொண்டு வந்து போட்டார்கள்.

இந்தப் பாம்புகள் எல்லாம் நம்மைக் கடித்து நம்முடைய வாழ்க்கை முடியப் போகிறது என்று எண்ணினார் மணிவேலர். ஆனால், அத்தனை பாம்புகளும் அவருடைய உடலில் ஊர்ந்தனவே தவிர, ஒன்றாவது அவரைக் கடிக்கவில்லை. அவருக்கு அதிசயம் பிடிபடவில்லை.



"மணிவேலரே, எங்களை உங்களுக்குத் தெரியாது. ஆனால், உங்களை எங்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்களெல்லாம் உங்கள் மாந்தோப்பில் வாழும் பாம்புகள்தான். மாந்தோப்பு அழிந்தால், நாங்களும் அழிவோம். மாந்தோப்பைக் காக்க நீங்கள் மன்னரை எதிர்த்து, இந்தக் கொடிய தண்டனையை அனுபவிப்பது எங்களுக்காகத்தானே? உங்களை நாங்கள் கடித்தால், எங்களுக்கும் மன்னருக்கும் என்ன வித்தியாசம்? நாங்கள் நன்றி உள்ளவர்கள்" என்று பாம்புகள் படமெடுத்து அவரை வணங்கின!

"நாங்கள் மட்டும் நன்றி இல்லாதவர்களா? மணிவேலரே, உங்களைப் பட்டினியால் இறக்க விட மாட்டோம்" என்று மேலே இருந்து குரல் கேட்டது. பறவைகளும், குரங்குகளும் கூட்டமாக கிணற்றின் கைப்பிடிச் சுவரில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

"மணிவேலரே, நாங்களும் உங்கள் மாந்தோப்பில் வசிக்கும் உயிரினங்கள் தான். பழங்களைப் பறித்து எடுத்து வந்திருக்கிறோம். பசியாறச் சாப்பிடுங்கள். இருட்டினதும் கயறு கொண்டு வருகிறோம். மேலே ஏறி வந்து விடுங்கள்" என்றன குரங்குகள்.



''உங்களைப் போன்ற உயிரினங்களு டன், என்னுடைய மாந்தோப்பு அழிந்த பிறகு நான் மட்டும் உயிர் வாழ எனக்கு விருப்பம் இல்லை'' என்று பிடிவாத மாகக் கூறி மேலே ஏறி வந்து தப்பித்து உயிர்வாழ மறுத்து விட்டார் மணி வேலர்.

மறுநாள் காலை மன்னர் தனது அறையில் உறங்கிக் கொண்டிருந்தார். திடீரென்று ஏதோ சத்தம் கேட்டது.



விழித்துக் கொண்டு பார்த்தார். அவரு டைய அறையில் பத்தாயிரத்திற்கு மேற் பட்ட பறவைகள் 'கசமுச கசமுச'வென்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தன! மேலும் மேலும் பறவைகள், ஜன்னல் வழியாக வந்து குவிந்து கொண்டிருந்தன. காகம், குருவி, கிளி, மைனா என்று எல்லாவிதமான பறவைகளும் அதில் இருந்தன.

''என்ன இது!'' பரபரப்போடு எழுந்து கையை வீசினார் மன்னர். வீசிய இடத்தில் ஏற்பட்ட இடைவெளி, அடுத்த கணத்தில் பறவைகளால் நிறைந்து விட்டது. சுவர், அறை, கதவு எங்கு பார்த் தாலும் பறவைக் கூட்டம்!

''எங்கிருந்து நீங்களெல்லாம் வரு கிறீர்கள்?'' என்று கலவரத்துடன் கேட் டார் மன்னர்.

''நாங்கள் மணிவேலரின் மாந் தோப்பு மரங்களில் வசிக்கும் பறவை கள். நீங்கள் மாந்தோப்பை அழித்தவுடன் வசிக்க இடமில்லாது நாங்கள் அழியப் போகிறோம். அப்பொழுது அழிவதை விட, இப்பவே நாங்கள் உங்கள் கண் முன்னால் அழிந்தாலாவது உங்கள் மனம் மாறாதா என்ற ஆசையில் இங்கே கூடு கிறோம்'' என்றன பறவைகள்.

''ஓகோ! இதெல்லாம் அந்தக் கிழட்டு மணிவேலரின் தந்திரமா?'' என்று வெகுண்ட மன்னர், ஆட்களை

அழைத்து வெடிவெடிக்க உத்தரவிட்டார். பாவம், அத்தனை பறவைகளும் பயந்து பறந்தோடின.

"மன்னவா, பாழுங்கிணற்றில் தள்ளப்பட்ட மணிவேலரை எந்தப் பாம்பும் கடிக்கவில்லை!" என்று ஓடி வந்து கூறினர் பணியாளர்கள்.


"இழவன் பெரிய மாயக்காரனாக இருப்பான் போலிருக்கிறது. நமது வீரர்களைக் கொண்டு நாளை காலை, கிணற்றில் அம்பு எய்து மணிவேலரைக் கொன்று விட ஏற்பாடு செய்யுங்கள்" என்று உத்தரவிட்டார் மன்னர்.

அன்று இரவு. பாழுங்கிணறு. மணிவேலர் சோர்வுடன் படுத்திருந்தார். திடீரென்று கிணற்றில் நீல ஒளி வெள்ளம் நிறைந்தது. அழகான தேவதை ஒன்று மணிவேலரின் முன்னால் வந்து இறங்கி, மண்டியிட்டு அவரை வணங்கியது.

மணிவேலர் பயத்துடன் எழுந்து நின்றார்.

"மணிவேலரே, உங்கள் தியாகத்தைப் பாராட்டி உங்களுக்கு ஒரு பரிசு தர விரும்புகிறேன்" என்று கூறிய தேவதை, ஒரு சந்தனக் கல்லையும் கட்டையும் மணிவேலரிடம் தந்தது.

"மணிவேலரே, இதில் அரைத்தால் பொன்னிறமான சந்தனக் குழைவு வரும். அதைப் பூசிக் கொண்டால், கத்தியோ, ஈட்டியோ அல்லது வேறு எந்தவிதமான ஆயுதத்தாலும் உங்களை ஒன்றும் செய்ய முடியாது" என்று கூறி மறைந்தது வன தேவதை.



"அதோ அந்தப் பையன் ஒரு நடமாடும் நூலகம்டா."

"எப்படிச் சொல்றே?"

"தினமும் ஸ்கூலுக்கு எத்தனை புத்தகம் சுமந்துக்கிட்டுப் போறான்னு பாரு, தெரியும்!"

: சீர்காழி. வி. ரேவதி

"குரங்குகளே, கயிறைப் போடுங்கள். நான் உடனே மாந்தோப்புக்குப் போக வேண்டும்" என்று பதைபதைத்தார் மணிவேலர்.

"குரங்குகளே" என்று அழைத்த அவர், "இந்தச் சந்தன விழுதை எடுத்துக் கொண்டு போய், தோப்பில் உள்ள எல்லா மரங்களிலும் பூசி விடுங்கள். தேவதை தந்துள்ள வரத்தின்படி, ஈட்டி, கோடாரி, கத்தி என்று எந்த ஆயுதத்தாலும் மரங்களை எதுவும் செய்து விட முடியாது. மரங்கள் அழிவில் இருந்து தப்பி விடும்" என்றார் மணிவேலர்!

தோப்பில் ஒளி வெள்ளம் நிறைந்தது. வனதேவதை மீண்டும் தோன்றியது.

"மணிவேலரே, நான் அளித்த பரிசைக் கொண்டு, உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்யாது, மரங்களைக் காக்க நீங்கள் முயன்றிருப்பது, உங்கள் உறுதியான தியாகத்தையும், மரங்களை நேசிக்கும் உன்னத குணத்தையுமே காட்டுகிறது. உங்கள் தியாகம் ஒப்புயர்வற்றது" என்றது தேவதை.

"மணிவேலரே, இத்தனை நேரமும் இங்கே நடந்த எல்லாவற்றையும் நானும் மறைந்து பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். மரங்களைக் காக்க நீங்கள் இத்தனை பெரிய தியாகம் செய்திருக்கும் போது, நான் மட்டும் சுயநலவாதியாக இருப்பதை எண்ணி வெட்கப்படுகிறேன். இனி எந்த மரத்தையும் வெட்ட உத்தரவிட மாட்டேன்" என்றார் மன்னர்.

"தேவதையே, மரங்களை நேசிக்கும் எங்கள் மன்னருக்கு பூரணமான ஆயுளைக் கொடு" என்று மகிழ்ச்சியோடு வேண்டிக் கொண்டார் மணிவேலர்!



எல்லாம் நன்மைக்கே!

தவசி ஒருவர் இருந்தார். தனது வாழ்வில் எத்தகைய பெரிய துன்பம் நேர்ந்தாலும் ''இறைவன் அருளால் எல்லாம் நன்மைக்கே'' என்றே கூறுவார். ஒரு தடவை அவருடைய ஆடு ஒன்று காணாமல் போய் விட்டது. மக்கள் அனைவரும் வந்து அனுதாபத்துடன் ஆறுதல் கூறினார்கள்.

தவசி, ''இறைவன் அருளால் இதுவும் நன்மைக்கே'' என்று கூறினார். மக்கள், ''சரியான பைத்தியம்!'' என்று கூறினார்கள்.

ஒரு வாரம் கழித்து, காணாமல் போன ஆடு காட்டிலிருந்து வேறு சில ஆடுகளையும் அழைத்து வந்தது. இந்தச் செய்தியை மக்களிடம் தவசி பெருமையாகக் கூறினார்.

அடுத்த வாரம் தவசியின் மகன் இளைஞன், ஆடுகளுக்கு இலை ஒடிக்க மரத்தில் ஏறிய போது, கீழே விழுந்து அவனுடைய கால் ஒடிந்தது. மக்கள் கிண்டல் பேசினர். பிறகு அனுதாபத்துடன் அணுகினர். தவசி உடனே, ''இறைவன் அருளால் இதுவும் நன்மைக்கே'' என்றார்.


அடுத்த வாரம் கிராமத்திற்கு தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் வந்தனர். ஊரையே சூறையாடினர். போகும் போது வீட்டிற்கு ஓர் இளைஞனைத் தங்களோடு அனுப்ப வேண்டுமென கொள்ளைக்காரர் தலைவன் உத்தரவிட்டான். கால் ஒடிந்திருந்ததால் தவசியின் மகன் தப்பினான். இரண்டொரு மாதம் கழித்து கொள்ளைக் கூட்டத்தாரால் பயிற்சி அளிக்கப்பட்ட கிராமத்து இளைஞர்கள் அரசனால் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டனர். மக்கள் அதற்குப் பிறகு தவசியைக் கேலி செய்வதை நிறுத்திக் கொண்டனர். இறைவன் அனுமதியின்றி 'எதுவும்' நடைபெறாது. இறைவன் நன்மையே செய்வான் என்பதில் கடைசி வரை உறுதியாக இருந்து காட்டினார் தவசி.

– எஸ். காந்திராஜ், மதுரை.

கைகளில் இருப்பவை என்ன? - போட்டி



இங்கே பத்துப் பேர் இருக்கிறார்கள். இவர்கள் கைகளில் என்னவோ இருக்கிறது. இவை என்ன என்று கண்டுபிடித்து எழுதுவதுதான் போட்டி. இதோ கொஞ்சம் துப்பு. விளையாட்டு வீரர், பள்ளிச் சிறுமி, கைதி, கிளி ஜோசியக்காரர், மழையில் போகும் தம்பி, வேலைக்காரி, சர்க்கஸ் கலைஞர், பொம்மை இழுக்கும் பாப்பா, கிரிக்கெட் ஆட்டக்காரர், தவில் கலைஞர். இப்படிப் பத்துப் பேர். கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புவது அவசியம். அயல்நாட்டிலுள்ளோர், இந்தியாவில் உள்ள நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.



கைகளில் இருப்பவை என்ன? - போட்டி


பெயர் : ....

வயது : ....

முகவரி : ....

பின்கோடு : ....

முடிவு தேதி : 31.3.94




ஏழை பாத்திமாவுக்கு மூன்று பிள்ளைகள்; ஒரு பெண் – தினமும் மூத்தவன் முகம்மதுவும் அடுத்தவன் அகம்மதுவும் வயல் வேலைக்குக் கிளம்புவார்கள்....
காஸிம்
கதை: ஆனந்தி
படம்: ஜெ....
அன்று –
அம்மா நாங்க கிளம்பறோம்.
காஸிமிடம் சாப்பாடு அனுப்பு.
நடுப்பகல் –
காஸிம்! அண்ணன்களுக்கு சாப்பாடு கொண்டு போ!
போம்மா! முடியாது! ஒரே வெய்யில்!
ஸலீமா முன் வந்தாள் –
நான் கொண்டு போறேன் அம்மா!
வழியில்... ஸலீமா எதிரே மாயமாய் ஒரு பூஞ்சோலை எதிர்ப்பட்டது –
வண்ணப் பூக்கள்...!
பட்டாம் பூச்சிகள்!... என்ன அழகு!
அவளுக்குப் பின்னால் ஒரு மாயக் கிழவி....
வயலைக் காணோமே? வழி தப்பி விட்டோமோ?
என் தோட்டத்துக்குள் ஏன் நுழைந்தாய்? ...உம்?



ஸலீமா திடுக்கிட்டுத் திரும்ப~
ஜீ பூம்மா உன்னை முழுங்கிடும், ஆமா!
ஐயோ என்னைக் காப்பாத்துங்க.
ஒரு சிறிய கல் கோட்டைக்குள் அழைத்துச் சென்றாள் கிழவி-
இங்கே பூதம் வராது. ஆனா...
..நான் சொன்ன வேலையெல்லாம் செய்யணும்.
மாயக்கிழவியிடம் ஸலீமா அடிமைப் பட்டுக் கிடக்கலானாள்.
வீட்டில் அம்மா-
முகம்மது! எப்படியாவது ஸலீமாவைக் கண்டு பிடிச்சு அழைச்சு வாப்பா!
அகம்மது! ஐந்து நாளில் நான் திரும்பி வரலைன்னா என்னைத் தேடி வா!
சரி அண்ணா!
வயல் வெளியில் முகம்மது சென்று கொண்டிருந்த போது ஒரு கிழவன்~
இந்த வழியா ஒரு இளம் பெண் போனாளா?
மாயக் கிழவி வளைச்சுப் போட்டிருப்பா!


என் தங்கை; அவளை மீட்டே ஆகணும். ஒரு வழி சொல்லுங்க!
அவ சூனியக்காரியாச்சே! நீயும் மாட்டிப்பே!
நான் துணிஞ்சுட்டேன் பெரியவரே!
சரி... இப்படியே நேரா போனா ஒரு முள் காடு வரும்...
முள் காட்டில் ஒரு சிறுவன்...
பையா, தண்ணீர் கொடு. சரியான தாகம்.
அந்தக் குன்றின் மேலே ஒரு சுனை இருக்கு. போய்க் கொண்டு வாரேன்...
சிறிது நேரத்தில்...
இந்தா...! நீ யாரு?
என் தங்கையைத் தேடி வந்தேன். மாயக் கிழவி இருக்குமிடம் தெரியுமா?
ஐயோ! ஆளை விடு! உனக்கு உதவியதா யாரிடமும் சொல்லி விடாதே!
மாயக் கிழவியிடம் இவ்வளவு பயமா!.... பாவம்!


வழியில் ஒரு நதி—
ஒரு மூங்கில் பாலமும் ஒரு இரும்புப் பாலமும் தென்பட்டன....
இரும்புப் பாலம்தான் வலுவானது - அதிலேயே போகலாம்.
பாலத்தைக்கடந்ததும் ஒரு ஆப்பிள் மரங்கள்— ஒன்றில் பச்சைப் பழம்.. இன் னொன்றில் சிகப்புப் பழம் —
சிகப்புப் பழமே நல்லது. பச்சைப் பழம் புளிக்கும்!
அங்கே மாயக் கிழவி தோன்றி—
மாட்டிக்கிட்டியா! சிகப்புப் பழம் சாப்பிட்டவன் எனக்கு அடிமை.
முகம்மது தன்னை மறந்து கிழவி இட்ட பணியைச் செய்துவிட்டு அவள் கோட்டைக்குள் முடங்கிக் கொள்ளும் அடிமையானான்.
இதற் கிடையில் பாத்திமா—
அகமது! உன் அண்ணனும் திரும்ப வில்லையே! சலீமா என்ன ஆச்சோ?
அழாதேம்மா! நாளைக்கு நான் புறப்படுகிறேன்!



அகமதுவும் திரும்பவில்லை —
பத்து நாளாச்சு. மூணுபேரும் என்ன ஆனாங்களோ?
நான் போய்த் தேடறேன்!
காஸிம்! நீயும் போயிடாதே! உன்னால் முடியாது!
கவலைப் படாதே அம்மா! நான் போகிறேன்!
சூனியக் கிழவி தான் காரணம்னு ஊர்ல எல்லாரும் பேசிக்கிறாங்க.... எப்படியாவது அவளை வென்று...
வழியில் அந்தக் கிழவன் —
யாரப்பா நீ? எங்கே போகிறாய்?
என் தங்கையைத் தேடி அண்ணன்கள் போனார்கள். மூவரையும் தேடி நான் போகிறேன்!
அண்ணன் மார்களால் முடியாததை நீ செய்யப் போறியா?
ஆபத்துக்கு உதவணும்.. தாயாரை சந்தோசப் படுத்தணும். அதுதான் என் குறிக்கோள்.



காஸிம், நீ நல்லவன். உனக்கு உதவுறேன். அந்தக் குன்றின் உச்சியில் இருக்கும் இரும்புத் துண்டுகளைக் கொண்டுவா!
கிழவன் கூறியபடி...
அம்மா! மூச்சு வாங்குது!
இதோ இரும்புத் துண்டுகள்!....சரி, இறங்கிப் போறது கஷ்டமில்லே!
இந்தாங்க இரும்புத் துண்டுகள்.
நெருப்பில் போட்டு ஈட்டி செய்து தரேன்!
சற்று நேரம் சென்றதும் -
இதோ ஈட்டி! எந்தக் கதவையும் தகர்த்து விடும்... போய் வா!


பயணம் தொடர்ந்தது. வழியில் அந்தச் சிறுவன் தென்பட்டான்.
தம்பி! கொஞ்சம் தண்ணீர் கொடுப்பா!
என் பேரு காஸிம். என் அண்ணன்களைத் தேடிப் போறேன்.
நான் பார்த்தேன். இந்த வழியாத் தான் போனாங்க.
நன்றி தம்பி!
நல்லவனா இருக்கே! உனக்கு உதவுறேன். இந்த தண்ணீருக்கு மந்திரம் போட்டுத் தரேன்...
இந்தா, இந்தத் தண்ணீரை யார் மேல் தெளித்தாலும் மயங்கிடுவாங்க. அதே சமயம் நீ தாகத்துக்குக் குடிச்சா ஒண்ணும் பண்ணாது!
சிறுவனுக்கு நன்றி கூறிவிட்டு நதியை அடைந்த காஸிம் மூங்கில் பாலத்தின் மேல் சென்றான்-
இரும்புப் பாலம் வலுவானதுதான். ஆனால் மூங்கில் பாலத்தில் நடப்பது தான் சாமர்த்தியம்!
அம்மா! என்ன ஆட்டம் ஆடுது!



நதியைக் கடந்ததும் காஸிம் பச்சை ஆப்பிளை மட்டும் சாப்பிட்டான்.
பச்சைப் பழத்தைச் சாப்பிட்டால் வெகுநேரம் பசி தாங்கும்!
ஒளிந்திருந்து கவனித்த மந்திரக் கிழவன்—
இவன் லேசான ஆளில்லை... ஏமாறவேயில்லையே! ..ம்... சரி.. சூழ்ச்சி பண்ணலாம்
கிழவி காஸிமிடம் வந்து—
யாரப்பா நீ? களைச்சுப் போயிருக்கே! வீட்டுக்கு வா, சாப்பிடலாம்.
சலீமாவைக் கண்டு பிடிச்சப்புறம் தான் சாப்பாடு!
கொஞ்சம் ஓய்வெடேன்!
தங்கையைக் கண்டுபிடிக்கும் வரை ஓய்வே கிடையாது.
நல்லவன் நீ! உனக்கு உதவி செய்யுறேன், வா!
சரி, நீ முன்னால் போ!


கிழவியின் கோட்டை வீட்டைப் பார்த்த காசிமுக்கு சந்தேகம்–
இங்கே யார் வசிக்கிறாங்க?
உள்ளே உன் தங்கை இருக்காளா பாரு!
கிழவி கதவைத் திறந்துவிட உள்ளே நுழைந்தான் காசிம்–
உள்ளே நுழைந்ததும் கதவு சாத்திக் கொண்டது. வெளியே கிழவியின் சிரிப்பொலி–
படார்!
ஹ..ஹா நீயும் மாட்டிக் கொண்டாயா! ஹி...ஹிஈ..!
காசிம் பயப்படாமல் தேடினான்–
ஸலீமா!
முகம்மது!
அகமது!
அண்ணா!
இரல் வந்த அறைக் கதவை மந்திர ஈட்டியால் திறந்தான் காசிம்–
அண்ணா! மாயக் கிழவி பொல்லாதது!
அவ மாயத்துக்கு எங்கிட்ட மந்திரம் இருக்கு!


தொடர்ந்து, முகம்மது அகமது இருவரையும் விடுவித்த காசிம், கோட்டையின் தலை வாசல் கதவை தன் ஈட்டியால் திறந்தான் —
அட! என்ன மாயமான ஈட்டி இது!
எல்லோரும் வெளியே வந்ததும், கிழவி அவனைத் தாவிப் பிடித்துக் கொண்டு —
என்னிட மிருந்து எவனும் தப்பித்த தில்லை!
காசிம் மந்திர நீரைத் தெளிக்க —
கிழவி மயங்கி விழுந்தாள்!
ஓடுங்க... கிழவிக்கு மயக்கம் தெளிஞ்சுடப் போகுது!





சிறிது தூரம் போவதற்குள் அவர்களுக்குப் பின்னால் ஒரு பயங்கர யாளி நெருப்பைக் கக்கிக் கொண்டு—
இது.... மாயக் கிழவிதான்.
ஐயோ. வெப்பம் தகிக்கிது!
காஸிம் மிகு பலத்துடன் ஈட்டியை வீசினான்...
பாவம்! கிழவியைக் கொல் வதைத் தவிர வேறு வழியில்லை!
ஐயோ செத்தேன்!
விட்டிருந்தா காடே நெருப்பில் அழிந்துபோ யிருக்கும்!
பயணம் தொடர—
அண்ணா தாகம் தாங்கலை.... அதோ ஒரு கிணறு!


இடுப்பில் ஒரு காட்டுக் கொடியைக் கட்டி முகம்மதுவைக் கிணற்றினுள் இறக்கினார்கள்—
பாதி இறங்கிய முகம்மது—
ஐயோ!
அவசரமாக அவனை மேலே தூக்கினார்கள்—
பாழுங் கிணற்றில் தண்ணீரைக் காணோம்... பாம்பும் பல்லியும் தான் இருக்கும் போலிருக்கு!
காசிம் நம்பாமல்
உனக்கு வெறும் பிரமை! நான் பார்க்கிறேன்!
பாதித் தூரம் உள்ளே இறங்கிய காசிம்—
அட கிணற்றுக் கீழ் ஒரு கதவு!


மந்திர ஈட்டியால் அந்தக் கதவைத் திறந்து உள்ளே போனால் அது ஒரு அரண்மனை—
அட! என்ன அதிசயம்!
இந்த இடத்தில் இப்படி ஒரு அரண்மனையா?
அப்போது அங்கே ஒரு இளவரசி—
யார் நீங்க? எப்படி வந் தீங்க?
தண்ணீர் வெள்ள இறங் கினேன்! கதவு திறக்கப் பட்டது!
சூனியக் கிழவி என்னை இங்கே அடைத்து வச்சிருக்கா... ஆபத்து! நீங்க சீக்கிரம் போயிடுங்க!
கவலை வேண்டாம்! சூனியக் கிழவியை நான் கொன்று விட்டேன்! இனி உனக்கும் விடுதலை!
நான் காசிம்! என் தங்கையை மீட்க வந்தேன்!
என் தந்தை இந்நாட்டு அரசர். என் பெயர் வைலா.


இந்த கொடியை இடுப்பில் கட்டிக் கொண்டு மேலே போ. என் அண்ணன்கள் தூக்கி விடுவார்கள். ஸலீமா அங்கு தண்ணீர் கொண்டு போ!
ஒருவேளை அவர்கள் உங்களை ஏமாற்றி விட்டு என்னைக் கட்டாயப் படுத்தி இழுத்துச் சென்று விட்டால்?
அப்படி நடக்காது!
இந்தக் கற்களை வைத்துக் கொள்ளுங்கள். ஆபத்துக்கு இவைகளைத் தட்டுங்கள்.
இவை ஆண்களுக்கு மட்டும் தான் உதவும்
லைலா மேலே வந்து விவரம் சொன்னதும்—
அகமது—
காசிம் இங்கேயே கிடக்கட்டும். லைலாவோடு நாம் அரசனிடம் போய்ப் பரிசை வாங்கிக் கொள்வோம்.
அச்சா!
அரசவையில் அரசர்—
உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது? நீங்கள் இருவரும் தங்கையுடன் சில காலம் எமது பளிங்கு மாளிகையில் தங்கி, பரிசுகள் பெற்றுச் செல்ல வேண்டும்!


தனியே விடப்பட்ட காசிம்–
லைலா சொன்னது சரியாகி விட்டதே! சரி.....
...இந்தக் கற்களைத் தட்டிப் பார்ப்போம்.
அடுத்த கணம் ஒரு நந்தவனத்தில் ஒரு பெரிய, அழகிய பறவையின் அருகில் நின்றிருந்தான்–
என்ன அழகிய பறவை!
கற்களை தட்டி ஏன் என்னைக் கூப்பிட்டாய்!
லைலா விடம் போகணும்!
பறவை காசிமை முதுகில் ஏற்றிக் கொண்டு பறந்தது–
ஆகாயத்தில் பறப்பேனே! மேகங்களில் மிதப்பேனே!
இதற்கிடையில்
அகமது! முகம்மது! உங்களிருவரில் ஒருவருக்கு லைலாவைக் கல்யாணம் செய்து வைக்கிறேன்!


மறு விநாடி அண்ணன் தம்பிக்குள் அடிதடி —
எனக்குத் தான் லைலா!
முடியாது! எனக்குத்தான் லைலா! ராஜ்யத்தை விட்டு முடியுமா?
அப்போது மாயப் பறவையில் வந்து இறங்கினான், காசிம் —
சண்டையை நிறுத்தச் சொல்லுங்கள் அரசே! லைலாவைக் காப்பாற்றியது நான்தான்!
யார் சாட்சி?
உங்கள் மகளும், என் தங்கையும் தான் சாட்சிகள்!
இவர் சொல்வது உண்மை அப்பா!
ஆமாம்!
சந்தோஷம்.
காசிமின் தாய் அழைத்து வரப்பட்டு இருவருக்கும் கல்யாணம் நடந்தது —
காசிம், லைலா! நல்லா இருங்க!
அண்ணன்கள் —
எங்களை மன்னிச்சிடுங்க, அரசே!
இனி, ஒழுங்கா விவசாயம் பண்ணி, சலீமாவுக்கு நல்ல மாப்பிள்ளை தேடுங்க!
முற்றும்.



"அந்த ஸ்டுடியோவுல போட்டோ எடுக்க வேண்டாம்னு ஏன் சொல்றே."

"'புகை'ப்படம் பிடிக்கப்படும்னு போர்டு போட்டிருக்கே புகைப்படம் எடுக்குற ஸ்டுடியோதானே நமக்கு வேணும்?"


- மேலப்பாதி நாகராஜ்.



"தேள் கடிச்சி என்னடா செய்யணும்?"

"தேள் கிட்டே போய் கைய நீட்டணும்..."

- எஸ். தட்சணா மூர்த்தி.



"சைக்கிளில் ஏண்டா மோதினே?"

"பிரேக் பிடிக்கலிங்க."

"நல்லாதானேடா பிடிக்குது?"

"நான் பிரேக் பிடிக்கலிங்க!"

- பா. ஜெயக்குமார்.



"ஒன்றுகூட விடாம எல்லா மாநிலப் பெயரையும் சரியா சொல்றியே!"

"எங்க அப்பாவுக்கு லாட்டரி சீட்டு விற்பனை சார்!"

- வலங்கைமான் நஸீர்.



பூமி சூரியனை ஒரு தடவை சுற்றி வருவதற்கான நேரத்தைத்தான் ஆண்டு என்று கூறுகிறோம். ஆண்டுக்கு 365 நாட்கள் என்று கணக்கிடுகிறோம். ஆனால், துல்லியமாகப் பார்த்தால் 365 நாட்களும் சொச்சமும் வரும்!

பூமி சரியாக 365 நாட்களில் சூரியனைச் சுற்றி வந்து விடுவதில்லை. அதற்கு மேல் 5 மணி 48 நிமிடங்கள் 46 நொடி வேண்டியுள்ளது. அதற்காக அதை அப்படியே வைத்துக் கொண்டால் பெரிய குழப்பம்தான் ஏற்படும். எனவே தான் 365 நாட்கள் என்று கூறுகிறோம். அதற்கு மேல் அதிகமாக உள்ள சொச்சத்தை அப்படியே விட்டு விடவும் முடியாதே. எங்கேயாவது கணக்கு வைத்தாக வேண்டுமே. அதற்காகத்தான் லீப் ஆண்டில் பிப்ரவரியை 29 நாட்களாக வைத்துக் கொள்கிறோம்.

லீப் என்பதற்கு தாவுதல் என்று பொருள். இதற்காகத்தான் நான்கால் மீதியின்றி வகுபடும் வருஷங்களை லீப் ஆண்டு என்றும், அதில் பிப்ரவரிக்கு 29 நாட்கள் என்றும் கொள்கிறோம்.

ஏன் அந்த ஒரு நாளைப் பிப்ரவரி மாதக்கணக்கில் சேர்க்கிறோம் என்பதற்கும் ஒரு காரணம் உண்டு. ஆதியில் பிப்ரவரிக்கும் 30 நாட்களே இருந்தன. ரோம சக்ரவர்த்தி ஜூலியஸ் சீசர் தம்முடைய பெயரால் ஜூலை என்று ஒரு மாதத்துக்குப் பெயரிட்டு, குளிரும் கூதலும் மிகுந்த பிப்ரவரிக்கு இத்தனை நாட்கள் எதற்கென்று அதன் நாட்களில் ஒன்றைக் குறைத்து அதை ஜூலை மாதத் துடன் கூட்டினார். அவருக்குப் பிறகு வந்த ரோம சக்கரவர்த்தி அகஸ்டஸ் சீசர் தன் பங்குக்கு இன்னும் ஒரு நாளை பிப்ரவரியிலிருந்து எடுத்துத் தம் பெயரால் வழங்கும் ஆகஸ்ட் மாதத்துடன் சேர்த்தார். இவ்வாறு பிப்ரவரி மாதம் நாட்கள் குறைந்ததாக ஆகி விட்டபடியால் அறிஞர் பெருமக்கள் லீப் வருஷத்தில் பிப்ரவரி மாதத் துக்கே ஒரு நாளைக் கூட்டும் படி ஏற்பாடு செய்தார்கள்.

இவ்வாறு நான்கு வருஷத்துக்கு ஒருமுறை ஒரு நாளைக் கூட்டினால் அப்பொழுதும் வருஷமானது 11 நிமிஷம் 14 நொடி அதிகம் உடையதாக ஆகிவிடுகிறது. இதைச் சரி செய்ய அறிஞர்கள் வேறு ஏற் பாட்டைச் செய்தனர். நானூறால் மீதியின்றி வகுக்கக்கூடிய நூற்றாண்டு வருஷம் தவிர ஏனைய நூற்றாண்டு வருஷங்களை லீப் வருஷமாக ஏற்ப தில்லை என்பதுதான் அந்த ஏற்பாடு. ஆதலால் 1900 ஆம் ஆண்டு நாலால் வகுக்கக்கூடியதாக இருந்தும் லீப் ஆண்டு இல்லை! 2000 ஆம் ஆண்டு நானூறால் வகுக்கக்கூடியதாக இருப் பதால் அது லீப் வருஷமாகும்!

- தீ. கலீல் அகமது.

9. மிரட்டல்

பொன்னுசாமி தன்னிடம் ஏன் அப்படி திடீரென்று அலட்சியமாகவும் வெறுப்புடனும் நடந்து கொண்டார் என்பதை எண்ணி ஏற்கெனவே அபிராமி கவலைப் பட்டுக் கொண்டிருந்தாள். பொன்னுசாமியின் வேலைக்காரன் வந்து சக்ரவர்த்தியைக் கையோடு அழைத்துக் கொண்டு போனது அவளுடைய கவலையை அதிகரிக்கச் செய்தது. 'எதற்காக இருக்கும்?' 'என்ன அப்படி தலை போற விஷயம்!' என்று மனத்தில் குமைந்து கொண்டாள்.

பொன்னுசாமி வீட்டிற்கு சக்கரவர்த்தி வந்து சேர்ந்தார். அத்தனை அவசரமாக அவரை அழைத்து வரச் சொன்ன பொன்னுசாமி அவருக்காகக் காத்திருக்கவில்லை. வேறு ஜோலியைக் கவனிக்கச் சென்று விட்டார். ஒரு நாளும் அவர் அப்படி நடந்தவர் இல்லை. வேறு வழியின்றி வீட்டு வாசலில் போட்டிருந்த மரப் பெஞ்சில் உட்கார்ந்து, காத்துக் கொண்டிருந்தார் சக்ரவர்த்தி.

பொன்னுசாமி, திரும்பி வர நெடு நேரமாகி விட்டது. அதுவரை பாவம் சக்கரவர்த்தி பொறுமையோடு காத்துக் கொண்டிருந்தார். நீண்ட நேரத்திற்குப் பிறகு ஒரு வழியாகப் பொன்னுசாமி வந்தார். சக்ரவர்த்தி மிகவும் மரியாதையுடன் எழுந்து நின்றார். ஆனால், பொன்னுசாமியோ அவரைக் கவனித்ததாகக் கூடக் காட்டிக் கொள்ளாமல் உள்ளே சென்று விட்டார்!

பொன்னுசாமி தன்னை வரச் சொன்ன நினைப்பே இல்லாத மாதிரி நடந்து கொண்டதால் சக்ரவர்த்தி, தன்னை அழைத்து வர வந்த ஆளைக் கூப்பிட்டு, ''ஏம்பா, ஐயா என்னைத் தான் அழைச்சுக்கிட்டு வரச் சொன்னாரா? இல்லை, வேற யாரையாவது கூட்டிக்கிட்டு வரச் சொல்லி, நீ தப்பா என்னை அழைச்சிக்கிட்டு வந்துட்டியா?'' என்று கேட்டார்.

''என்னங்க ஐயா இது! இத்தனை வருஷமா வேலை பார்க்கிறவனுக்கு



அபிராமியின் அட்டிகை

கூத்தபிரான்

இதுகூடவா தெரியாது? அன்பு நிலைய ஐயான்னு வழக்கப்படி உங்களைக் குறிப்பிட்டுத்தானே அழைச்சிக்கிட்டு வரச் சொன்னார்?'' என்று தெளிவுபடுத்தினான் அவன்.


''சரி, இப்போ எனக்கு நீ ஒரு உதவி செய். உள்ளே போய் அவரு சொன்ன படி, நீ என்னைக் கூட்டிக்கிட்டு வந்திருக்கிறதைக் கொஞ்சம் நினைவு படுத்து'' என்று கேட்டுக் கொண்டார் சக்கரவர்த்தி.

''சரிங்க'' என்று உள்ளே போனான் அந்த ஆள்.

''என்ன விஷயம்! குழப்பமா இருக்கே! ஒண்ணும் புரியல்லியே!'' என்று முணுமுணுத்துக் கொண்டே அலைபாயும் மனத்துடன் அமர்ந்திருந்தார் சக்கரவர்த்தி.

சிறிது நேரத்தில் உள்ளே சென்ற பணியாள் வேகமாக வந்து, ''ஐயா, உங்களை உள்ளாற வரச் சொல்றாரு'' என்று பணிவாகச் சொன்னான்.

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, ''உனக்கு ரொம்ப



நன்றியப்பா'' என்று கூறிவிட்டு, சக்கரவர்த்தி, உள்ளே சென்றார்.

நடுக்கூடத்தில் மின் விசிறி ஓடிக்கொண்டு இருக்க, சாய்வு நாற்காலியில் சரிந்த வண்ணம், தன் இருகரங்களையும் மேலே தூக்கித் தலை மேல் வைத்துக்கொண்டு, ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார் பொன்னுசாமி.

சக்கரவர்த்தி வந்ததும், வழக்கப்படி முகம் மலர எழுந்து ''வாங்க'' என்று வரவேற்கவும் இல்லை. ஒரு சாதாரண வரவேற்புக் கூட இல்லை! அவ்வளவு ஏன், அவரை உட்காரும்படி கூடச் சொல்லவில்லை!

சக்கரவர்த்திக்கு இது அதிர்ச்சியாக இருந்தாலும் அதை அவர் காட்டிக்கொள்ளாது, ''அவசரமா கூப்பிட்டதா ஆள் வந்தான்'' என்று மௌனத்தைக் கலைத்தார்.

''ஆமாம், நான்தான் வரச் சொன்னேன்.''

''என்ன விஷயம்?''

''அப்படி ஒண்ணும் பெரிய விஷயமில்லே!''

''அவசரமா வரச் சொன்னதாகச் சொன்னானே?''

''அப்படியா சொன்னான்! ஆமாமாம். நான்தான் அப்படிச் சொன்னேன்'' என்று குழறினார் பொன்னுசாமி.

அவர் என்னவோ தயங்குகிறார் என்பது மட்டும் சக்கரவர்த்திக்குப் புரிந்தது.

சுற்று முற்றும் பார்த்தார் பொன்னுசாமி.

''ஏதாவது இரகசியமான விஷயமா?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

''இரகசியமாவது மண்ணாங்கட்டியாவது. நான் சொல்றதை உடனே செய்யணும்.'' திடீரென்று பொன்னுசாமியின் பேச்சில் சூடு நிறைந்து, முகம் கடுமையானது.



''முதல்லே விஷயம் என்னன்னு சொல்லுங்க?''

''வடக்கேயிருந்து நம்ம விடுதிக்கு படிக்க பொண்ணு ஒண்ணு சமீபத்திலே வந்திருக்குதே.....?''


''ஆமாம் அபிராமி...?''

''அதேதான். அந்தச் சிறுமியை உடனே நம்ம பள்ளி விடுதியை விட்டு நீக்கிடணும்!''

''என்ன சொல்றீங்க?''

''ஏன் தமிழ்லேதானே சொல்றேன்? நம்ம விடுதியிலே புதுசா வந்து சேர்ந்திருக்கிற அபிராமியை உடனே டிஸ்மிஸ் பண்ணிடுங்க.''

பொன்னுசாமியின் முகத்தில் கடுமை கூடியது!



''உருக்க முடியாத தங்கம் எது?''
''மிரு'தங்கம்' தான்!''

– கிரு. சிவா.

''என்னங்க! உண்மையாத்தான் சொல்றீங்களா?'' என்று பேரதிர்ச்சியோடு சக்கரவர்த்தி கேட்டார்.

''காரணம் சொல்லிக்கிட்டு, கதை பேச உம்மை நான் கூப்பிடல்லே. நான் சொன்னதை, என்ன, ஏன்னு கேட்காமே உடனே, ஒழுங்காச் செய்யுங்கள். ஆமாம். அவ்வளவுதான், சொல்லிப்புட்டேன்'' என்று உறுதியான குரலில் கூறிய பொன்னுசாமி, பக்கத்து மேசையிலிருந்த அன்றைய தினசரியை எடுத்துப் படிப்பது போல் பாசாங்கு செய்தார்.

என்ன செய்வது என்பது அறியாமல் விழித்துத் தவித்த சக்கரவர்த்தி, ''ஒரு பாவமும் அறியாத அந்த அனாதைச் சிறுமியை எதுக்காகப் பள்ளி விடுதியிலிருந்து விரட்டியடிக்கணும்? கொஞ்சம் அவசரப் படாம யோசிக்கப் பாருங்க. நாம்ப எத்தனையோ அனாதைகளுக்கு இங்கே உங்க புண்ணியத்திலே நிழல் தறோம். இந்தச் சிறுமி ஏற்கெனவே ரொம்ப மனது ஒடிஞ்சு போனவ. பஞ்சாப் தீவிரவாதிகளால் அனாதையானவங்களைக் காப்பாற்றி அடைக்கலம் தருவது இந்தியர்கள் ஒவ்வொருவரோட கடமைன்னு நீங்களே சொல்லுவீங்களே! அப்படிப்பட்ட குணவானான நீங்களா இந்த முடிவுக்கு வந்தீங்க! அப்படி அந்தச் சிறுமி என்னதாங்க தப்புச் செய்தாள்?'' என்று அபிராமிக்காகப் பரிந்து பேச ஆரம்பித்தார் சக்கரவர்த்தி.

பொன்னுசாமி எதையாவது காதில் வாங்கிக் கொண்டால்தானே? முகத்தில் கடுமை இன்னும் கூடியது.

''நீங்க புறப்படுங்க. நான் சொன்னதைக் கவனிங்க'' என்று கருக்கமாக உத்தரவிட்டார்.

சக்கரவர்த்தி ஒரு நிமிடம் மௌனமாக நின்றார். அவர் முகத்திலும் ஒரு தெளிவு தோன்றியது. ''என்னை மன்னிச்சுக்குங்க. காரணமில்லாம அந்தப் பெண்ணை வெளியே அனுப்ப முடியாதுங்க'' என்று உறுதியாகக் கூறினார்.

பொன்னுசாமி ஆத்திரமடைந்தார். ''முடியாதா? ஏன் முடியாது? பள்ளி விடுதி என் தயவிலே; என் நன்கொடையால் நடக்குது. நினைவிருக்கட்டும்'' என்று எச்சரித்தார்.

'அதையெல்லாம் யாரு இல்லேன்னு சொன்னாங்க? இந்த விடுதியில இருக்கிற அத்தனை அனாதைப் பிள்ளைகளுக்கும் தாயா, தந்தையா இருந்து ஆதரவு தருபவர் நீங்கதான். நீங்க புகலிடம் தரலேன்னா இந்தப் பிள்ளைகள் எல்லாம் எங்கேயோ சாப்பாட்டுக்கு அல்லல்பட்டு உழன்று கொண்டிருக்கும். தன்னைப் பற்றி மட்டும் நினைக்கக் கூடிய உலகில் மற்ற குழந்தைகளைப் பற்றியும் நினைக்கும் மாணிக்க மனமுடைய மனிதர் நீங்க.

அப்படிப்பட்ட பண்பாளரான நீங்க, ஒரு நல்ல, புத்திசாலியான, பண்புள்ள அனாதையை அதுவும் 'ஓஹோான்'னு வளர்ந்து நம்ம விடுதிக்குப் பெருமை தேடி எதிர்காலத்தில் ஆதரவும் தரக் கூடிய ஒரு சிறுமியை எந்தக் காரணமும் இல்லாமல் தண்டிக்கிறதை என் மனசு ஏத்துக்கல்லே. அதை என்னால் செய்ய முடியாதுங்க'' என்றார் சக்கரவர்த்தி.

''ஓஹோ! அப்படியா! என் சொல் லுக்கும், பேச்சுக்கும், மதிப்பு இவ் வளவுதானா! நல்லா யோசனை பண்ணிப் பேசுங்க. முடிவா கேட்கி றேன். நான் சொன்னபடி, நீங்க நட வடிக்கை எடுக்கப் போறீங்களா? இல்லையா?'' என்று மிரட்டினார் பொன்னுசாமி.

''என்னை மன்னிக்கணும். என் மன சாட்சி இதுக்கு ஒரு நாளும் சம்மதிக் காது.''

''பெரிய மனசாட்சி. விடுதி நடத்த மனசாட்சி மட்டும் போதாது. ஞாபகம் இருக்கட்டும்.''

''உங்க நன்கொடையால் விடுதி நடக்குதுங்கிற காரணத்தாலே, நீங்க இப்படி இஷ்டப்படி பேசறீங்க.''

''சரி, அப்படித்தான்னு வெச்சுக் குங்க. விடுதிக்கு என் உதவி வேணுமா? இல்லை அந்த அபிராமி வேணுமான்னு இப்போ நீங்க முடிவு பண்ணுங்க'' என்று பண பலம், செல்வாக்கு இவற்றையெல்லாம் நினைவுபடுத்தித் தன் யோசனைக்கு சக்கரவர்த்தியைப் பணிய வைக்க முயன்றார் பொன்னு சாமி.

விவாதம் நீடித்தது. அதற்குமேல் அதை வளர்க்கப் பிடிக்காமல் எழுந்து நின்றார் சக்கரவர்த்தி. ''நீங்க கோபமா பேசினதாலே என்னையும் அறியாம, நானும் ஏதாவது என்னை மறந்து உங்க மனம் புண் படும்படி பேசியிருக்கலாம். நான் போன பிறகு, உங்க முடிவை மறு பரிசீலனை செய்யுங்க என்று ரொம்பக் கேட்டுக்கிறேன். காரணம், இதுவரை அந்த அனாதைக் குழந்தைங்க பசி அறி யாம இருந்ததற்குக் காரணம் நீங்கதான். அப்படிப்பட்ட தருமசீலரான நீங்க, எதுக்காக அபிராமியை நீக்கணும்னு கட்டாயப்படுத்தறீங்க என்பதை என் னால புரிஞ்சுக்க முடியலே. நீங்களும் சொல்ல மறுக்கறீங்க. பரவாயில்லை. புண்ணிய சீலரான பொன்னுசாமி மனம் மாறுவார் என்ற நம்பிக்கையோட நான் கிளம்பறேன்'' என்று விடை பெற்றுக் கொண்டார்.

சக்கரவர்த்தி மனவேதனையுடன் திரும்பி வந்தபோது பள்ளி விடுதியில் அபிராமியும், குயிலுமாக சக்கரவர்த்தி சொன்னபடி, எல்லாக் குழந்தைகளுக் கும் சீருடைக்கான அளவுகளை எடுக் கும் வேலையில் மும்மரமாக ஈடு பட்டிருந்தார்கள்.

''உங்கப்பாவிட்ட தாத்தாவும் அடம் பிடிக்கிறாரா! ஏன்?''

''எனக்கு வீட்டு கணக்குகைச் செய்து தாரது மாதிரி அவருக்கும் முதியோர் கல்வி வீட்டுக் கணக்கைச் செய்து தரணுமாம்!''

- ச. ஞானப்பிரகாசம்.



சக்கரவர்த்தி, முகம் வாடிப் போன வராக, தளர்ந்து போய் வந்ததை அபி ராமியும், குயிலும் ஜன்னல் வழியாகப் பார்த்தார்கள். அப்படியே அளவு எடுக் கும் வேலையை விட்டு விட்டு ஓடிவந் தார்கள்.

''வாங்கய்யா... ஏன் என்னவோ போலயிருக்கீங்க? பொன்னுசாமி எதுக் காகக் கூப்பிட்டு அனுப்பினாரு'' என்று அபிராமி கேட்டாள்.

அபிராமியின் முகத்தை ஏற இறங்க ஒருமுறை பார்த்து அவள் தலையை மிகுந்த வாஞ்சையுடன் தடவிக்



"காந்திஜிக்குப் பிடிக்காத கலை எது தெரியுமா?"
" 'பொய்'க்கால் குதிரை தான்!"

- தஞ்சை இரா. ஆதி.

கொண்டே "ஒன்னுமில்லைம்மா. அவருடைய சொந்த விஷயமா என்கிட்டே யோசனை கேட்கக் கூப்பிட்டிருந்தாரு! போகட்டும், கையிலே என்ன 'இஞ்ச' டேப், நோட்டுப் பென்சில்?" என்று கேட்டார் சக்கரவர்த்தி.

எதற்கு என்பது அவருக்குத் தெரியாதா என்ன? ஏதாவது கேட்க வேண்டுமே என்பதற்காகக் கேட்டு வைத்தார்.

"சீருடைக்கு அளவு எடுத்துக்கிட்டு இருக்கோம்" என்று குயில் சொன்னாள்.

"ஐயா! நீங்க என்னவோ ரொம்பக் கவலைப்படற மாதிரி இருக்கீங்க" என்று அபிராமி சக்கரவர்த்தியின் முகத்தைக் கூர்ந்து பார்த்து விட்டுக் கூறினாள்.

"அதெல்லாம் ஒன்னுமில்லியே நான் சாதாரணமாத்தான் இருக்கேன்."

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்பாங்க. உங்க விஷயத்திலே ரொம்ப நல்லாவே தெரியுது ஐயா! ஏன் ஒரு மாதிரியாயிருக்கீங்க? சொல்லுங்க?

"அட ஒன்னுமில்லைம்மா. லேசா மண்டையை வலிக்குது. நடந்து போயிட்டு வந்த களைப்பு. அவ்வளவு தான்" என்று சொல்லி விட்டு, "நீங்க உங்க வேலையைப் பாருங்க" என்று தம் அறையை நோக்கி நடந்தார் சக்கரவர்த்தி.

அபிராமி அவர் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "பொன்னுசாமி வீட்டிலே, ஏதோ நடந்திருக்கு. அதை நம்ம கிட்டே சக்கரவர்த்தி ஐயா மறைக்கிறார்"ன்னு குயிலிடம் சொன்னாள்.


"எதை வெச்சு அப்படிச் சொல்றே?" என்று கேட்டாள் குயில்.

"பொன்னுசாமி ஐயா இங்கே வந்தார். வரும்போது நல்லாத்தான் என்கிட்டே பேசினார். ஆனால், போகும் போது அவர் முகம் சரியா, வழக்கப்படி இல்லே. அதே மாதிரி சக்கரவர்த்தி ஐயா, பொன்னுசாமி வீட்டுக்குக் கிளம்பிப் போன போது, நல்லாத்தானிருந்தார். ஆனால் அவர் வீட்டுக்கும் போய்த் திரும்பி வந்ததும் முகமே மாறிப்போயிருக்கு! பேச்சு, பல வந்தமான செயற்கைச் சிரிப்பு எதுவும் சரியில்லை. நம்மைச் சுற்றி என்னவோ நடக்குது. அதுல நாமும் சம்பந்தப்பட்டிருக்கோம். பொன்னுசாமி, சக்கரவர்த்தி ஐயா எல்லோரும் சம்பந்தப்பட்டிருக்காங்க. ஆனால் அது என்னங்கறது இவங்க ரெண்டு பேருக்குத்தான் தெரியும். நமக்கு எதுவும் புரியல்லே. ஆனால் இதை எப்படியும் கண்டு பிடிக்காமே விடப் போறதில்லே" என்று அபிராமி குயிலிடம் சொன்னாள்.


அப்போது பொன்னுசாமி வீட்டிலிருந்து அதே வேலையாள், மறுபடியும் வந்தான். இப்போது அவன் கையில் ஒரு கவர் இருந்தது. அதை உள்ளே சென்று சக்கரவர்த்தியிடம் கொடுத்து விட்டுப் போனான் அவன்.


அந்தக் கவரில் என்னவோ முக்கியமான செய்தி இருக்கிறது என்று அபிராமிக்கும் குயிலிக்கும் புரிந்தது. ஆனால், அது என்னவாக இருக்கும் என்பதைத் தான் அவர்களால் ஊகிக்க முடியவில்லை!

(தொடரும்)



கிணறு எரியுமா?
கதை:- அக்னி
படம்: ரஜினி..
கந்தன் ஒரு பேராசைக்காரன். ஒரு நாள் குதிரை சவாரி செய்த பின் ஒரு குளத்தில் தண்ணீர் குடித்தான்.
அப்பா! என்ன தாகம்..
அப்போது- பசுங்கன்றுடன் அங்கு வந்தான் ராமன்.
கன்று, குதிரையிடம் இருக்கட்டும். தண்ணி குடிச்சுட்டு வரலாம்.
திரும்பி வந்த கந்தன் பசுங்கன்றை கண்டதும்.
அட! ராமனுதா? எப்படியாவது அபகரிக்கணும்!
1


உடனே வந்த ராமன் தன் கன்றை இழுக்க... தடுத்தான் கந்தன்!
கன்று என்னுது! என் குதிரை போட்டது. ஏன் இழுக்கறே?!
வருத்தத்துடன் ராமன்-
ஐயா! இது நான் சந்தையிலே வாங்கினது. என் கன்று!
வாதாடினான் கந்தன்.
இது என் குதிரை போட்ட கன்று தான்! நான் விட மாட்டேன்.
சரி, பொது ஆளைக் கேட்டுப் பார்ப்போம்!
அப்போது- அங்கு வந்த நரியிடம் வழக்கைக் கூற...
கொஞ்சம் இருங்க.. கிணறு பத்திக்கிச்சாம்.. போயிட்டு வந்து கவனிக்கிறேன்.


நரி கூறியதைக் கேட்ட கந்தனும் ராமனும் வியப்புடன்-
என்னது...?! கிணறு பத்திக்கிச்சா? இது நடக்கக் கூடியது தானா?
ஏன், உன் குதிரை கன்றுக் குட்டி போட்டால் கிணறு ஏன் தீப்பற்றிக்காது?
இதைக் கேட்ட கந்தன் தலை குனிந்தான்.
தப்புத்தான் கன்று ராமனதுதான் என்னை மன்னித்து விடுங்கள்.
தப்பை உணர்ந்து திருந்தினால் சரி!



கேட்கட்டுமா டாக்டர்?

❋ ப.தா. ராஜ்பாபு, கீழநீலிதநல்லூர்.

? சளி பிடிக்கும் போது ருசிப்பதில்லையே, ஏன்?

! சளி பிடிக்கும் போது மூக்கில் உள்ள வாசனை நரம்புகளும், நாக்கில் உள்ள சுவை உணரும் மொட்டுகளும் தற்காலிகமாகப் பாதிக்கப்படுகின்றன. அதனால் சாப்பிடும் உணவின் ருசி குறைவாகத் தெரிகிறது.

❋ எஸ். பீர்முகமது, குருவிக்கரம்பை.

? எனது வயது 16. எனக்கு 10 வயது ஆகும் போது நெல் கதிரொன்று என் காதிற்குள் விழுந்து விட்டது. அதை எடுக்காமல் விட்டு விட்டோம். சில மாதங்களுக்கு முன்பு காது வலித்தது. இப்போது காதை அடைத்துக் கொள்வது போல் உள்ளது. நெல் விழுந்ததால் இது ஏற்பட்டதா? விளக்கம் தேவை.

! இருக்கலாம். 10 வயதில் காதில் விழுந்த நெல் தற்போது உப்பிப் பெருத்து உங்கள் காதை அடைக்க வாய்ப்புள்ளது. அடிக்கடி வரும் காது வலிக்கும் அதுவே காரணமாக இருக்கலாம். எதற்கும் உடனே காது, மூக்கு, தொண்டை நோய் நிபுணரைச் சந்தியுங்கள். மேலும் காது அடைப்புக்கு மற்ற காரணங்கள் இவை : 1. மூக்கு அழற்சி (Rhinitis) 2. காற்றுப்பைகள் அழற்சி (Sinusitis) 3. தொண்டைச் சதை அழற்சி (Tonsillitis) 4. அடினாய்டு வீக்கம். இவற்றுள் ஏதேனும் உங்களைப் பாதித்துள்ளதா என்பதையும் பரிசோதித்துக் கொள்ளுங்கள். 'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்'. அதனைப் பாதுகாப்பதில் இவ்வளவு காலதாமதமா? உடனே செயல்படுங்கள்.

❋ வி. பூங்காவனம், திருச்சி - 18.

❋ மு. கருணாகரன், அருப்புக்கோட்டை.

? என் தாத்தாவுக்கு வயது 78. கடந்த ஐந்து வருடங்களாக அவருக்கு சர்க்கரை வியாதி உள்ளது. இதனைப் போக்க வழிகள் கூறுங்கள், டாக்டர்?

! உங்கள் தாத்தாவின் ரத்தத்தில் எவ்வளவு சர்க்கரை அதிகமாக உள்ளது என்பதைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள். அதனைக் குறைக்க மருத்துவரின் ஆலோசனைப்படி மாத்திரைகளைச் சாப்பிடச் சொல்லுங்கள். அத்தோடு கீழ்க்காணும் தவிர்ப்பு முறைகளையும் உங்கள் தாத்தாவை கைக் கொள்ளச்



டாக்டர். கு. கணேசன்

சொல்லுங்கள். 1. உணவுக் கட்டுப்பாடு 2. உடற்பயிற்சி 3. கொழுப்பைக் குறைத்தல் 4. உடல் எடை கூடாமல் பார்த்துக் கொள்வது. 5. மதுவைத் தொடாமலிருத்தல். கீழே குறிப்பிட்டிருக்கும் உணவு வகைகளையும் அவசியம் தவிர்க்க வேண்டும். கிழங்



குகள், சர்க்கரை, இனிப்பு, தேன், வெல்லம், பழங்கள், அதிக அரிசி, அதிக மாவுப் பொருள், கொழுப்பு உணவுகள், நெய், வெண்ணெய், தேங்காய் எண்ணெய். உடம்பில் காயம் ஏற்பட்டால் அல்லது புண்கள் தோன்றினால் உடனே மருத்துவ சிகிச்சையை மேற் கொள்ள வேண்டும். இதையெல்லாம் செய்தால் உங்கள் தாத்தாவின் சர்க்கரை வியாதி கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்.


✱ க. ஜெயகாந்தம், சிறுபுலியூர்.

? கிரிப்பூச்சியால் உடல் வளர்ச்சி குன்றுமா? அதைப் போக்க வழி என்ன?


! கிரிப்பூச்சியால் உடல் வளர்ச்சி குன்றுவதில்லை என்றாலும், இரவு நேரத்தில் ஆசன வாயில் அரிப்பு உண்டாவதே பெருந்தொல்லையாக இருக்கும். இதனைப் போக்க சுய சுகாதாரம்,



சுற்றுப்புற சுகாதாரம் பேணப்பட வேண்டும். தெருக்களில் மலம் கழிக்கக் கூடாது. கழிப்பறைகளையே பயன் படுத்த வேண்டும். நகங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஈக்கள் மொய்க்கும் உணவுகளை உட்கொள்ளக்



கூடாது. ஆறு மாதங்களுக்கு ஒருமுறை குடல் புழு மருந்தைச் சாப்பிட வேண்டும்.



✱ ஆர். புனிதா, தஞ்சாவூர்.

? 'காட்ராக்ட்' என்ற நோய் எதனால் வருகிறது? அதன் அறிகுறிகள் யாவை? எந்த வயதில் வரும்? என்ன சிகிச்சை?

! 'காட்ராக்ட்' (Cataract) எனும் கண் புரை நோய், கண்ணில் இருக்கும் விழி ஆடி (lens) யில் ஒரு படலம் படிந்து பார்வையை மறைப்பதால் வருகிறது. இது பெரும்பாலும் மூப்பு காரணமாகவே ஏற்படுகிறது. தலை நரைப்பது போல இதுவும் உடல் முதுமை அடைவதன் அடையாளம் என்றே கருதப்படுகிறது. என்றாலும் உடலில் ஏற்படும் சில ரசாயன மாற்றங்கள், கண்களுக்கு ஏற்படும் காயங்கள், உடம்பில் தோன்றும் வேறு சில நோய்களின் பக்க விளைவு, பரம்பரை போன்ற அம்சங்களாலும் 'காட்ராக்ட்' வரலாம். 50 வயதிற்கு மேல் காட்ராக்ட் வருகிறது. என்றாலும் குழந்தைகளுக்குக் கூட காட்ராக்ட் உண்டாகக் கூடும். தாயின் வயிற்றில் இருக்கின்ற போது ஏற்படுகிற சில கிருமித் தொற்றினால், பிறக்கின்ற குழந்தைக்கு இது ஏற்படலாம். இதை பிறவிக் கண் புரை (Congenital Cataract) என்பார்கள். கண்ணில் படிப்படியாகப் பார்வை குறைந்து வருவதுதான் காட்ராக்ட் நோயின் பிரதான அறிகுறி. இந்த நோய்க்கு அறுவை சிகிச்சைதான் முழு நிவாரணம் தரும். பழுதான விழி ஆடியை அகற்றி விட்டு செயற்கை முறையில் செய்யப்பட்ட 'Intra Ocular Lens' (IOL) ஐ கண்ணில் பொருத்துவது தற்போது நடை முறையிலிருக்கும் அறுவை சிகிச்சை முறை.

✱ செ. கார்த்திகேயன், தக்கோலம்.

? சூடுபடுத்தப்பட்டு ஆறிய நீரில் கிருமிகள் உண்டா, இல்லையா?

!இல்லை! தண்ணீரைக் கொதிக்க வைக்கும் போது பெரும்பாலான கிருமிகள் அழிந்து விடுகின்றன. அந்தத் தண்ணீரில் மீண்டும் கிருமித் தொற்று வராமலிருக்க அதை நன்கு மூடி வைக்க வேண்டும்.


"இந்த வாரம் எனக்கு ராசி பலன் என்ன போட்டிருக்குன்னு சொல்லுங்கப்பா?"

"எதுக்குடா கேட்கறே?"

"இந்த வாரம்தான் புரோக்ரிஸ் ரிப்போர்ட் கொடுக்கறாங்க!"

- ஏழ்வரைக்கடியான்.





"நம்ம பையன் ரொம்ப சமத்தாய்ட்டானே! ஒட்டடை அடிச்சி வீட்டையெல்லாம் சுத்தம் செய்யறானே!"

"நீங்க ஒண்ணு! 'பரீட்சை வருது. படிடா'ன்னு சொன்னேன். அதான்!"


- எல். கோபாலகிருஷ்ணன்.

ஓங்க வீட்டுக் காக்காயோ?

திருவாழுத்தான்

சின்னியை அம்மா தூக்கி வந்து வாசல் திண்ணையில் உட்கார வைத்தாள். திரும்பிப் போய் ஒரு சின்ன டப்பாவில் நாலு பிஸ்கெட்டையும் அவன் படிக்கும் இங்கிலீஷ், தமிழ்ப் புத்தகங்களையும் கொண்டு வந்து வைத்து விட்டுச் சென்றாள்.

கால்கள் இரண்டும் சரியில்லை சின்னிக்கு. போலியோ என்கிற இளம் பிள்ளை வாத நோய் அவன் கால்களின் வளர்ச்சியை எடுத்துக் கொண்டு விட்டது. கால்கள் சூம்பி விட்டன. கால்களுக்கு எண்ணெய் தடவி, வெயில் பட உட்கார வைத்தால், சரியாகலாம் என்று நாட்டு மருத்துவர் சொல்லி இருந்தார்.



இப்போது சின்னி காலை வெயிலில் உட்கார்ந்திருக்கிறான். கிழக்குப் பார்த்த வீடாதலால், திண்ணையில் பாளமாக வெயில் விழுந்திருந்தது.

சின்னி என்ற சின்னப் பயனுக்கு வயது ஆறு ஆகிறது. அவனை ஒத்த சிறுவர்கள் சீருடை அணிந்து, ஷூக்கள் போட்டு, முதுகை அழுத்தும் புத்தகப் பையுடன் பள்ளி செல்கிறார்கள். அவனுக்கும் பள்ளி செல்ல ஆசை. இருந்தாலும் தன்னால் அவர்களைப் போல நடந்து செல்ல முடியாது என்பது புரிகிறது.

அதற்காக சின்னி படிக்காமல் இருக்கவில்லை. வீட்டிலேயே படிக்கிறான். அவனுடைய அப்பா புஸ்தகங்கள், சிலேட், நோட்டு, பென்சில்லெல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறார். சுவரில் மாட்டும் கரும்பலகையும், சாக்குக் கட்டிகளும் இருக்கின்றன. அவனுடைய அம்மா கற்றுத் தருகிறாள். சின்னி இப்போது நன்றாகப் படிக்க, எழுதக் கற்றுக் கொண்டு விட்டான்.

இப்படித் திண்ணையில் உட்கார்ந்து கொண்டால், அவனுக்குப் பொழுது கலபமாகப் போய் விடுகிறது. தெரு வில் ஜனங்கள் நடமாடுகிறார்கள். காய்கள், பழங்கள் என்று வியாபாரம் செய்பவர்கள் தலை மீது கூடையுடனும், நாலு சக்கர வண்டி தள்ளிக் கொண்டும் செல்கிறார்கள். சைக்கிள், ஸ்கூட்டர், கார் என்று செல்கின்றன. நாய்கள் இங் கும் அங்குமாக ஓடுகின்றன. ஏதாவது ஒரு பூனை தெரு ஓரமாக நின்று இரு புறமும் அச்சத்தோடு பார்த்து விட்டு விருட்டென்று

தெருவைக் கடந்து எதிர் வீட்டுக்குச் செல்கிறது. இவன் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள வேப்ப மரத்தில் காகங்கள் வந்து உட்கார்ந்து கத்துகின்றன. எதிரே மின்சாரக் கம்பியில் குருவிகள் வரிசையாக உட்கார்வது பார்ப்பதற்கு இனிய காட்சி. அணில்கள் ஓடி மரத்தின் மேல் மறையும். அடிமரத்தில் ஓணான் உட்கார்ந்தபடி, தலையைத் தலையை ஆட்டும். சாரி சாரியாக எறும்புகள் வாசல் எதிரே அரிசிமாவினால் அம்மா போட்ட கோலத்தைச் சுற்றி வந்து, மாவை எடுத்துச் செல்லும்.

இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தாலே சின்னிக்குப் பொழுது போவது தெரியாது. இவையெல்லாம் சலித்து விட்டால் இடையில் அவன் புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிப்பான். காகங்களையும், அணில்களையும் பார்த்தவுடன் அவனுக்கு பிஸ்கெட் கவனத்துக்கு வரும். டப்பாவைத் திறந்து, பிஸ்கெட்டை எடுத்துத் தான் பாதி சாப்பிட்டு விட்டு, மீதியை விண்டு விண்டு திண்ணையில் ஓரமாகப் போடுவான். அவற்றைக் காகங்கள் வந்து கொத்தி எடுத்துச் செல்லும். அணில்கள் வந்து திண்ணையில் உட்கார்ந்து அந்த பிஸ்கெட் துண்டுகளை எடுத்து, இருகைகளாலும் பிடித்துச் சொரண்டி சொரண்டித் தின்பது பார்ப்பதற்கு வெகு அழகாக இருக்கும். இப்போதெல்லாம் ஒரு குட்டி அணில் பயப்படாமல் அவன் அருகில் வந்து உட்கார்ந்து பிஸ்கெட் வேணும் என்பது போல அவனுடைய முகத்தைப் பார்க்கிறது. அது தன்னைக் கடித்து விடுமோ என்று கூட சின்னி பயப்படுகிறான்!

பிஸ்கெட் என்று இல்லை, ரொட்டி, பாப்கார்ன், பொரிகடலை என்று அம்மா கொறிப்பதற்காக மாற்றி மாற்றி அந்த டப்பாவில் வைத்திருப்பாள். அவற்றைக் காகங்களுடனும், அணில்களுடனும் பகிர்ந்து கொள்வதில் சின்னிக்கு மிகுந்த மகிழ்ச்சி.

மாலை நேரம் ஆகிவிட்டால், மற்ற வீட்டுச் சிறுவர்கள் தெருவில் விளையாடுவார்கள். அதைப் பார்ப்பதிலேயே சின்னிக்கு ரொம்ப மகிழ்ச்சி. நேரிலும், டி.வியிலும் விளையாட்டுப் போட்டிகளைப் பார்த்து ஆனந்தம் அடைவதில்லையா? அதுபோலத்தான்.

கண்ணாமூச்சி விளையாடுவார்கள். அதற்கு சின்னிதான் தாச்சி வீடு. திண்ணையில் உட்கார்ந்து கொண்டு சின்னி ஒவ்வொருவருக்கும் கண்களைத் தன் கைகளால் பொத்துவான். இதில் அவனுக்கும் அவர்களுடன் சேர்ந்து விளையாடிய மன நிறைவு கிடைக்கிறது.

அன்று அப்பா வீட்டில் இருந்தார். அம்மா வழக்கம் போல கால்களில் பச்சிலை எண்ணெய் தடவி, சின்னியைத் தூக்கி வந்து திண்ணை வெயிலில் உட்கார வைத்து விட்டுச் சென்றிருந்தாள்.



இவன் வந்து உட்காரவும், காத்திருந்தது போல அணில் குட்டி குடுகுடுவென ஓடி வந்து திண்ணை மீது ஏறியது.

சின்னி பிஸ்கெட் டப்பாவை எடுத்தான். அதற்குள் அது இவனுடைய மடி மீதே ஏறி விட்டது!

சின்னி டப்பாவைத் திறந்தான். ஒரு பிஸ்கெட்டை எடுத்துப் பாதியாக விள்ளுவதற்குள் அந்தப் பொல்லாத அணில் குட்டி அவனுடைய கையிலிருந்து முழு பிஸ்கெட்டையும் பறித்துக் கொண்டு, வாயிற் கவ்வி ஓடியது. திண்ணையில் ஒரு ஓரமாக உட்கார்ந்து தின்றது.

எதிர் வீட்டிலிருந்து ராஜம் ஓடி வந்தாள். ''அணில், பிஸ்கெட்டைப் பிடுங்கிடுத்தா சின்னி?'' என்று அவள் ஆதரவாகக் கேட்டாள்.

''பிடுங்கல்லே. நான்தான் கொடுத்தேன்.''

''கொடுத்தால் உன் கிட்ட இருந்து வாங்கிக்குமா?''

''வாங்கிக்கும். நாங்க ஃப்ரெண்ட்ஸ்.''

அப்போது ஒரு காகம் வந்து திண்ணையில் உட்கார்ந்தது. ஒரு பிஸ்கெட்டை எடுத்து விண்டு சின்னி வீசினான். அந்தரத்தில் அது பிஸ்கெட் துண்டைக் கவ்விக் கொண்டு பறந்தது.

''அட! காக்கா, அணில் இதெல்லாம் உன் கிட்ட ரொம்ப சிநேகிதமா இருக்கே!'' என்று ராஜம் வியப்புடன் சொன்னாள்.

''குருவி எல்லாம் கூட எனக்கு ஃபிரெண்ஸ்தான்.''

இதற்குள் இன்னும் நான்கு சிறுவர் சிறுமியர் வந்து கூடி விட்டனர். காகங்களும், அணில்களும் சின்னியிடம் நெருங்கி வந்து பிஸ்கெட் துண்டுகளை வாங்கிச் செல்வதைக் கண்டு அவர்களுக்கு ஆச்சர்யமாக இருந்தது. மகிழ்ச்சியாகவும் இருந்தது.

மகிழ்ச்சி அடையாதவன் சங்கரன் தான். அவன் மோசமான சிறுவன். அவன் அம்மா கூட அவனை விஷமக் கொடுக்கு என்று சொல்லுவாள்.



சங்கரன் ஒரு சிறு கல்லை எடுத்து உட்கார்ந்திருந்த காகத்தின் மீது பட்டும் படாதபடி வீசினான். காகம் தாவி எழுந்து, ''கா, கா'', என்று கத்தியபடி பறந்தது.

எச்சரிக்கை அடைந்த அணில் குஞ்சு வாலை உயர்த்தி, ஓடி மரத்தில் ஏறி ''கீச் கீச்'' என ஓலமிட்டது.

குருவிகளும் ''காச், மூச்'' என்று கத்தத் தொடங்கின.

சின்னி துடித்துப் போனான். அவனுக்கு ரொம்ப வருத்தம். சங்கரனைப் பார்த்துக் கேட்டான், ''ஏண்டா காக்காயைக் கல்லால் அடிச்சு விரட்டினே?''

''அப்படித்தான் விரட்டுவேன். அது உங்க வீட்டுக் காக்காயோ?''

''நம்ம எல்லாருக்கும்தான் அது ஃப்ரெண்ஸ்!'

''ஆமா. சின்னி சொல்றது சரிதான். நம் எல்லாருக்கும் காக்கா, குருவி, அணில் குட்டி ஃப்ரெண்டுதான். அதை எல்லாம் கல்லால் அடிச்சு விரட்டறது தப்பு.'' ராஜம் சின்னிக்குப் பரிந்து பேசினாள்.

''தப்பு என்ன இருக்கு இதுலே?'' - சுந்து சங்கரனுக்குப் பரிந்து வந்தான்.

''உயிர்களிடத்தில் அன்பு வேணும். பாரதியாரோட பாப்பா பாட்டுத் தெரியாதா உனக்கு?'' - சின்னி சுந்துவிடம் கேட்டான். யாருமே பதில் பேசவில்லை. குற்ற உணர்வு மனதைக் குத்தினாலும் வீம்புக்காகத் தன் தவறுக்கு வருத்தம் கூறாது நின்றனர் சங்கரனும், சுந்துவும்.

அந்தக் காலைப் பொழுதில், பள்ளி செல்லும் நேரத்தில் சின்னி வீட்டின் எதிரே ஒருவித விரோத சூழ்நிலை நிலவியது. சற்று நேரம் யாருமே பேசவில்லை. மெள்ள ஒவ்வொருவராக அங்கிருந்து அகன்றனர். சின்னி மட்டும் வருத்தத்தோடு திண்ணையில் உட்கார்ந்திருந்தான். சங்கரன், சுந்து போன்ற சிறுவர்கள் ஏன்தான் இந்த வாயில்லா உயிர்களை வதைக்கிறார்களோ என்ற கவலை அவனுள் எழுந்தது.

சற்று நேரம் கழித்து காகம் மீண்டும் திண்ணைக்கு வந்தது. ஜம் என்று சின்னிக்கு அருகில் உட்கார்ந்தது. சிறுவர்களில் யார் நல்லவன், யார் கெட்டவன் என்பது அதற்குத் தெரிந்திருக்கிறது என்று சின்னி நினைத்துக் கொண்டான்.

பிஸ்கெட்டை விண்டு போட்டான். காகம் கொத்தியது. அணில் குஞ்சு மரத்தி லிருந்து இறங்கி ஓடி வந்தது. அதுக்கும் பிஸ்கெட் கொடுத்தான். அவனுடைய கையிலிருந்து பெற்று, அருகில் உட்கார்ந்து கொறித்தது.

மறுநாள் அம்மா வழக்கம் போல



சின்னியை திண்ணையில் உட்கார வைத்து, புஸ்தகப் பையையும், டப்பாவில் வறுத்த பச்சைப் பட்டாணிக் கடலையையும் வைத்து விட்டுப் போனாள்.

சொல்லி வைத்தாற் போல உடனே அணில் குஞ்சு ஓடி வந்தது. கீச், கீச் என்று கத்தியது. அதனுடைய குரல் கேட்டு இரண்டு காகங்கள் வந்து மரக்கிளையில் அமர்ந்து கொண்டன.

ஒவ்வொரு பட்டாணிக்கடலையாக எடுத்து சின்னி உருட்டி விட்டான். காகங்களும், அணில் குஞ்சும், குருவிகளும் கொத்தின, கவ்வின, கொறித்தன.

தெருவில் பள்ளி செல்லும் சிறுவர்கள், சற்றுத் தள்ளி நின்று இந்த நிகழ்ச்சியை வேடிக்கை பார்த்தனர்.

சங்கரன் வந்தான். அவனைக் கண்டதும் ஒரு காகம் கத்தியபடி பறந்து



போய் மரக்கிளையில் உட்கார்ந்தது. இன்னொரு காகமும் தொடர்ந்து பறந்து சென்றது.

அச்சமடைந்த அணில் குஞ்சு செய்வதறியாது சின்னியின் தோள் மீது ஏறி உட்கார்ந்து ''கீச்'' என்று கத்தியது.

சங்கரன் நெருங்கி வந்தான். அவன் வருவதைக் கண்ட அணில் குஞ்சு, ''கீச், கீச்'' என்று மூச்சு விடாமல் கத்தியது.

''அது ஏன் கத்தறது?'' சங்கரன் சின்னியைக் கேட்டான்.

''கத்தலே, பேசறது.''

''என்ன பேசறது?''

''உனக்குப் புரியாது.''

''உனக்கு மட்டும் புரியுமா?''

''புரியும்.''

''எப்படி? உனக்கு மட்டும் எப்படிப் புரியறது?''

''நான் அதோட அன்பாய் பழகறேன். அது என் ஃப்ரெண்டு. அதனால எனக்குப் புரியும்.''

''இப்ப அணில் உங்கிட்ட என்ன சொல்லித்து?''

''உம்...? என்ன சொல்லித்துன்னா, இதோ இருக்கானே இந்த சங்கரன் - சிங்கம், புலி, பாம்பை விடக் கொடியவன். கவனமா இருன்னு எச்சரிக்கை பண்ணித்து!''

சங்கரனின் முகம் தொங்கி விட்டது.

சின்னி தொடர்ந்து சொன்னான், ''அப்புறம் என்ன சொல்லித்துன்னா, சின்னி, உனக்குக் கால் மட்டும்தான் ஊனம். இது சரியாயிடும். ஆனா இவனுக்கு உடம்பே ஊனம். அன்பு செலுத்தத் தெரியாத மனிதனை வேற எப்படிச் சொல்றது? இவன் பாரதியாரோட பாப்பாப் பாட்டைப் பாடக் கூட அருகதை இல்லாதவன். அவன் கூட சேராதே. துஷ்டரைக் கண்டால் தூர விலகுன்னு சொல்லித்து.''

சங்கரன் அழத் தொடங்கினான்.

''அழாதே, சங்கரா! நீயும் என்னைப் போல இந்த அணில் குஞ்சு, காக்கா, குருவி கிட்ட எல்லாம் அன்பா நடந்துக்கப் பழகிக் கொண்டால், இதுகளும் உன்னிடம் அன்பா நடந்துக்கும். உன் கூடப் பேசவும் பேசும்.''

சட்டைத் தலைப்பால் சங்கரன் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டான். அவனுடைய கண்கள் ஈரமாகியிருந்தன.

''சின்னி, இனிமே கல்லைத் தொடமாட்டேன். காக்கா, குருவி, அணில் எல்லாத்தையும் விரட்டமாட்டேன். நல்லவனாயிருப்பேன். உன் அணில் குஞ்சிடம் சொல்லேன்.''

புரிந்து விட்டதைப் போல ''கீச், கீச்'' என்று மகிழ்ச்சியோடு கத்தியது அணில் குஞ்சு.

புயா எடுத்த புகைப்படம்!

நகைச்சுவை உணர்வும், புத்திசாலித் தனமும் மிக்க புயாவுக்கு ஏராளமான நண்பர்கள். இந்தியர், சீனர், மலாய்க் காரர் என்று பல நாட்டவரும் அதில் உண்டு. பண்டிகை, விடுமுறை நாட்களில் ஒன்று கூடுவார்கள். சினிமா, ஓட்டல், சுற்றுலா எல்லாம் இருக்கும். ஒருவர் ஒருமுறை செலவை ஏற்றால், அடுத்த முறை இன்னொருவர். இப்படி ஒப்பந்தம் இல்லாத நட்பு; நடைமுறை இருந்து வந்தது.

இந்த நண்பர்கள் கூட்டத்தில் செலவு என்றாலே சோர்ந்து பின்வாங்கும் நண்பர் ஒருவர் இருந்தார். முறைபோட்டு மற்றவர்கள் செலவை ஏற்பது போல இவர் செய்ய மாட்டார். 'மறந்து போச்சு', 'பர்சை எடுத்து வரலே' என்று ஏதாவது சாக்குபோக்குச் சொல்லுவார். செலவு செய்யாது 'அழுகுணித்தனம்' பண்ணுவார். அதனால், இவரை எல்லோரும் அ.ந. (அழுகுணி நண்பர்) என்று குறிப்பிடுவார்கள்.

ஒருநாள் எல்லோரும் கூடி இருக்கையில் அ.ந. வைப் பற்றிப் பேச்சு வந்தது. அங்கே அ.ந. இல்லை. அதனால் எல்லோரும் புயாவிடம் தாங்கள் அ.ந.விடம் ஏமாந்த கதைகளைக் கூறினர்.

''புயா, நீங்கள்தான் புத்திசாலி ஆயிற்றே? எப்படியாவது அ.ந.வைச் செலவு பண்ண வையுங்களேன்?'' என்று கேட்டார் ஒரு நண்பர்.

தாங்கள் அ.ந.விடம் ஏமாந்த தொகைக்கு கணக்குச் சொன்ன இன்னொரு நண்பர், ''மொத்தமாக அவரிடம் நாங்கள் இருநூற்றைம்பது வெள்ளிக்கு (வெள்ளி என்பது சிங்கப்பூர் டாலர். சுமார் இருபது ரூபாய் மதிப்புடையது) ஏமாந்திருக்கிறோம்'' என்று வருந்தினார்.

''கவலைப்படாதீர்கள். நல்ல வாய்ப்புக் கிடைக்கும் போது இதை அவரிடமே கறந்து உங்களுக்குப் பிரித்துக் கொடுத்து விடுகிறேன்'' என்று வாக்களித்தார் புயா. புயா எதிர்பார்த்த நல்ல வாய்ப்பு உடனே வந்தது.

அ.ந. புயாவைத் தொலைபேசியில் அழைத்தார்.

''புயா, ஓர் உதவி. என் மாமா நாளை சென்னையில் இருந்து வருகிறார். இங்கே என்னுடன் மூன்று நாட்கள் இருப்பார். ஊரெல்லாம் சுற்றிப் பார்க்கப் போகிறார். அவர் சாங்கி விமான நிலையத்தில் வந்து இறங்குவதில் இருந்து, திரும்பிப் போகும் வரை என்னையும் அவரையும் போட்டோ எடுத்துத் தள்ள வேண்டும். நீங்கள்தான் திறமையான புகைப்படக்காரர் ஆயிற்றே?''

''செலவெல்லாம் யாருடையது? என்னுடைய மூன்று நாள் லீவு போகுமே?''

''நீங்கள் சும்மா லீவு எடுக்க வேண்டாம் புயா. அதற்கு நான் தனியாக ஏதாவது தந்து விடுகிறேன். உங்கள் மூன்று நாள் செலவும் என்னுடையது. புகைப்படச் செலவும் என்னுடையது.''





''முதலில் பணத்தைக் கொடுத்துனுப்புங்கள். பிளிமை நானே வாங்கி விடறேன். ஆமாம், காரணமில்லாது நீங்கள் இப்படிச் செலவழிக்க மாட்டீர்களே?''

''மாமாவுக்கு ஏராளமான சொத்து. குழந்தை குட்டி இல்லை. பாதி சொத்தை எனக்கு எழுதி வைக்கப் போகிறார். அவரை மகிழ்விக்கவே இது. இப்பவே பணத்தைக் கொண்டு வரேன். ஒத்துழையுங்கள் புயா'' - அ.ந. குழைந்து கெஞ்சினார்.

சிங்கப்பூர் விமான நிலையத்தின் பெயர் சாங்கி. நவீன வசதிகள் எல்லாம் கொண்டது. உணவகம், மருத்துவமனை, கடைகள், திரையரங்கு, நீச்சல் குளம் என்று எல்லாம் நிறைந்து தனியான ஓர் உலகமாகவே திகழ்ந்தது அது. அதோடு மிகவும் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வரும் பெருமை கொண்டது.

விமானங்கள் போவதும் வருவதுமாக, தேனீக் கூட்டத்தைப் போல் சுறுசுறுப்பாக இயங்கிய 'சாங்கி' விமான நிலையத்திற்கு அ.ந. வோடு போனார் புயா.

விமான நிலையத்தில் நகரும் பாதையில் மாமா வந்து சேர்ந்தார். ''என்ன மாதிரி அப்பழுக்கில்லாமல் இத்தனை சுத்தமாகப் பராமரிக்கிறார்கள்! எத்தனை விரைவாக சோதனைகளை முடித்து அனுப்புகிறார்கள்! எவ்வளவு கண்ணியமாக, மரியாதையாக நடந்து கொள்கிறார்கள்!'' என்று வியந்தார் மாமா.

விமான நிலைய வரவேற்புக் கூடத்தில் இருந்த செயற்கை அருவிக்கு அருகே அ.ந.வையும், மாமாவையும்

வைத்துப் புகைப்படம் எடுக்கும் பணியைத் தொடங்கினார் புயா.

''சாலைகள் எல்லாம் என்னமாய் அமைந்திருக்கு! தூம்பு தூசு இல்லையே! எப்படித்தான் பராமரிக்கிறார்களோ! கழுத்து வலிக்கக் கட்டடங்கள்! எங்கும் பசுமை. ஒழுங்கு. சாலைகளில் இத்தனை பூ பூத்திருக்கே! யாரும் பறிக்க மாட்டாங்களா?'' என்று வியந்து வியந்து கேட்டார் மாமா.

''மாட்டாங்க. இயற்கை அழகைப் பாதுகாக்கும் உணர்வு இங்கு எல்லோருக்கும் உண்டு. மலர்களையோ, புல் வெளியையோ நாசப்படுத்தினால்



தண்டனையும் உண்டு. ஆனால் அதை மக்களே கொடுப்பார்கள். இப்படி நாசப் படுத்துபவர்களைக் கல்லால் அடிக்க மக்களுக்கே உரிமை உண்டு'' என்றார் புயா.

அடுத்த நாள் சிங்கப்பூருக்கு சிறப்புத் தரும் ''ஜுராங் பறவைகள் பூங்கா'' (JURANG BIRDS PARK) வுக்கு மூவரும் சென்றனர். இருபது ஹெக்டர் நிலப்பரப்பில் அமைந்திருந்த அந்த இயற்கை கொஞ்சும் பூங்காவில் உலகத்தில் உள்ள எல்லாப் பறவைகளும் இயற்கையான சூழ்நிலையில் காட்சிப் பொருளாக இருந்தன. குளிர்ப்பிரதேசமான வடதுருவக் கரடிகளும், அண்டார்க்டிகாவின் பெங்குவிலும் கூட, குளிர்ப்பதனம் செய்யப்பட்ட அழகு கொஞ்சும் கூடத்தில் வரவேற்றன; பிரமிப்பில் ஆழ்த்தின. அங்கே மாமாவையும், அ.ந. வையும் புகைப்படம்.

ஒவ்வொரு இடமாகச் சென்று பார்க்க முடியாதவர்களுக்கு வசதியாக சுற்றிப் பார்க்க உயரத்தில் பாதை அமைத்து சொகுசு ரயிலும் ஓடியது. கண்ணுக்கு விருந்தளித்த அந்த அழகு ரயிலில் இனிய இசை. தொடர்ந்து ரயில் போகின்ற இடங்களைச் சுற்றிலும் என்ன பறவைகள் இருக்கின்றன, அவை எந்த நாட்டைச் சேர்ந்தவை, உணவுப் பழக்கங்கள், முட்டையிடுவது, குஞ்சு பொரிப்பது போன்ற எல்லா விவரங்களும் கேட்டன. ரயிலிலேயே மாமா அ.ந.வை வைத்து புகைப்படம்.

தனியான திறந்தவெளி அரங்கு ஒன்றில், இயற்கை அழகு கொஞ்சும் சூழ்நிலையில் கழுகுகளையும் ஆந்தைகளையும் வைத்து ஒரு காட்சி நடத்தினார்கள். இசை ஒலி கேட்டதும் பறவைகள் ஒன்று

கேளுங்கள் சொல்லப்படும்!

★ புலிசர்ப்பு விசையைக் கண்டு பிடித்த சர்ஜசக் நியூட்டன், பார்லிமெண்ட் உறுப்பினராக இருந்திருக்கிறாராமே? - மெ. கண்ணப்பராஜா, அரியாங்குப்பம்.

உண்மைதான். ஆனால் பார்லிமெண்டில் அவர் எதையும் சாதிக்கவும் இல்லை; பேசக் கூட இல்லை! பார்லிமெண்டில் அவர் வாய்திறந்து பேசியது ஒரே ஒரு முறைதானாம். அதுகூட எதற்காகத் தெரியுமா? 'ஜன்னல் கதவைத் திறவுங்கள். புழுக்கமாக இருக்கிறது'' என்பதுதான்!

கூடி பார்க்க வந்தவர்களை வரவேற்க வட்டமிட்டன. காட்சி நடத்தியவரது கட்டளைகக்கு ஏற்ப உட்கார்ந்தும் பறந்தும் இறங்கி தரையில் குதித்தும் நடந்தும் குட்டிக்கரணம் போட்டும் பாய்ந்தும் அவர் கையில் இருந்து உணவை வாங்கிச் சென்றது ஆயுள் முழுவதும் மறக்க முடியாத காட்சி. காட்சி நடத்தியவர்களுடன் புகைப்படம். கழுகையும், ஆந்தையையும் கையில் வைத்துக் கொள்ளக் கட்டணம் கொடுத்துப் புகைப்படம்.

இதே போல் பச்சைக் கிளிகளை வைத்தும் ஒரு காட்சி நடந்தது. நடத்துபவரது கட்டளைக்கு ஏற்ப ஆஸ்திரேலியக் கிளிகள் வணக்கம் கூறி வரவேற்பளித்தன. நடனம் ஆடின. வளையங்களை உருட்டி குட்டிக்கரணம் போட்டன. துப்பாக்கி சுட்டன. இங்கும் புகைப்படம். காட்சி நடத்தியதுடன் அந்தப் பறவை இனங்களைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் கூறிக் கொண்டே வந்தார்கள்.

ஒரு இடத்தில் தவிட்டுக் குருவிகளையும், கிளிகளையும், மரங்கொத்திகளையும் ஒரு பயிற்சியாளர் பணம் கொடுத்தால் வருவோர் உடம்பில் உட்கார வைத்துப் புகைப்படம் எடுக்க அனுமதித்தார். புயா சும்மா விடுவாரா? மாமாவையும் அ.ந. வையும் புகைப்படம் எடுத்துத் தள்ளினார்.

பறவைப் பூங்காவில் பறவைகளோடு சாப்பிடவும் ஏற்பாடு செய்திருந்தார்கள். எல்லாம் கட்டணம் கொடுத்துத்தான். புயா புகைப்படம் பிடித்துத் தள்ளினார்.

அடுத்த நாள் முதலைகளின் சொர்க்கம்' (CROCODILE PARADISE) என்று அழைக்கப்பட்ட முதலைப் பண்ணைக்கு விஜயம். முதலைக் காட்சி அரங்கில் ரூபாய் நோட்டை முதலையின் திறந்த வாய்க்குள் வைத்து விட்டு, ஒருவர் தன் தலையை நுழைத்து, தன் வாயால் அந்த நோட்டை எடுத்து பிரமிப்பில் ஆழ்த்தினார். முதலைக்கு முத்தம் தந்தார். குழந்தைகளை உப்பு மூட்டை தூக்குவது போல் முதலையைத் தூக்கிக் கொண்டு இசைக்கு ஏற்ப ஆடினார். மாமாவும் அந்த முதலையைத் தூக்கிக் கொண்டு, காசு கொடுத்து விட்டு ஆடினார். புயா புகைப்படம் எடுத்தார்.

மூன்று நாட்களும் போவது தெரியாது பறந்தன. மாமாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவர் விமானக் கூடத்தில், கண்ணாடிச் சுவருக்கு அப்பால் இருந்து கையை ஆட்டி விடைபெற்றதையும் கடைசியாகப் படமெடுத்தார் புயா.

கேளுங்கள் சொல்லப்படும்!

★ ஆந்தை ஓர் அபசகுனப் பறவையா? - து. செல்லம்மாள், ஆரணி.

இல்லவே இல்லை. நம்முடைய முன்னோர்கள் அப்படி அதை வர்ணித்து விட்டார்கள். எலிகளை அழித்து ஆந்தை மனிதகுலத்திற்கு நன்மை செய்கிறது. வட இந்தியாவில் ஆந்தை லட்சுமியின் வாகனம். 'Lady with the Lamp' எனப்படும் பிளாரென்ஸ் நைட்டிங்கேர்ல், தனது பைக்குள் ஒரு குட்டி செல்ல ஆந்தையை எப்பொழுதும் வைத்திருந்தார்!

ஐந்து ரோல் காலி! புயா பாதுகாப்பாகக் கொடுத்த ஐந்து பிலிம் ரோல்களையும், ஆவலுடன் கவனமாக வாங்கிக் கொண்டார் அ.ந.

ஒரு மணி நேரத்திற்கெல்லாம் தொலைபேசி கிணுகிணுத்தது. அ.ந. தான் பேசினார். அதிர்ச்சி குரலில் தெரிந்தது.

''என்ன புயா! எல்லாம் பழைய பிலிமாமே? மத்தாப்பு வெளிச்சம் மாதிரி எல்லாம் இருக்காமே? எதிலும் உருவம் இல்லையாமே? ஸ்டூடியோக்காரன் சொல்கிறான்!''

''அடடா! பழைய பிலிமா? அவசரத்தில் நான்தான் வாங்கினேன். தேதியைக் கவனிக்கவில்லை. இப்ப என்ன பண்றது?''

''என்ன புயா? நான் கேட்க வேண்டியதை நீங்கள் கேட்கிறீர்களே? எத்தனை செலவு பண்ணியிருக்கேன் தெரியுமா? பிரிண்ட் போட்டு ஒரு தனி செட்டை, அழகான ஆல்பத்தில் ஒட்டி அடுத்த வாரமே அனுப்பறேன்னு மாமாவிடம் வேற ஜம்பமா சொல்விட்டேன். புயா, என்னை எப்படியாவது காப்பாத்த வேண்டியது உங்க பொறுப்பு'' - அ.ந. அழுதே விட்டார்.

''ஒண்ணு பண்ணலாம். புகைப்படத் தந்திரக் கலையில் சிறந்த ஒரு நண்பர் இருக்கிறார். அவர் எனக்காக எதுவும் பண்ணுவார். நாம் போய் போட்டோ எடுத்த எல்லா இடங்களிலும், நீங்களும் உங்கள் மாமாவும் இருக்கும்படி புகைப் படங்களைத் தயார் பண்ணித் தருவார். கவலையே வேண்டாம். ஆனால், நாலு பங்கு செலவாகும். பணத்தை முதலில் கேட்பார்.''

''செலவைப் பற்றி இப்ப நினைக்க முடியுமா? பணத்தை உடனே கொடுத்தனுப்பறேன்.''

நண்பர்களுடன் புயா உட்கார்ந்திருந்தார்.

''மொத்தமாக நீங்களெல்லாம் அ.ந. விடம் 'ஏமாந்தது இருநூற்றைம்பது டாலர்தானே? இதோ அந்தத் தொகை. பிரித்து எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று பணத்தைக் கொடுத்தார். அ.ந. தன்னிடம் வகையாகச் சிக்கிக் கொண்டதை விவரித்த புயா, ''அ.ந. மட்டும் புத்திசாலியாக இருந்தால், 'காலாவதியாகி யாகி விட்ட பழைய பிலிம் ரோல்களை விற்பது ஏமாற்றுக் குற்றம். சிங்கப்பூரில் கடுந் தண்டனை. எங்கே அதை வாங்கினீர்கள்?' என்று என்னை மடக்கியிருக்கலாம். அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் அதை அவர் யோசிக்கவில்லை. அதுதான் எனக்கு வெற்றியைத் தேடித் தந்தது. நல்ல பிலிமில்தான் முதலில் படம் எடுத்தேன். அ.ந.விடம் தரும் போது பழைய பிலிம் ரோல்களைக் கொடுத்து விட்டேன்'' என்று சிரித்தார்.

இப்பொழுதெல்லாம் அ.ந. எல்லோரிடமும் கண்ணியமாக நடந்து கொள்கிறாராம்! - ரே.

கேளுங்கள் சொல்லப்படும்!

★ அல்பர்ட் ஐன்ஸ்டினுக்கு நோபல் பரிசு எந்த ஆண்டு தரப்பட்டது? மொ. ஆசையம்மாள், வில்லியனூர்.

1921 ஆம் ஆண்டு இயற்பியலுக்காக (PHYSICS) இவரது பிரபலமான சார்பியல் கொள்கைக் (RELATIVITY THEORY) காகவே இது வழங்கப்பட்டது என்று பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இது உண்மையல்ல. PHOTO ELECTRIC EFFECT கொள்கைக்காகவே நோபல் பரிசு வழங்கப்பட்டது. சார்பியல் கொள்கை இதற்கும் 16 ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டது என்பதும் அது பரிசு பெறாததும் வேடிக்கை!


பிருந்தாவனக் கவியரங்கம்


பேருந்து

பாம் பாம் பேருந்து
பெரிய சிவப்புப் பேருந்து
எம்மை என்ன எவரையும்
ஏற்றிச் செல்லும் பேருந்து.

சாத்திரம் மொழியும் இதற்கில்லை
சாதி மதங்கள் இதற்கில்லை
துட்டைக் கொடுத்து வாங்கிட்டால்
துரிதமாய் எங்கும் சென்றிடலாம்.

- மு. முபாரக்கான், பாரதிபுரம்.





கடலே...

மீனவர் குடும்பம் வாழ்ந்திட நீயும்
மீன்களை அளிக்கின்றாய்
உந்தன் கரையில் குடிசையில்
வாழும்
உயிர்களை அழிக்கின்றாய்!

உலகில் வாழும் மக்கள் பெருக்கம்
உயர்வதை அறிந்தவன் நீ
பலமுறை கரையைக் கடந்து வந்து
பூமியை அழிப்பது ஏன்?

எத்தனை வளங்கள் உன்னிடம்
உண்டு
என்பதை அறிந்தவன் நீ.
அத்தனை இருந்தும் எங்களை நீயும்
அழிக்க அலைவது ஏன்?

- த. சூரியகுமார், ஆதலையூர்.

புதிய உலகம் காண்போம்

விண்ணில் தோட்டம்
அமைத்திடுவோம்;
விளைச்சல் அதிலே கண்டிடுவோம்;
மண்ணில் காணும் உயிர்களையும்;
வானில் வாழச் செய்திடுவோம்.

மண்ணும் விண்ணும்
இணைத்திடுவோம்;
மதியைக் கூடச் சேர்த்திடுவோம்;
அன்பை அங்கே
விதைத்திடுவோம்;
அழிவை நீக்கி வாழ்ந்திடுவோம்.

- மு. வில்லவன், திண்டுக்கல்.



பிருந்தாவனக் கவியரங்கம்



சிட்டுக் குருவி

சிட்டுக்குருவி சிட்டுக் குருவி
சிறகடிக்கும் சிட்டுக் குருவி
பட்டுப் போன்ற மேனிகொண்டு
பறந்து திரியும் சிட்டுக்குருவி!

தத்தித்தத்திப் பறக்கும் குருவி
தவிட்டுப் பெட்டியில் வாழும் குருவி!

கொத்தித் தின்னும் அழகுக் குருவி
கூட்டமாகக் கூடும் குருவி!

தம்பிப் பயல் பிடிக்கப் போனால்
தப்பி போடும் சிட்டுக் குருவி
அம்பு போல பறந்து போகும்
அழகைக் கண்டால் பாடல் பிறக்கும்

- பெ. கணேசந் முருகன்,
பட்டுக்கோட்டை.











பூனையார்

எங்கள் வீட்டுப் பூனையார்
எட்டுக் குட்டி போட்டாராம்

எட்டுக் குட்டி அருகினிலே
எவரும் போக அஞ்சினாராம்

எட்ட நின்று பார்த்தாலும்
ஏனோ உறுமிக் காட்டினாராம்!

எங்கள் அம்மா யோசித்தே
ஏற்ற தந்திரம் செய்தாராம்!

பாலைத் தட்டில் ஊற்றியே
பரிவாய் அருகே வைத்தாராம்!

விடுக்கென எழுந்த பூனையார்
விரும்பி விரும்பிக் குடித்தாராம்

வயறு நிறைந்த மகிழ்ச்சியில்
வாலை உயர்த்தி வந்தாராம்!

அருமை அம்மா காலடியில்
அன்பாய் உரசி நின்றாராம்!

அதற்குப் பிறகே குட்டிகளை
அம்மா எடுக்க அனுமதித்தார்!

- அ. திருமாவளவன்,
சென்னை - 26.







இனிப்புக் கடை

எங்கள் தெருவின் கோடியிலே
இருக்குது ஐயா இனிப்புக் கடை
தங்க வண்ணம் பளபளக்க
தட்டுத் தட்டாய் இனிப்புவகை!

பாதுஷா ஜாங்கிரி லட்டுடனே
பால் கோவாவும் பர்பி வகை -
புதிதாய் செய்த மைசூர்பாக்
பாங்காய் மணந்து மயக்கிடுதே!

மாலை வேளை வந்தவுடன்
மக்கள் இனிப்பை வாங்குகிறார்
சாலை ஓரம் நின்றபடி
செல்வர் இனிப்பைச்
சுவைக்கின்றார்

எனக்கு மட்டும் பிடிக்காதா?
எல்லாம் திங்க மறுப்பேனா?
என்னிடம் காசு இருந்தாலே
எல்லாம் வாங்கித் தின்பேனே?

– வே. செந்தில்குமார்,
சூனாம்பேடு.



பார் பார்!

சின்ன சின்ன காரு பார்
சிறகு இல்லாக் காரு பார்
வண்ண வண்ண நிறத்திலே
வளைய வரும் காரு பார்

குட்டி குட்டி காரு பார்
குலுக்கல் இல்லா காரு பார்
எட்ட நின்று கண்டிடில்
என்னைக் காட்டும் காரு பார்!

பந்தயக் குதிரை தோற்கவே
பாய்ந்து வரும் காரு பார்
சொந்தம் கொள்ள எவரையும்
சிந்தை அள்ளும் காரு பார்

மன்னர் அமைச்சர் நடிகர்கள்
மிதப்பாய் செல்லும் காரு பார்
என்னைப் போன்ற ஏழைகள்
ஏங்கிப் பார்க்கும் காரைப் பார்!

– எஸ். ஜான்சி,
செட்டிக்குறிச்சி.



பந்தாடு!

பந்தாடம்மா பந்தாடு
பள்ளிப் புறாவே! பந்தாடு
துள்ளி ஓடிப் பந்தாடு
துணிவு கொண்டே பந்தாடு
குத்து விளக்கே! பந்தாடு
கூடிப் பழகிப் பந்தாடு

– எஃப். இரஹமத்துல்லா
ஷெரீப், திண்டிவனம்.



தப்புத்தான்!

து.ரமேஷ்

சேது தெருமுனையைத் தாண்டி விட்டான். எதிரே, அவசரம் அவசரமாக ராகவன் வந்து கொண்டிருந்தான்.

''என்னடா ராகு, பள்ளிக்கூடத்துக்கு வரலே?'' - சேதுதான் கேட்டான்.

''வருவேன்டா. ஆனா லேட்டாகும். கணக்குப் புத்தகம் இல்லாம வகுப்புக்கு வரக் கூடாதுன்னு கணக்கு ஆசிரியர் உறுதியா சொல்லிட்டாரே? எங்கப்பாவுக்கு ஒரு வாரமா உடம்பு சரியில்லே. அர்ச்சனை பண்ணக் கோவிலுக்குப் போறதில்லே. வேற யாரோதான் பண்றாங்க. அதனால வரும்படி இல்லே. பக்கத்துத் தெரு பூபதியோட அப்பாகிட்ட ஐம்பது ரூபாய் கடன் வாங்கிட்டு வரச் சொன்னார் எங்கப்பா. அங்கேதான் போய்க்கிட்டிருக்கேன். பணம் கிடைச்சா, கணக்குப் புத்தகம் வாங்கிக்கிட்டு பள்ளிக்கு வருவேன்'' என்றான் ராகவன்.

சேதுவுக்கு ஒரு யோசனை தோன்றியது.

''ராகு, கோவில் உண்டியலில் போடச் சொல்லி எங்க பாட்டி நூறு ரூபாய் தந்திருக்காங்க. அதை உன் கண் முன்னால போடணும்னு வேற சொல்லியிருக்காங்க. நீதான் ரொம்ப நல்ல பிள்ளை ஆச்சே?''

''இது ஆறு மாதத்துக்கு ஒரு தடவை, நடக்க முடியாத உங்க பாட்டி பண்ற காரியம்தானே?''

''நான் ஒரு யோசனை சொல்றேன். பாட்டியின் பணத்தை நாம எடுத்துக்குவோம். உனக்கும் ஐம்பது ரூபாய் கிடைக்கும். கடன் வாங்கும் அவசியமே இருக்காது?''

''ஐயோ, எனக்கு வேண்டாம்பா. உங்க பாட்டி உன்னை ஏன் நம்ப மாட்டேங்கறாங்க என்பது இப்பத்தான் தெரியுது. சாமி உண்டி பணம். எனக்கு வேண்டாம்பா'' என்று பதறினான் ராகவன்.

''போடா பைத்தியக்காரா. சாமி என்ன, பார்க்கவா போகுது? இல்லை, கணக்குக் கேட்கப் போகுதா?''

''எனக்கு வேண்டாம். அதோட என் கண் முன்னால்தான் நீ பாட்டியின் பணத்தை உண்டியலில் போடணும்'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டு விரைந்தான் ராகவன்.

''போடா, பெரிய அரிச்சந்திரன் இவரு'' என்று எரிச்சலோடு கத்தினான் சேது.


அன்று பள்ளியில் ரிசல்ட் போட்டிருந்தார்கள். அப்பாவுக்கு உடம்பு சரியாகாததால், பூசை பண்ண ராகவனே கோவிலுக்கு வந்திருந்தான். கோவிலில் நல்ல கூட்டம். ரிசல்ட் போட்டிருக்கும் செய்தி தெரிந்த போதும், ராகவனால் உடனே சென்று பார்க்க முடியவில்லை. எதேச்சையாக சாமி கும்பிட சேது வந்திருப்பதைப் பார்த்தான்.

''சேது, ரிசல்ட் பார்க்க பள்ளிக்குத் தானே போறே? என்னால போக முடியலே. நீ, என்னோட ரிசல்ட்டையும் பார்த்துக் கொண்டு வந்து சொல்லேன்!'' என்று கெஞ்சினான் ராகவன்.

''சரிடா'' என்று கிளம்பினான் சேது.

ரிசல்ட் போட்டிருந்தார்கள். முதலாவதாகத் தேறிய மாணவர் பட்டியலில் ராகவனின் பெயர் தலைப்பில் இருந்தது. சேது ஃபெயில்!

பாட்டி கொடுத்த உண்டியல் பணத்தைப் பங்கு போட்டு அபகரிக்க ராகவன் ஒத்துழைக்க மறுத்ததால் ஏற்பட்ட ஆத்திரம் சேதுவுக்கு இன்னும் தீரவில்லை. அதோடு, அவன் ஃபெயில் வேறு. எல்லாமாகச் சேர்ந்து கொண்டு ராகவனை எப்படியாவது பழிதீர்த்துக் கொள்ள சேதுவைத் துணியவைத்தது.



"என்னடா சேது? ரிசல்ட்டைப் பார்த்தியா?" என்று ஆவலுடன் கேட்டான் ராகவன்.

"பார்த்தேண்டா. தேறினவர்கள் பட்டியலில் உன் பெயர் இல்லைடா. நீ ஃபெயில்" என்று முகத்தில் சோகத்தை வரவழைத்துக் கொண்டான் சேது.

அதன் விளைவு அடுத்த நாளே தெரிந்தது. ராகவனைக் காணவில்லை. கோவிலுக்கும் போகவில்லை. வீட்டிலும் இல்லை. பெயிலான துக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது வீட்டை விட்டு ஓடிப் போய் விட்டான். கிணற் [illegible]ந்து தற்கொலை செய்து விட்டதாகக் கூடப் பேசிக் [illegible]ார்கள்.

சேதுவின் மன அமைதி அடியோடு போய் விட்டது. தான் கூறிய பொய் தானே இத்தனைக்கும் காரணம் என்று அவன் மனசாட்சி குடைந்தது. இரவில் தூக்கம் வரவில்லை. ராகவன் பிசாசாக வந்து எதிரே நின்று அவனைக் கிழிக்க வருவது போல் கனவு! சேது நடுங்கி நடுங்கி உருக்குலைந்தான்.

அன்று இரவு. மணி பன்னிரண்டு. ஏதோ சப்தம் கேட்டது. சேது எழுந்து பார்த்தான். அறை ஜன்னலில் ஏதோ ஓர் உருவம்! ராகவன் மாதிரியே இருந்தது. இறந்து போன அவனுடைய பேயாக இருக்குமோ? சேது நடுங்கினான்.


"ராகவா, என்னை ஒண்ணும் பண்ணாதேடா. நான் பண்ணினதெல்லாம் தப்புத்தான். நீ முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று, தலைப்பில் உன் பெயர்தான் இருந்தது. நான்தான் உன் அமைதியைக் குலைக்க வேண்டும் என்று பெயிலாக்கினேன். என்னை மன்னித்து விடு" என்று கெஞ்சினான் சேது.

"ஏண்டா பயப்படறே? நான் நிஜமான ராகவன்தாண்டா. இன்னும் சாகலே. நீ பார்த்துக் கொண்டு வந்து ரிசல்டைச் சொன்னதும், ஊரை விட்டு ஓடும் எண்ணத்தில்தான் நான் கிளம்பி வந்தேன். வழியில் நம் வகுப்பாசிரியரைப் பார்த்தேன். அவர் உண்மையைக் கூறி என்னை உற்சாகப்படுத்தினார். அதோடு, உனக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்பதற்காக, என்னை அவர் வீட்டில் இரகசியமாக இருக்க வைத்தார். ஒரு வாரமா அவர் வீட்டில்தான் இருக்கேன்" என்றான் ராகவன்.


"அப்பாடி! இப்பத்தான் நிம்மதி ஆச்சு. இனி விளையாட்டுக்குக் கூட இப்படிப் பொய் சொல்ல மாட்டேன். எனக்குப் புத்தி வந்தது" என்று மன நிறைவோடு சிரித்தான் சேது. ராகவனும் சேர்ந்து கொண்டான்.

காளான்கள்

ஆழி



காளான்கள், நாய்க்குடைகள், பூஞ்சைகள் எல்லாம் ஒரே தொகுதியைச் சேர்ந்தவை. காளான்கள் தாவரங்களே. இவற்றில் பச்சையம் இல்லாத தால் ஒளிச் சேர்க்கை ஈடு பெறுவதில்லை. உணவுப் பழக்கத்தின் படி, இவை ஒட்டுண்ணிகளாகவோ, சாறுண்ணிகளாகவோ உள்ளன. இவற்றால் உணவைத் தாமே தயாரித்துக்கொள்ள முடியாது!



காளான்கள் தாவரமானாலும் அவற்றுக்கு இலையும் இல்லை, பூவும் இல்லை, விதையும் இல்லை. காளான்களிலுள்ள ஒரு செல் ஸ்போர்கள் மூலம் புதிய காளான்கள் முளைக்கின்றன!




ஒரு தனிக்காளான் எண்ணிலடங்காத தூசிபோன்ற ஸ்போர்களை உற்பத்தி செய்கிறது. உலகில் அதிகமாக இனவிருத்தி செய்யும் தாவரம் காளான்தான்!

காளான்கள் மிகவும் விரைவாக வளரக் கூடியவை. சில நாட்கள்தாம் ஆயுள். காளான்களில் மிகவும் குறைந்த ஆயுள் உடையது 'தேரையின் இருக்கை' என்பது. இது தோன்றி சில மணி நேரத்தில் அழிந்துவிடும்!






காளான்களில் சுமார் 50,000 வகைகள் இருக்கின்றன. நம்நாட்டில் சுமார் 3,500 வகையான காளான்கள் இருக்கின்றன.





காளான்களால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. காளான்களில் பலவகைகள் உணவாகப் பயன்படுகின்றன. ஆனால், வேறு பலவகைகள் நச்சுத்தன்மை வாய்ந்தவை. உயிருக்கே ஆபத்து உண்டாக்கக் கூடியவை.

'பென்சீலியம் நொடேடம்' என்பது ஒரு வகை பூஞ்சைக் காளான். இதிலிருந்து 'பெனிசிலின்' என்னும் ஆன்ட்டி பயாடிக் மருந்து தயாரிக்கப் படுகிறது.




'எர்காட்' என்னும் பூஞ்சைக் காளான் நமது உடலில் உள்ள இரத்தக் குழாய்களின் சுவர்களைச் சுருக்கக் கூடியது. இந்தக் காளானிலிருந்து மருந்து தயாரிக்கிறார்கள்.






கேரளாவில், நிலத்தின் அடியில் வளரும் ஒரு வகைக் காளான், மஞ்சள் காமாலை நோய்க்கு மருந்தாகத் தரப்படுகிறது. சீனாவில் மருந்துக்காக 107 வகையான காளான்கள் வளர்க்கப்படுகின்றன.



'ட்ருப்பில்' என்னும் உணவுக் காளான் பூமிக்குக் கீழே வளரக் கூடியது. அந்தக் காளான் இருக்கும் இடத்தை மனிதனால் கண்டுபிடிக்க முடியாது. அதை மோப்பம் பிடித்துக் கண்டு பிடிக்க ஐரோப்பாவில் பன்றிகளை வளர்க்கிறார்கள். அங்கே இந்தக் காளான் மிகவும் விரும்பப்படும் உணவு.



'அமானிடா மஸ்காரியா' என்னும் பூஞ்சைக்காளான் இரத்தத்தில் கொலஸ்ட்ரால் என்னும் கொழுப்பைக் கட்டுப்படுத்துகிறது. இதிலேயே சில வகை இரத்தக் கொதிப்பைக் குறைக்கின்றன.


உணவுக்காகப் பயன்படும் காளான்களில் 54 சதவீதம் புரதச் சத்து அடங்கியிருக்கிறது. வேறு எந்தத் தாவர உணவிலும் இவ்வளவு அதிகமான புரதம் கிடையாது. உணவுக் காளானுக்கு நோய்களைத் தடுக்கும் சக்தி உண்டு. இதில் மாவுப் பொருள் இல்லை. நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இது ஒரு சிறந்த உணவு.




ரஷ்யாவின் கிழக்குப் பகுதிக் காட்டில் 1986-ஆம் ஆண்டு ஓர் உணவுக் காளான் கிடைத்தது. 55 கிலோ எடை இருந்த அந்தக்காளான் பல குடும்பங்களுக்கு உணவாகப் பயன்பட்டது. அதுதான் உலகிலேயே மிகப் பெரிய காளான்!



ரொட்டியை மிருதுவாக ஆக்குவது ஈஸ்ட் என்னும் பூஞ்சைக் காளான். மாவுடன் இந்த ஈஸ்ட்டைச் சேர்த்து ரொட்டி தயாரிக்கும் போது, கார்போஹைடிரேட் சிதைவடைந்து, கார்பன் டை ஆக்ஸைடும் ஆல்கஹாலும் உண்டாகின்றன. கார்பன் டை ஆக்ஸைடு வெளியேறும் போது ரொட்டி பஞ்சுபோல் மிருதுவாகிறது.



காளான்களால் பலதீங்குகளும் நேர்கின்றன. ஒட்டுண்ணிகளான பூஞ்சைக் காளான்கள், 1845-இல் அயர்லாந்தில் உருளைக் கிழங்குகளைத் தாக்கி, பெரும் பஞ்சத்தை ஏற்படுத்திவிட்டன. காளான்களின் தாக்குதலால், 1942-இல், வங்காளத்தில் கோதுமை விளைச்சல் பாதிக்கப்பட்டு கடும் பஞ்சம் வந்தது.





தலைமுடி சொட்டை விழுவதற்கு 'மிடாய்ரோ ஸ்போம் ஓவெல்' என்னும் பூஞ்சைக் காளானும் ஒரு காரணம். சிலவகைப் பூஞ்சைக் காளான்களால் 'படர்தாமரை' போன்ற தோல்நோய்கள் வருகின்றன.



மரணக் குல்லாய் என்னும் பெயருடைய காளான்தான் கடுமையான நச்சுத் தன்மை வாய்ந்தது. இதை மனிதன் சாப்பிட்டால் உயிருக்கு ஆபத்து. ஆனால், இது பிராணிகளுக்கு நஞ்சாவதில்லை!

காளான்களுக்கு அவற்றின் தோற்றத்தை வைத்து விநோதமான பெயர்களும் உண்டு!



உரோமப் பிடரி.



நாடோடி



ஆரஞ்சுப் பால்கிண்ணம்

வெட்டுக் கிளிக்குக் காதுஎங்கே?

ரேவதி

"**த**த்தித் தத்திக் குதித்திடும்
தத்துக் கிளியே வாவா!
தத்திச் செல்லும் வித்தையை
தந்த துணக்கு யார் யார்?

வெறும் பாட்டு மட்டும்தானா? இல்லை. பாட்டோடு செல்வி ஆடிக் கொண்டும் இருந்தாள்.

செல்விக்கு எதிரே ஜன்னல் விளிம்பில் ஒரு பழைய பிளாஸ்டிக் டீ வடிகட்டி கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தது. அதற்குள் ஒரு பச்சை வண்ணத் தத்துக் கிளி தத்தித் தத்திப் பறந்து விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தது!


குளிக்கக் கிளம்பிக் கொண்டிருந்த அப்பா செல்வியின் பாட்டால் கவரப்பட்டு உள்ளே வந்தார்.

"எதைப் பார்த்தும்மா பாடி ஆடிக்கிட்டிருக்கே? இங்கே எதையும் காணோமே?"

"தத்துக் கிளிப்பா. இதோ ஜன்னல் விளிம்பில், டீ வடிகட்டிக்குள்ளே பாருங்க. தோட்டத்துல பார்த்தேன். அரைமணி நேரம் போராடி, கடைசியா புடிச்சேன்" என்று பெருமைப்பட்டுக் கொண்டாள் செல்வி.

அப்பா கவனமாக டீ வடிகட்டியைப் பார்த்தார். தத்துக்கிளி தொடர்ந்து விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது.

"பாவம்மா. நீ இத்தனை அழகா பாடி ஆடறே! இதைக்



கேட்க இந்தத் தத்துக் கிளியால முடியாதே! இதுக்குக் காது இல்லேன்னு எங்க அப்பாவும் தாத்தாவும் சொல்லியிருக்காங்க'' என்றார் அப்பா.

''உங்க தாத்தா காலம் அறிவியல் வளராத காலம்பா. தத்துக் கிளிக்கு முகத்தில் காதுகள் இல்லைங்கறவரை உண்மை. ஆனா, அதுக்குக் காதுகள் உண்டு. நீண்ட உணர்கொம்பு உடைய வகையா இருந்தால் முன்பக்கக் கால்களின் நுனியில் காதுகள் இருக்கும். குட்டை உணர்கொம்புடையவையாக இருந்தால் வயிற்றில் காதுகள் இருக்கும்'' என்று கூறிக் கொண்டே வந்தான் பாபு.

''அப்படியா!'' என்று அதிசயித்தார் அப்பா.

''அண்ணா, உங்ககிட்டே இருக்கிற பறவை விவர நூலில், கிளிகள் பிரிவில் இந்தத் தத்துக் கிளியை பற்றிப் போட விட்டு விட்டாங்க போல இருக்கே! நான் துருவித் துருவிப் பார்த்தேன். தத்துக் கிளியை அதில் சேர்க்கவே இல்லை!'' என்று புகார் செய்தாள் செல்வி.

''காரணமாகத்தான் சேர்க்காம விட்டிருக்காங்க செல்வி. ஏன்னா, உன்னோட தத்துக்கிளி, கிளி வகையைச் சேர்ந்ததே இல்லே. தத்தித் தத்திக் குதிப்பதால் தத்துக் கிளின்னு இங்க பேர் வைச்சுட்டாங்க. அதேமாதிரி, பயிர் பச்சைகளை வெட்டின மாதிரித் துருவித் தின்பதால் வெட்டுக் கிளின்னுட்டாங்க. இதுங்க உண்மையில் கரப்பு வகையைச் சேர்ந்தவைங்க.''

செல்வியின் முகத்தில் ஏமாற்றத்தின் சாயல் படர்ந்தது.

''அப்படின்னா, வெட்டுக் கிளிங்க பாடும்னு சொல்லுவாங்களே. அதுவும் பொய்தானா?'' என்று கேட்டார் அப்பா.

''இல்லைப்பா. நீண்ட உணர்கொம்பு உடையவை முன்பக்கச் சிறகுகளை ஒன்றோடு ஒன்று தேய்க்கும். மெல்லிய காற்றாடிக் காகிதத்தை உதட்டில் வைத்துக் கொண்டு ஊதினால் ஓர் அதிர்வு சத்தம் கேட்குமே. அதைப் போன்ற ஓர் சத்தம் உண்டாகும். இப்படிச் செய்து சத்தம் உண்டாக்குபவை ஆண் வெட்டுக் கிளிகள் மட்டும்தான். சின்ன உணர்கொம்பு உடையவை, தங்கள் நீண்ட பின்கால்களால் முன்பக்க சிறகுச் சவ்வில் தேய்த்து இதே போன்ற ஒலியை ஏற்படுத்தும். ஆண் பெண் இரண்டுமே இதைச் செய்யும். இதையெல்லாம்தான் நீங்கள் பாட்டு என்கிறீர்கள்'' என்றான் பாபு.

''வெட்டுக் கிளி படையெடுப்புன்னு அடிக்கடி செய்திகளில் போடறாங்களே! உண்மையாகவே அந்த அளவுக்கு வெட்டுக் கிளிகள் தாக்கக் கூடியவைதானா?'' என்று கேட்டார் அப்பா.

''நாம்ப தமிழ்நாட்டில் இருக்கிறோம். அதிலும் நகரத்தில் இருக்கிறோம். இதைப் பற்றி அறியும் வாய்ப்பு இல்லை. ஆனால், கிராமங் களில் போய், பயிர்த் தொழில் செய்ப வர்களைக் கேட்டுப் பாருங்கள். வெட் டுக் கிளிகள் பயிர்களை எந்த அளவுக்கு அழிக்கின்றன என்பதை அவர்கள் விளக்குவார்கள். ஆனால், இதெல்லாம் கூட வெறும் தாக்குதல்தான். உண்மையான படையெடுப்பு என்பது ஆப்பிரிக்க நாடுகளில் தான் நடக்கிறது. வெட்டுக் கிளிகள் ஒவ்வொன்றும் நாலு அங்குல நீளம் இருக்கும். கோடிக்கணக்கில் இவை ஒன்று கூடிப் பறக்க ஆரம்பிக்கும். இதைத்தான் படையெடுப்பு என்கிறார்கள்.''

''அவை ஏன் பறந்து படையெடுக்க வேண்டும் அண்ணா? இருக்கும் இடத்திலேயே இருக்கக் கூடாதா?'' என்று கேட்டாள் செல்வி.

''இவை பறந்து படையெடுப்பதற்குக் காரணமே உணவுப் பிரச்னைதான். வெட்டுக் கிளிகள் அகோரப் பசி கொண்டவை. ஒவ்வொரு நாளும் குறைந்த அளவு தங்கள் உடல் எடை அளவாவது இவை தாவர உணவு உண்பவை. கோடிக் கணக்கான வெட்டுக் கிளிகள் உற்பத்தியாகும் இடத்தில் இவைகளுக்கு எத்தனை நாட்கள் உணவு கிடைக்கும்? நான்கு இலட்சம் மனிதர்கள் ஓர் ஆண்டுக்கு உண்ணும் உணவை, பத்து லட்சம் கொண்ட வெட்டுக் கிளிக் கூட்டம் ஒரே நாளில் தின்று முடித்து விடுமாம்! எந்த இடத்தில் இவைகளுக்குத் தொடர்ந்து உணவு கிடைக்கும்? அதனால், உணவுப் பஞ்சம் ஏற்படும். உணவைத் தேடி இவை கோடிக் கணக்கில் நாடு விட்டு நாடு, கண்டம் விட்டுக் கண்டம் பறந்து போகும். கடலைக் கூடக் கடந்து போகும்! இவை பறக்கும்

போது சூரியனை மறைத்து விடும்! அண்மையில் இவை தாங்கனியாவைத் தாக்கிய போது இவற்றின் வேகம் மணிக்கு ஆறு மைல். இந்தத் தாக்குதலில் 1000 கோடி வெட்டுக் கிளிகள் இருந்தன. அடையடையாகப் பறந்த போது இவற்றின் கனம் பத்து அடி! வானம் மூடி விட்டது. மேகக் கூட்டத்தைப் போல் இவை நகர்ந்தன. ஒரு இடத்தை இந்த வெட்டுக் கிளிக் கூட்டம் கடந்து செல்ல 9 மணி நேரம் ஆயிற்று! இதிலிருந்தே இதன் பயங்கரத்தை நீங்கள் ஊகிக்கலாம்'' என்றான் பாபு.

''கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லையே!'' என்றாள் செல்வி.

''இவை போகும் இடமெல்லாம் வெறும் வறட்சிதான் மிஞ்சும். பயிர் பச்சை எதுவும் மிச்சம் இருக்காது. மரப்பட்டைகளைக் கூட இவை விட்டு வைக்காது. அதனால்தான் இதைப் படையெடுப்பு என்கிறார்கள்.''

''நம் நாட்டில் வெட்டுக் கிளித் தாக்குதல் உண்டா?''

''படையெடுப்பு என்று பயப்படும் அளவுக்கு இதுவரை இல்லை. ஆனால், பயிர் பச்சைகளுக்கு இவை பயங்கர சேதம்



விளைவிக்கும். பெண் வெட்டுக் கிளிக்கு முட்டையிட வசதியாக வாள் போன்ற வளைந்த ஓர் உறுப்பு இருக்கும். இதைக் கொண்டு, பூமியைத் தோண்டி ஐம்பது முதல் நூறு வரை முட்டையிட்டுக் கோழை போன்ற திரவத்தால் மூடி விடும். இரண்டு வாரங்களுக்குள் முட்டை பொரிந்து சிறகு இல்லாத (NYMPH) குஞ்சுகள் வெளிவரும். இவை பட்டைகளைத் தின்று தின்று இரண்டு மாதங்களுக்குள் ஆறு முறை தோலுரிக்கும். கடைசியாகத் தோலுரியும் போது பெரிய சிறகுகள் இருக்கும்'' என்றான் பாபு.

''இப்போ என்னுடைய இந்தத் தத்துக் கிளியை நான் பிடித்திருக்காவிட்டால் இது வளர்ந்து நம் தோட்டத்தையே பாழ் செய்திருக்குமா?'' என்று ஆவலுடன் கேட்டாள் செல்வி.

''உன்னுடைய வெட்டுக் கிளி வழி தப்பி வந்து விட்ட ஒன்று. இது தத்தியிருக்கும் போது தவிட்டுக் குருவி ஏதாவது கொத்திக் கொண்டு வந்து இங்கே போட்டிருக்கும். தனித்தனியாக உள்ள வெட்டுக் கிளிகளால் ஆபத்து இல்லை. அவை பெருகி விடாமல், ஊர்வனவும் பெரிய சிறிய பறவைகளும் பார்த்துக் கொள்ளும். ஆனால், பயிர் பச்சை உள்ள இடங்களில் இவை முட்டையிடத் தொடங்கி விட்டால் ஆபத்துதான். பயிர்களில் முளைகட்டும் நேரத்தில் இவை பயிரை உண்டு, மொட்டையடித்து விடும். பிறகு உணவுக்கு வேறு இடம் தேடும். அதனால்தான் ஒரு வயலில் இவை முட்டையிட ஆரம்பித்து விட்டால், உடனே பூச்சி மருந்து தெளித்து அழித்து விடுகிறார்கள்'' என்றான் பாபு.

''இந்தியாவில் வெட்டுக் கிளிகள் கிடையாதா?''

''கண்டிப்பாக உண்டு. ஒரு காலத்தில் இவற்றின் தாக்குதல் பயங்கரமாக இருந்தது. தார்பாலைவனம் கூட இந்த வெட்டுக் கிளிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி இரையாகி இப்படிப் பாலைவனமானதே என்ற கருத்தும் உண்டு. இந்தியாவில் இன்னும் கூட வெட்டுக் கிளி படையெடுப்பு தார்பாலைவனத்தில் இருந்துதான் தொடங்குகிறது. எகிப்தியர்களின் கல் வெட்டுகளில் கூட இவை காணப்படுகின்றன. பைபிளில் வெட்டுக் கிளியின் படையெடுப்புகளைப் பற்றிய குறிப்பு இருக்கிறது. அறிவியல் உலகுக்கு இன்றும் இது சவாலாகவே உள்ளது. இவை பறந்து வரும் போது வானத்தில் சூரியனை மறைத்துவிடும். தாங்கனியா போன்ற ஆப்பிரிக்க நாடுகள்தான் இவற்றின் தாக்குதலுக்கு அடிக்கடி இரையாகுபவை. ஏராளமான பொருட்செலவில் ஐ.நா. சபையின் சார்பில் வெட்டுக் கிளி ஆராய்ச்சி மையம் ஒன்று லண்டனில் செயல்படுகிறது. என்ன முயன்றும் இந்த வெட்டுக்கிளி அபாயத்தை முழுதுமாக நீக்க முடியவில்லை. எதிர்காலத்தில் அறிவியல் வளர்ச்சியால் இதற்கு முழு வெற்றி கிடைக்கலாம்'' என்றான் பாபு.

அறிவியல் உண்மைகள் :

★ வெட்டுக் கிளிகளை குட்டை உணர்கொம்பு உடையவை, நீண்ட உணர்கொம்பு உடையவை எனப் பிரிக்கிறார்கள்.

★ நீண்ட உணர்கொம்பு உடையவைகளுக்கு, முன்பக்கக் கால்களின் நுனியில் காதுகள் இருக்கும். குட்டை உணர்கொம்புடையவைகளுக்கு வயிற்றில் காதுகள் இருக்கும்.

★ நீண்ட உணர்கொம்பு உடையவைகளில் ஆண் மட்டும் முன்பக்கச் சிறகுகளை ஒன்றுக்கொன்று தேய்த்து ஒலியுண்டாக்கும். குட்டை உணர்கொம்புடையவைகளில் ஆண், பெண் இரண்டுமே நீண்ட பின்பக்கக் கால்களைக் கொண்டு முன்பக்க சவ்வுச் சிறகில் தேய்த்து ஒலியுண்டாக்கும்.

★ கனமான தாடைகள், மூன்று ஜோடிக் கால்கள், இரண்டு ஜோடி சிறகுகள் உண்டு.


★ இரண்டு மாதங்களில் ஆறு முறை தோலுரித்துப் பெரிதாகும்.

★ கரப்பு வம்சம்.

★ குதிக்க உதவுபவை நீண்ட பின்பக்கக் கால்களே. ஒரு குதியில் அதிக அளவு 3 மீட்டர் தாவக்கூடியவை.

★ மனித குலத்துக்கு சவாலாக உள்ள உயிரினம்.

உங்கள் நூலகம்



டால்பின் மீன்களைப் பற்றிய வியப்புக்குரிய விஷயங்கள், மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, பக். 132, ரூ. 18.50, மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி.நகர்., சென்னை - 17.

மனிதனுக்கு நண்பனாக விளங்கி, சர்க்கஸ் வேலைகளையும் காட்டி வரும் டால்பின் மீன்களைப் பற்றிய ஆதிகாலத் தகவல்கள், அறிவியல் தகவல்கள் எல்லாம் நன்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. வியக்க வைக்கும் பல செய்திகள் இதில் உள்ளன. உதாரணம் : டால்பின் மீன்கள் தங்களுக்குள் சீட்டியடித்துத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும்! சாதாரண காலங்களில் ஆண் மீன்கள் தனியாகவும் பெண் மீன்கள் தனியாகவும் கூட்டமாக நீந்திச் செல்லும். இதில் உள்ள அறிவியல் தகவல்களுக்காகவே இந்த நூலை ஒருமுறை படித்துப் பார்க்கலாம்.

விளையாட்டு விநாடி - வினா, மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, பக். 240 ரூ 33/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி. நகர்., சென்னை - 17.

விநாடி வினாக்கள் பகுதி வெறும் பொழுதுபோக்காக மட்டுமின்றி அறி வியல் வளர்ச்சிக்கும் பயன்படுகிறது என்ற உண்மை பரவலாக உணரப்பட்டு வரும் காலம் இது. விழாக்களில் கூட இப்பொழுதெல்லாம் விநாடி-வினா நிகழ்ச்சிகள் தவறாது இடம்பெறுகின்றன. இவைகளில் விளையாட்டுக் குறிப்புகளுக்கு பெருமளவுக்கு வரவேற்பும் ஆர்வமும் இருந்தாலும், இவை பற்றிய புத்தகங்கள் குறிப்புகள் எல்லாம் ஆங்கிலத்திலேயே உள்ளன. இந்தக் குறையை இப் புத்தகம் போக்கி வைக்கிறது. விளையாட்டு ரசிகர்களுக்கும், விநாடி வினா நடத்துபவர்களுக்கும் நன்கு பயன்படும் அருமையான புத்தகம்.


ஒரு மரத்தின் தோழர்கள், பூதலூர்முத்து, பக். 84 ரூ 10/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர்., சென்னை - 17.

சிறுவர் இலக்கியத்தில் தனியான ஓர் இடத்தைக் கைப்பற்றியுள்ள இந்த ஆசிரியர், கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். இவரது மணியான சிறுகதைகளின் தொகுப்பு இந்தப் புத்தகம். ஒவ்வொன்றும் ஒரு தலைசிறந்த பண்பை வலியுறுத்துகின்றது. கோவில்களில் இறைவன் சன்னிதிக்கு முன்னால், குழல்விளக்கு நன்கொடை செய்பவர்கள், இதிலுள்ள 'வெளிச்சம்' கதையைப் படித்தால், இனிமேல் ஒளியையே மறைக்கும் அளவுக்குத் தங்கள் பெயரை எழுதி வைக்க மாட்டார்கள்.

பண்ணை வீட்டு விருந்து - ராஜலட்சுமி சுப்ரமணியம், பக். 100, ரூ 14/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளன் தெரு, தி. நகர்., சென்னை - 17.

பண்ணையார் வீட்டு விருந்துக்காகத் தங்களையே மாடாகத் தேய்த்துக் கொள்ளும் முனியன் குடும்பம், அந்த விருந்துக்காக ஏங்கும் முனியனின் மகன் செல்லான். கிராமத்துக் குழந்தைகளின் கல்விக் கண்களைத் திறக்கத் துடிக்கும் சிறுமி பொன்னி இவர்களை வைத்து சுவையான நாடக விருந்து ஒன்று இந்தப் புத்தகத்தில் படைக்கப்பட்டுள்ளது. சிறுவர் இலக்கியம் தழைக்க வழிவகுத்த கொடைவள்ளல் அமரர் ஏ.வி.எம். அறக்கட்டளைப் பரிசின் தங்கப் பதக்கத்தைப் பெற்ற நாடகம் இது என்பதே இதன் தரத்தை உயர்த்தப் போதுமானது. சிறுவர் இலக்கியத்தை வளர்த்து வரும் வானதி போன்ற முன்னேறப் பதிப்பகங்கள் கூட இப்பொழு

உங்கள் நூலகம் பகுதியில் சிறுவர்க்கான நூல்களும், பொது - அறிவியல் நூல்களும் மட்டுமே மதிப்புரை செய்யப்படும். மற்ற நூல்களை அனுப்ப வேண்டாம். இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 97 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கட்டணம் இல்லை.



எனக்கா ஆபத்து?

முயல் குட்டி ஒன்று காட்டில் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. அந்த வழியே வந்த ஆமையைப் பார்க்கப் பார்க்க அதற்கு வேடிக்கையாக இருந்தது. ஆமை மெல்ல ஆடி அசைந்து நகர்ந்து வந்து கொண்டிருந்தது.

முயல் ஆமையின் ஓட்டின் மேல் குதித்து விளையாடியது. ஆமை, முயல் குட்டியின் வேடிக்கையை ரசித்தபடி, ''நண்பனே நன்றாக ஓடி விளையாடு. அதுதான் உன் உடல்நலத்திற்கு நல்லது'' என்றது.

''முயல் குட்டிக்குச் சிரிப்பு வந்து விட்டது. விளையாட்டைப் பற்றி நீ பேசுகிறாயா! ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நகர்ந்து போவதே உனக்குப் பெரிய காரியமாக இருக்கிறது? நீ போய் விளையாட்டைப் பற்றி எனக்கு அறிவுறுத்துகிறாயே?''

''நண்பனே, துள்ளித் துள்ளி ஓடி விளையாட வேண்டியவன் நீ. அது முயல் இனத்தின் இயல்பு. நீ விளையாடத்தான் வேண்டும். அப்போதுதான் ஆபத்து வரும் போது விநாடியில் ஓடித் தப்பிக்க முடியும். எனக்கு அந்த அவசியம் இல்லை'' என்றது ஆமை பணிவாக.

''ஆபத்தா? எனக்கா! ஹாஹ்ஹா'' என்று பெரிதாகச் சிரித்தது முயல்.

''என்னை யாரும் பிடிக்க முடியாது, அத்தனை வேகமாக நான் ஓடுவேன்'' என்று கர்வமாகப் பேசியது.

ஆமைக்கு, முயலின் கர்வப் பேச்சு பிடிக்கவில்லை. அதோடு முயல் குட்டி ஆமையின் முதுகின் மீது உட்கார்ந்து அதன் தலையைத் தட்டி சீண்டியது. ஆமைக்குக் கோபம் வந்தது. ஆனால் தன்னால் முயல் குட்டியை ஒன்றும் செய்ய முடியாது என்பதை நினைத்து மனத்திற்குள் திட்டியது. ஆமையின் இயலாமை முயல் குட்டிக்கு மேலும் உற்சாகத்தைத் தரவே அது ஆமையை இன்னும் சீண்டியது.

தூரத்திலிருந்து வெகுவேகமாக ஓடி வந்து ஆமையின் தலையில் 'பொத்' தென்று குதித்தது. அதிர்ச்சியால் ஆமை வலிதாங்காது துடித்தது.

''முயல் குட்டியே விளையாட்டு போதும். எனக்கு வலிக்கிறது. தயவு செய்து சும்மா இரு,'' என்று கெஞ்சிக் கேட்டது.

முயல் குட்டி அலட்சியமாகக் குதிப்பதை நிறுத்தவில்லை.

''உனக்குச் சமமானவர்களுடன் மோதுவதுதான் வீரம். எளியவர்களோடு மோதுவது கோழைத்தனம்'' என்றது ஆமை.


''இவ்வளவு பெரிய உடம்பில் இத்துணூண்டுக்கு சின்னத் தலை இருக்கே உனக்கு! அதில் என்ன மூளை இருந்துடப் போகுது? எனக்குப் போய் நீ அறிவுரை சொல்றியா?'' என்று கேட்டு விட்டு முயல் மறுபடி ஆமையின் மேல் குதித்தது.

அப்போது திடீரென்று ஆமை தலை கால் எல்லாவற்றையும் உள்ளே வாங்கிக் கொண்டது. அது தனக்குப் பயந்துதான் பதுங்கி நின்றது என்று முதலில் நினைத்த முயல், அங்கே ஓர் ஓநாய் நின்று கொண்டிருப்பதைப் பார்த்ததும், கதிகலங்கிப் போனது. முயலைச் சீண்டி வருத்தும் மும்முரத்தில் அது ஓநாய் வந்ததைக் கவனிக்க விட்டு விட்டது! ஓநாய் தன்னைக் குறிவைத்துப் பாய்ந்து வருவதைக் கண்டதும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓட்டமாய் ஓடியது!

ஓநாயிடமிருந்து தப்பிக்க மிக வேகமாக ஓடவும் பதுங்கவும் வேண்டியிருந்தது. ஏற்கெனவே இரண்டு முறை அது ஓநாயிடம் மாட்டியிருந்ததால், காற்றை விட வேகமாக ஓடியது. நல்லவேளை, தப்பி விட்டது. ஆனால் உடலில் காயங்களுடன்தான் திரும்ப முடிந்தது! அசந்து போய் மெதுவாகத் தன் இடத்திற்கு வந்தது. அங்கே ஆமை நிதானமாக இன்னும் உலவிக் கொண்டிருந்தது.

முயல் குட்டி ஆமையைப் பொறாமையுடன் பார்த்தது. நிதானமானவர்களிடம் தான் அறிவு அதிகமாக இருக்கும். ஆண்டவன் அதன் அதன் தேவையை உணர்ந்துதான் உடலில் வசதியைக் கொடுத்திருக்கிறான் என்பது இப் போது புரிந்தது முயலுக்கு. ஆமையிடம் சென்று தன் தவறுக்கு மன்னிக்கும்படி வேண்டியது.

- நிஷா.



புரம் நா. பெஞ்சி, காங்கேயம் மு. சிவராஜ், மாத்தூர் வெ. சடகோபன், மேலபாடி என். ராஜலட்சுமி, அம்மனூர் கோ. பாலசுப்ரமணியன், சங்கராபுரம் ஆ. முருகன், பட்டீச்சுவரம் பி. கல்யாண சுந்தரம், திருவாரூர் கமல தியாகராஜன், மற்றும் பலர்.

(கட்டுரையின் முகப்பிலேயே ஆசிரியரின் முடிவு தரப்பட்டுள்ளதே.)

★ ''கார்டூனுக்கு'' கட்டுரையில் கல்கி கோபால கிருஷ்ணன் என்பதற்கு கல்வி கோபால கிருஷ்ணன் என்று வெளியிட்டுள்ளீர்களே! - அம்பத்தூர் மு. வரதன், போரூர் கிரிஜா, மற்றும் பலர்.

(சரியாகத்தான் வெளியிட்டுள்ளோம். 'கல்கி' அல்ல 'கல்வி' தான்.)

அலாரம் இல்லையா?

★ 'முதலில் நாம் இந்தியர்' - பெருமைப்பட வைக்கும் நாடகம். சாத்தூர் பரிசுத்தம், திண்டிவனம் கு. வேம்பு, சிதம்பரம், வெ. முகைதீன், நெய்விபாளையம் நா. பூபதி நண்பர்கள், தஞ்சை ஆர். புனிதா, நெய்வேலி பா. பிரவீண், வே. மாதேபள்ளி கே. ஜெ. ஹரிபாபு நண்பர்கள் மற்றும் பலர்.

★ அட்டைப்படம் அசத்தி விட்டது. திருப்பவே மனம் வரவில்லை! திருமங்கலம் வெ. கப்பு, அண்ணாமலைநகர் து. பார்த்தசாரதி, சித்தூர் ம. கணேசன், சிவபுரி ஆர். கனகா, தாராபுரம் கு. வேங்கடேசன், திருவொற்றியூர் ப. கணேசராகவன், மற்றும் பலர்.

★ கார்டூனுக்கு வயது நூறா, நூற்றி ஒன்பதா? என்ன சார் பண்ணுகிறீர்கள். அலாரம் இல்லையா? பாபநாசம் சி. சிவமணி, சென்னை 94 நா. சுரேஷ் குமார், பட்டீஸ்வரம் பி. சந்தர், மற்றும் பலர்.

★ மங்கையர் மலர், கல்கி இரண்டிலும் இலவச இணைப்பு அடிக்கடி வெளியிடுகிறீர்கள். கோகுலத்திற்கு மட்டும் கிடையாதா? - தென்னமாரி கூ. சிவராஜா, மற்றும் பலர்.

★ பிருந்தாவனக் கவியரங்கை ஒரு பக்கமாக்கி விட்டீர்களே! அநியாயம் சார். - மதனபள்ளி மு. பலராமன், ஸ்வர்ணகுப்பம் கு. சந்திரமணி, நாகை. வெ. அன்சாரி, பள்ளிபாளையம் தெ. அடைக்கலம், விவேகானந்தபுரம் மு. பரந்தாமன், சேலம் எம். கே. வேங்கவேல், மற்றும் பலர்.

★ 'டீ.வி நண்பனா? எதிரியா?' இன்று பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே உள்ள உரசல்களை விண்டு விண்டு வைத்தது. ஆமாம்! உங்கள் முடிவு தரப்படவில்லையே? - கணபதிபுரம் து. சகுந்தலா, திருக்கோயிலூர் ராதா மணி, முசிறி பெ. கொண்டய்யா, சிவகாசி சி. மகிபாலன், எட்டையா

★ செல்ல கணபதியின் பாடல் அவர் குழந்தைக் கவிஞரின் சீடர் என்பதை முத்திரை குத்துகிறது. - குடந்தை எஸ். சாரதி, மேட்டுப்பாளையம் கொ. சாரங்கபாணி, அரக்கோணம் எம். கோபால கிருஷ்ணன், மற்றும் பலர்.

★ 'புயா' வுக்கு 'ரெட்கார்பெட்' விரிக்கிறோம். ஆரம்பமே ஜோர்! - துறையூர் ச. முத்துவேல், விருத்தாசலம், கா. பார்த்தசாரதி, எலவனாசர்கோட்டை எம். வேல் முருகன், பெரம்பலூர் எஸ். இலக்கிய பித்தன், நண்பர்கள், பஞ்செட்டி எஸ். சுரேஷ் பாபு, மற்றும் பலர்.

★ பேரழகி பத்மினி படக்கதை, திரைப்படம் பார்ப்பது போல் இருந்தது! ஆசிரியர், ஓவியர் பாராட்டப்பட வேண்டியவர்கள். - நெல்லிகுப்பம் க. முத்தையா, கொத்தமங்கலம் வெ. அழகப்பன், காரைக்குடி கா. வெற்றிவேலன், குடந்தை மு. அபயம், தருமபுரி எம். சோமசுந்தரம், மற்றும் பலர்.

★ பூனைக்குக் கூட இரங்கல் கூட்டம் நடத்தியவர் இன்று இல்லையே என்ற ஏக்கம் என்னவோ செய்கிறது! - பூபதிநகர் எம். மாரியப்பா, வில்லிவாக்கம் மு. கற்பகவல்லி, பெரம்பூர் து. சிவக்கொழுந்து, செங்குன்றம் வெ. அரிகிருஷ்ணன், திருப்பட்டீச்சுரம் பி. முரளி, பூலாங்குடியிருப்பு செ. ஜின்னா, மற்றும் பலர்.

★ வரவர மற்ற பத்திரிகைகளில் வந்த ஜோக்குகளையே போடுகிறீர்களே சார்! கொஞ்சம் விழித்துக் கொள்ளுங்கள்! - மருதாயபுரம் க. வேம்புலி, கருங்கல் பாளையம் கா. முத்துமாணிக்கம், ஈரோடு கா. புவனா, கொமரபாளையம் எஸ். தங்கராஜ், உள்ளகரம் பி. ரோகிணி, மற்றும் பலர்.

★ மருத்துவத்தில் கடல் பிராணிகள் - அறிவியல் பாயசம் சார்! - குன்றத்தூர் கா. மணிமாறன், நடேசபுரம் கு. மாணிக்கம், வடமாதிமங்கலம் வே. பூங்குன்றன் நண்பர்கள், மற்றும் பலர்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி. ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.

காரை ஓட்டப் போகிறோம்!
கவனம் கவனம் ஓடுங்க!



REGISTERED NO. TN MS (S) 261
Registered as Newspaper in Srilanka